156

156

திரு. ஜே. எல். அனந்தய்யர்,
செவ்வாய்பேட்டை,
சேலம். 1/2

"கைமுறை வைத்திய அட்டவணை கட்டு-6"
அல்லது
"பிரம்ம முனி வைத்திய சூத்திரம்".

Sir,
Palm leaf returned to [illegible] on 28.12.63
31.1.64

Completed Verification
Total 37 typed pages
[illegible]
Saraswathi
2/11/64

தேதி: 4.1.1964.
ஓலைச் சுவடியின் பெயர்: "கை முறை வைத்திய அட்டவணை கட்டு-6."
பிரம்ம முனி வைத்திய சூத்திரம்.
உரிமையாளரின் பெயர்: ஜே எல். அனந்தய்யர்.
இடம்: ~~செவ்வாய்பேட்டை~~. சேலம். இராசிபுரம்.

***

1. சீரருள்ள சோதி சின்மயமான சோதி சூரலிந்தானைப் போற்றி-----கள்
பாதம் வணங்கி----யவயித்திய நூலைக் காரணமாகப் பாடக் கணபதி காப்புத் தானே.

2. தானென்ற வயித்தியத்தில் ரெண்டு பத்து நூறு சாத்திரனே யிந்தச் சூக்சி பத்து நூறு
தேனுன யிதைக் சூக்சி முத்தாறு பத்தி திரட்டியே கருவெல்லாந் திறந்து சொன்னேன்
பாருன மானிடர் கருவெல்லாத்*திறந்*கள் பிளைக்க வேண்டி பரிபாஷை யில்லாமல் பாடினேனே

3. பாடியதோர் ரென்னூலைப் பதினென் பேரும் பார்த்திட்டு மனம் மகிழ்ந்து சித்த ரெல்லாம்
பாடியதோர் வாதமொடு வயித்தியமும் நன்றாய் பாடினர் கருக் குருவும் வெளியாய்ச் சொல்லி
தேடியே சித்தரெல்லா மெச்சிக் கொண்டு செப்பினர் பிரமமுனி யாகையாலே
ஆடியதோர் கருவெல்லாம் வெட்ட வெளியாக உரைத்திட்டா ரென்று சித்த ரொளித் திட்டாரே.

4. ஒளித்திட்ட சாஸ்திரத்தை வாங்கி நாமும் உலகிலுள்ளோர் மயங்காமல் வெளியில் போட்டேன்
அளித்திட்ட களிம்பருக்கு யின்னா லியார் ஆகாத சீஷருக்கு மின்னா லியார்
களித்திட்டு மன்றிலே கபடில்லாமல் கசட்ற சீஷருக்குக் கை முறையோ காட்டி
பளித்திட்டுப் பேசாமல் சாஸ்திரத்தைப் பார்த்துப் பதருதே கை முறையுஞ் செய்முறையும் பாரே

5. முறையோடே பார்த்தாக் காலெல்லாம் சித்தி முறை தப்பாய்ப் பார்த்திடிலோ மோசம் மோசம்
முறையோடே செய்தவற்கு யென்னால் பாரு மொளிந்திட்டேன் மருந்தொன்றில் பல பிணியுந் தீர
முறையோடே லேகியங்கள் தயிலங்கள் கற்கம் மெழுகோடு களங்கு மாத்திரை செந்தூரம்
நிறையான நால---கட் பாஷாணங்கள் நீத்தினமு மூருக் குளமும் நிறைத்திட்டேனே.

6. நிறைத்திட்டார் தட்சணாமூர்த்தி பாடல். நிகரில்லா வயித்தியத்தில் ரெண்டு லெட்சம்
உரைத்திட்ட---செந்---முன்னூறு சொன்னார் உத்தமனே வாதமுதல் வயித்தியமுந் தே
யறைந்திட்டார் வயித்தியத்தில நூறு அப்பனே வெளி திறந்து சொல்லி விட்டார்
கரந்திட்டார் வயித்தியத்துக் கென்னாலப்பா கண்ணாடி முகம் பார்த்தாற் போலே கானே.

7. காணப்பா நோயாளி தாகை பார்க்க கண் பார்த்து முகம் பார்த்துக் கையைப் பார்த்து
தேன் பார்த்து என்னாலை யாய்ந்து பாரு தேகத்திலிரு பத்தீராயிரமாம் நரம்பு
அணப்பா நரம்பெல்லாம் நாடி யோடும் உத்தமனே உயிர் நிலையை யணிப் பார்த்தே
தேனென்ற வால்மீகர் நாடி சூஸ்திரம் தெளிவாக எழுத்திரண்டும் பாரே.

8. பாரே நீ முன்னால் தாலுயிரத்தில் பாடினே புசலை யிருடித் தோணப்
பாரே நீ கொங்கணர் தத்துவ நூல் பாரு பாங்கான சட்டை முனி நூலைப் பாரு
பாரே நீ திருமூலராறு நூறு பார்த்திட்டால் பல நூறு மதிலே தோயும்
ஆரே நீ நானென்ற ஆணவத்தை நீக்கி ஓங்காரங் கோபத்தை யடித்துத் தள்ளே.

9. தள்ளுவது பொய்யோடு கொலை களவு சண்டாளங் இருந்து ரோகம் செய்யத் தள்ளு
விள்ளாதே வெகுளி விட்டுப் போதம் பாரு வேதாந்த சற்குருவை நித்தம் பூசி
தள்ளாதே வயித்தியந் தானே தர்ம வித்தை சார்வாக ஒர் கருவை ஒளித்தார் சித்தர்
தள்ளாதே வாதமென்ன வயித்தியந்தான் என்னச் சொல்லாதே முப்பூவின் குருவதாமே

10. குருவென்ன உள் சாமம் உவர்ப்பு வென்று கூறினர் பூனீறு முப்பூ வென்றும்
தருவென்ன ஆகாசப் பருத்தி யென்றும் சந்திர வேடிந்து வென்றும் சாத்திரர்கள்
பருவமென்ன மார்கழி தையு மாசி பனி பெய்யுங் காலம் போம்
மருவமாகி பொடு வென்ன பூமியுட நாதமாகி பூப்போலே வளர்ந்ததுவும் பூனீறச்சே.

11. பூவான வாதத்துக் காதியாச்சு புகலுறேன் வெள்ளைக் கல் பிரமகெற்பம்
ஆவென்ன பாறையுப்பு மூன்றுஞ் சொல்லு அரகரா முப்பூவா மறிந்து பாரு
தெருவன்ன சவுக்கார வளலை யென்று செப்பினர் கரு மறைப்பாய்ச் சித்தர்தானே.

12. முப்பூவுக் கரு:-

தானென்ற முப்பூவின் கருவைக் கேளு. சாத்திரர் கும்பமுனி பூரணத்தில்
பேனென்ற பூனீரும் வெள்ளைக் கல்லும் சிக விடமுஞ் சுத்தி முறை விளம்பினர் பார்
காவென்ற பங்குனி மாதம் பார்த்தால் காத்தில்லாக் கதிர் போலே வளர்ந்திருக்கும்
பானென்ற மண் படாதெடுத்து வந்து படி நாழி அளந்து ஒரு பாண்டத்திட்டே.

13. யிட்டுமே கல்லுப்பு படிதான் ரெண்டு யிதமான கல்சுண்ணம் படிதான் ரெண்டு
யிட்டுமே அமுரி படி வாரு வாரு யியல்பான நல்லெண்ணெ படி அரைதான் பாரு
அட்டுமே கலக்கி யதைத் தெளிவிறுத்து யடுப்பேத்தி யெரித்து யன்பாய்க் காய்ச்சி
மட்டுமே மறுபடியு மமுரி விட்டு மைந்தனே தெளிவிறுத்துக் காச்சி முன் போலே
பட்டுமே யிப்படியே பத்து முறை காச்சு பாங்கான சவுக்காரக் குருவதாமே.

14. குருவான சவக்காரம் உருண்டை செய்ய கூறுகிறேன் னெருமுட்டைச் சாம்பல் மேலே
மெருவான மெல்லிய சீலை போட்டு விட்டதின் மேல் சவக்காரக் குளம்பு தன்னை
கருவாக உருண்டை செய்து என்னை வைக்க கை முறையைச் சொல்லுகிறேன் ஒரு பாண்டத்தில்
அருவாக நெல்லதனைப் பிசரி வைத்து அதின் மேலே மல்லிகையிலை பரப்பி
குருவான சவுக்காரம் உருண்டையெல்லாம் குறிப்பாக எருவதன் மேல் வைத்துக் கொள்ளே.

15. வைத்துமே மேலுமந்த யிலை பரப்பி மறுபடியும் நெருப்பிட்டுச் சட்டி மூடி
அய்த்துமே யடுப்பேத்தி யெரித்து நன்றாய் அவி கண்ட பதத்திலே எடுத்துக் கொள்ளு.
அய்த்துமே என்னை கக்கிச் சுத்தி பார்த்து ஆகாகா சவுக்கார மென்ன சொல்வேன்
வைத்ததொரு சவுக்கார என்னை வாங்க மாட்டாமல் வாதி கெட்டார் வண்ணார்க் காச்சு
தைத்துமே யிப்படியே கை முறையாய்ச் செய்யில் சவுக்கார வகையிலை யென்ற குருவிதாச்சே.

16. குருவென்ன முப்பூவின் விழுவலையாச்சு கூறிடு மேல் போர்க்கரிந்தால் வாதமாச்சு
திருவென்ன வீரமொடு பூரம் ரெண்டும் சேரும் நீருயர் வென்ற கும்பிட்டுசிபத்
பருவென்ன பச்சையாய் எருமா ருசி பறப்பும் போலே தமரிட்டு சிப்பிக்கு வேலாம்
புருவென்ன பூனீறு கூடன் ரெண்டு பொடி செய்து சிப்பிக்குள் போடு கொஞ்சம்
அருவென்ன சிப்பியெல்லாம் போட்டுப் போட்டு அகண்டதொரு சட்டியிலோ ராரத்தி வைய்யே.

17. வைக்கவே பல பருவன் தண்ணீராகும் வளமர்ன நீருடனே நாதவிந்து
அய்க்கவே சமருகச் சேர்த்துக் கொண்டு அதில் போடு குருவண்டு உரமுஞ் சீதம்
அய்க்கவே குருகுளிவி புழுகு பூரம் ஆரு புள்ளி வண்டினமு உடை சாரகாரம்
செலித்தங்கே வகை வகைக்கு பணவிடை தான் போட்டு தெளிவிருத்துச் சவுக்காரந் தன்னிலாட்டே.

18. ஊட்டியே சவுக்காரங் கல்வத்திட்டு உத்தமனே ஒரு சாமமாட்டி மைபோல்
பாட்டியே வில்லை தட்டி ரவி பார்க்க பரந்து பக்குவமா யஃடோடு பொடித்துக் கீழ் மேல்
நாட்டியே ஒட்டி விட்டு சவுக்காரம் வைத்து நலமாக மேலோடு கொண்டு மூடி
தீட்டியே சீலை செய்து புடத்தைப் போடு சிறப்பாக எடுத்ததனைக் கல்வத்திட்டு
தீட்டியே கமுநீராலரைத்து உலத்தி வில்லை செய்துலத்தி ஒட்டிவிட்டுப் புடத்தைப் போட்டு
பூட்டியே யிப்படித் தான் அய்ந்து தரமப்பா் புட மென்ன பத்தெருவில் போடு போடு
ஆட்டியே கடுக்கார மேற்றக் கேளு அழகான முன்னீராலரைத்திடாயே.

19. அரைத்துமே வில்லை தட்டி ரவியிற் காய்ந்த அந்த சுண்ணங் குகையிலிட்டு மேலே மூடி
நிரைத்துமே சுண்ணம்பு சீலை செய்து நிச்சயமாய்ப் பத்தெருவில் புடத்தைப் போடு
கரைத்துமே அந்த சுண்ணக் குகையிற்குள்ளே கடுங்காரச் சுண்ணமதில் பூசிப் போடு
அரைத்துமே யிப்படியே வில்லை கட்டி அய்ந்து தரம் புடம் போட அதிய சுண்ணம்
கரைத்துமே சவுக்காரம் வளலைத் தெட்டு கை முறையாய்க் கடுங்காரம் சுண்ணமாச்சே.

20. சுண்ணமாம் ஆத்தாளைப் பூசை பண்ணு சொற்பெரிய நாதாக்கள் சாபந் தீரு
சுண்ணத்தால் பாசாணம் அறுபத்து நாலும் சொல்லரிய லவண வகை யிபைத்தஞ்சு
சுண்ணத்தால் நவலோகம் நவரெத்தினங்கள் சொல்லரிய உபரசங்கள் சாத்திரண்டு பற்பம்.
சுண்ணத்தால் சொன்னதொரு சரக்கு வகையெல்லாம் கொடு முன்னே கட்டின முருக்கினமு மாகும்
மென்றைத்த சரக்கெல்லாம் சுண்ணமாகும் மெழுகோடு செந்தூரங் களங்குமாமே.

21. களங்கமாம் நவலோகம் தனித் தனியே நீரும் சுண்ணிமைக்குள் முன் தருசு சுண்ணமாகும்
களங்க மென்ன குதமசு மணி போலாகும் கைக்குள்ளே ரசவாதம் சிக்கிப் போகும்
பளங்கிசையாய் முப்பூவின் சூட்சந் தன்னை பாடினேன் சித்தரெல்லாம் பகைத்திட்டார்கள்
பளங் கதை போல் பேசிடில் வருவதென்ன பார்த்திட்டு டின்முரைத்தால் சித்தியாமே.

22. ஆமப்பா மானிடர்க்கு அடுத்த ரோகம் அறையிறேன் வாதபித்த சிலேற்பனந் தான் மூன்று
நேமப்பா ரதிலெடுத்த மேகஞ்சேரு நிலையாத வாதத்தில் நாலதாச்சு
தாமப்பா பித்தத்திலாற தாச்சு சண்டாள சயத்திலே பதினென்றுச்சு
தாமப்பால் வித்தையிலல் லெடுத்த மேகம் கட்டு பாரிரு வத்தி யொன்று மாச்சே

23. <u>மேக ராசாங்கம்:-</u>

ஆச்சென்ற மேகவகை யிருபதுதான் போக அறைகிறேன் மேக ராசாங்கந் தன்னை
நீச்சென்றல் மிகவல்லவோ உலகுள்ளோர்க்கு நிலையாது மற்றென்று நிசமாகாது
காச்சென்ற மேக ராசாங்கந் தன்னை கண்டவுடன் நோயெல்லா மோடிப் போகும்
சூச்சமென்ற சூட்சத்தில் சூட்சமாகச் சொல்லுகிறேன் மருந்து வகை சொல்வதேகேள்.

24: சொல்லுகேன் விலப்பனையு முத்தக்காசு சுகமான சிவன் வேம்பு தண்ணீர் விட்டான்
நல்லதொரு விலாமிச்சும் வில்லை வேரு நன்னாரி குமரி வேர் அமுக்கிரா வேர்
ஒல்லி நிலையாவரையும் உள்ளாலத்தி ஒரிலைத் தாமரை கரந்தை வெட்டி வேரு
அல்லியொடு தாமரை வளையங் கொட்டி ஆலவிழுது நீர்ப்பிலா அருகம் வேரே.

25. வேரான வல்லாரை சிவதை சங்கு வெண்காக்கை வேர் வீளி கீள்காய் நெல்லி
பேரான நாவலத்தி கரிசாலை காளி பூமிவென் சாறணையும் பூவரசு தோடை
வாகாக நிழலலத்திச் சூரணமே செய்து வடி கட்டி வகைக்கு ரெண்டு பலந்தான் கூட்டே.

26. கூட்டியே பறங்கிப் பட்டை பலந்தானெட்டு கூர் பிரப்பங் கிழங்கது பலந்தான் ரெண்டு
ஆட்டியே ஆவின் பால் சுத்தி செய்து அதட்டி யெடு மத்த நன்றாய் முன் மருந்திற் சேரு
ஊட்டியே அமுர்த சர்க்கரையைக் கேளு உத்தமனே பலம் ரெண்டு ஒக்கச் சேரு
தாட்டிகமாய் வித்து வகை சொல்லக் கேளு தகரை வித்து முன்னை வித்து முருங்கை வித்தே.

27. வித்தான ஆத்திவித்து அகத்தி வித்து வேர்க் கடம்பு நீர் முள்ளி ஆவரையின் வித்து
மகத்தான மாவித்து பூனைக்காலி மருள் மத்தை சடைக் கஞ்சா தேத்தான் வித்து
நத்தான மைக்கொன்னை சரக்கொன்னை யவுரி நாயுருவி சிறுநெருஞ்சி கருவேல் வித்து
முத்தான மாதளையும் மகிழம் வித்து முன்னையொடு கோரம்பை எள்ளுந் தானே.

28. உறுந்தான நெல்லி செம்பை மூங்கில் வித்து உத்தமனே கூவிளத்தின் மலரும் பூவும்
குறுந்தான குரிவித்து எரிகாலன் வித்து கொம்மட்டி மாதளை நார்த்தை எலுமிச்சம் வித்து
நெளிதான தென்னம் பூ பாலக் குறண்டிப் பூவும் நெய் கொட்டாப்பூ வந்தி அல்லி வித்து
தருந்தான முருங்கைப்பூ இலுப்பைப் பூவும் தாமரையின் விரை தவரை பிலவம் பிஞ்சு
ஆுந்தான பகடவரை மரு தோன்றி குன்றில் கூந்தல் பனை புரசு மருக்காரை வித்து
பழுதில்லா வகை வகைக்கு கால் பலமே ஆக்கு பக்குவமா யிடித்து முன் மருந்தில் சேரே

29. சேர்க்கவே பிசின் வகையைச் சொல்லக் கேளு திறமான முள்ளிலவு முருங்கை வேம்பு
காற்க்கவே விளாவோடு கருவேலத்தி கருவாகை கொன்னை மாம்பிசினுடொக்க
யேற்கவே புங்கம் பூந் சீகக்காய்க் கொழுந்து யிதமான வகை வகைக்கு கால் பலமே
சேற்கவே யிடித் தெல்லாம் ஒன்றாய்ச் சேரு திரமாகக் கடைச் சரக்கைச் சொல்லக் கேளே

30. கேளப்பா சாதிக்காய் சாதிபத்திரி கிரும்பேலம் இலவங்கப் பட்டை பத்திரி
ஆளப்பா குங்குமப்பூ கோரோசினை கஸ்தூரி அதிவிடையம் திப்பிலியும் கோஷ்டம் ஏலம்
வாளப்பா அரத்தை சுக்கு அக்கிரகாரம் வால்மிளகு குரோசானி சீரகம் நல்லோமம்
கேளப்பா ~~[illegible]~~ சடாமஞ்சி கல்கநீர் சிறுதேக்கு நாகப்பூ தாளிச பத்திரியே.

31. திரியான காமப்பூ மகரப்பூ மதுரம் செங்கழுநீர் வாலுளுவை கருவாப் பட்டை
திரியான கண்ட திப்பிலி கஸ்தூரிப் பட்டை கிளியூறல் செவ்வியம் கொத்தமல்லி
பரிவா சிதற் கோலம் ககர்மிந்தப்பு பாங்கான அரேணுக்கும் சாம்பிராணி
கரிதான கடுரோகணி கடுக்காய் தாளி கசகசா மஞ்சிட்டி சாரப் பருப்பே.

32: பருப்பான திரிபலையும் சமுத்திராப் பழமும் பகராரிய வலம்புரிக்காய் கர்க்கடக சிங்கி
கருப்பான சீரகமும் நல்ல சீரகமும் சார்போகி செண்பகப்பூ நெல்லி முள்ளி
விருப்பான செஞ்சந்தனமும் அகில் தேவதாரம் வெட்பாலை வெளிப் பிசினும் முந்திரிகைக் கொட்டை
மருப்பான குளவிந்தங் கஸ்தூரி மஞ்சள் வகை வகைக்கு ஒர் பலந்தான் வரிசை கேளே.

33. வரிசையாம் சரக்கை யெல்லாம் இள வறுப்புச் செய்து வளமாக யெடுத்து நன்றாய்ச் சூரணமே
கரிசையாய் முன் மருந்தோ டொக்கச் சேரு கண்டிடைக்கு வங்க [illegible] வங்காளச் சீனி பாதி
பிரிசையாய் ஆவின் நெய் படி தானெட்டு பாண்டத்தில் விட்டாவின் பால் படிதான் ரெண்டு
படிசையா யடுப்பேத்திக் கொதிப்பாலும் போது பால் வார்த்தும் பதம் பார்த்துச் சூரணத்தைக் கொட்டு
அரிசையா யடி பத்தாக கிண்டி வா நீ அதில் போடு முந்திரிகை பேரீச்சம் ~~பழம்~~ பழம்

34. பலமான வகைக்கு ரெண்டு பலந்தான் போடு பாங்கான கொம்புத் தேன் ரெண்டு படிதான் பாரு
வளமாக இஞ்டியே யிறக்கி வைத்து வாகான கணபதி முன் வைத்துப் போற்றி
அளவாக லெட்சமுரு ஒதித் தீரு அப்பிரக செந்தூரம் ரெண்டு பலம் போடு
நருகாதே வயித்தியற்கு மனம் நோகாதே நாலிலொன்று வயித்திய பாகமீயே.

35. யீந்தவர்க்கு மனங் குளிர வெகுமானஞ் செய்து யிதமான லேகியத்தைக் கொள்ளு கொள்ளு
தாளாதே அந்தி சந்தி மண்டலந்தான் கொள்ளு சார்வான மேக வகை இருவதுந் தான் கொள்ளு
சார்வான மேக வகை யிருவதுந்தானங்கே பாய்ந்த விருடம் வாத பித்த சிலேற் பனந் தானங்கே
பரந்தோடும் சயமீளை மந்தார காசம் ஒய்ந்துமே பதினெட்டுக் குட்ட ரோகம் ஒடுமே கிரந்தி யரையாப்புச் சூலை,

36. சூலையென்ற யெட்டு வகைக் குன்மந் தீரும் அலையாத வாயுவெல்லாந் தூர ஒடும்
வாலையென்ற ஸ்திரீகளுக்கு கெற்ப நோயெல்லாம் பரந்தோடு மலடியுமே பெறுவாள் பிள்ளை
காலையென்ற உஷ்ணங்கள் கரந்தி தீரும் கல்கமோ செவ்வரளிப்பூப் போலாகுமே.

37. ஆமென்ற லேகியத்துக்கு இச்சா பத்தியம் அந்தி சந்தி மாறாதே கொள்ளு கொள்ளு
பாமென்ற தேகமென்ன பசும் பொன்னாகும் பரிவான மன்மதன் போல் வடிவு கொள்ளும்
தேமென்ற காமப்பால் நித்த மூன்று ஸ்திரீயருமோ அதுபோகஞ் செய்யமாட்டார்
வாமென்ற வயித்தியரே யிந்த முறை விட்டு மதி கெட்டு அலையாதே மகிழ்ந்து பாரே.

38. <u>முக்கூட்டுத் தயிலம்</u>:-
பார்க்கவே மேக ராசாங்கந் சொன்னேன் பாடுகிறேன் முக்கூட்டுத் தயிலந் தன்னை
யேற்கவே நல்லெண்ணை படி தானெட்டு யியல்பான ஆவி நெய் படி தானாலு
காற்கவே ஏரண்டெண்ணை படி தானாலு கலந்தொன்றாய்ப் பாண்டத்திலளந்து விட்டு
ஆர்க்கவே ஆவின் பால் படி தானாலு அப்பனே செவ்விளநீர் படி தானாலே.

39. படியான கரிசாலை பொன்னாங்காணி பசலி ஒடு கத்தாழை பிரமிகஞ்சா
செடியாடி தழுதாழை சிறுகீரை நொச்சி சிறுபூளை வல்லாரை மொசுமொசுக்கை
நடியான ஆதண்டை கற்பூர வல்லி நல்த் தாளை விழுதி முடக் கொத்தான் சின்னி
கொடியான கொழுஞ்சி கிடா நாரத்தை பழமும் கொம்மட்டி மாதளையோடு எலுமிச்சம் பழமே.

40. பழமான மல்லிகையும் செவந்தி ஆக்கி பழம்பாசி வகைக்கு ரெண்டு படி தான் சாறு
தினம் பிறவே எண்ணையிலே சேர வாரு சீராருஞ் சங்கு நீரூட வரி வூச்சி
இளம்பாதே தென்னம் பூ யிலுப்பைப் பூ முருங்கை செந்தாருக்கம் பூவோடு புங்கம் பூவும்
இளங்கு வகை தாமரையும் செங்கழு நீரல்லி கெருடக் கிழங்கு பால் நெய்தல்
கொட்டி வேருளவேமருள் கிழங்கு கோவைக் கிழங்கு வெருகொடு நெல்லிக்காய்ப் பட்டையாமே.

41. பட்டையொடு ஆரு நெல்லி பூவந்தி பழமும் பரிவாகும் வகைக்கு ரெண்டு படிதான் சேரு
கிட்டமுட் எண்ணையிலே வார்த்துக் கேளு செவ்வந்தி வில்வவேர் அமுக்கிரா வேர்
கொட்டமிடு மருந்கொட்டி பாதி நன்னாரி குருந்த வேர் பொன் முசுட்டை குமுள் நீர்ப்பூலா
நட்டமிடு சித்தாமுட்டி பேராமுட்டி ஆதவளை குமரி சிறுகாஞ்சொறி தோடை
சட்டமுடன் நிலப்பனையுந் தன்னி பிட்டான் சங்கோடு சாறணை வேர் சிவனார் வேம்பே.

42. வேம்பான தழுதாழை நொச்சி வீரி வெள்ளறுகு காக்கட்டான் கீழ்க்காய் நெல்லி
கூறுன மருதோன்றி நாகவல்லி குமுளோடு புரசு முன்னை கோவைக் கொடி
பேறுன முள் முருங்கை முக்காவேளை புங்கோடு நாவலத்தி புனலி சீந்தி
கூறுன கடல் முருங்கை வெட்டி யிலாமிச்சு குரு. விருசு அளிஞ்சிப் பூவரசம் பட்டை.

43. ப்ட்டையாக்கிழிம்பை உள்ளலத்தி பன்னீரிலின் பூதல் கிருவை சுண்டி
வெட்டியே வகைக்கு நால்ப் பலமே தூக்கு விதமான யிடித்த தனைப் பாண்டத்திட்டு
விட்டுமே பதினறு மரக்கால் நீர்தான் விட்டதனை எட்டொன்றாய் எரித்துக் காய்ச்சி
யிட்டதொரு காயத்தை எண்ணையிலே வாரு யியம்புறேன் கற்க வகை யினிதாய்க் கேளே.

44. யினிதான சாதிக்காய் கிராம்பு பத்திரி ஏலமொடு இலவங்கம் அதிமதுரம் கோஷ்டம்
குணமான பெருங்காயம் அரத்தை சுக்கு குரோசாணி வால்மிளகு, கொத்தமல்லி
வதிதமாங் கருஞ்சீரகங் கஸ்தூரி மஞ்சள் வாலுளுவை சிறு நாகப்பூ வேரடிந்து
வதிதமாஞ் சதகுப்பை வசுவாசிப் பட்டை வாத தங்கி அகிலோடு தேவதாரம்.

45. தாரமாங் கார்போகி கடுக்காய் தானி தாளிச பத்திரி யோமம் குளவிந்த மஞ்சள்
கூரமாங் கண்டந் திப்பிலி அக்கிரக் காரம் அதிவிடையம் கிரியூறல் கருவாப் பட்டை

கோரமாம் நற்சீரகம் கூகை நீர் குங்குமப்பூ வலம்புரிக்காய் விளங்க மாஞ்சி
தீரமாந் திப்பிலியுந் திப்பிலி மூலம் செஞ்சந்தனம் நெல்லி முள்ளி சிறு தேக்காமே.

46. தேக்கான செண்பகப்பூ கடுகுரோகணியும் திரிபலையுஞ் சமுத்திராப் பழமுங் கல்நார்
தேக்கான கைச்சோலம் மாதளங்காய் பிஞ்சு சென்ன கரப்பட்டையொடு நெருஞ்சிக்
காயும்
வாக்கான பெருங்குரும்பை சித்திர மூலம் வகை வகைக்கு ஒரு பலந்தான் வரிசை
யாகத்
தாக்கான புங்க வேர்ப் பாலரலாட்டி தவமேல் யென்னையிலே கரைத்திடாயே.

47. கரைத்துமே அடுப்பேத்திக் கணேசன் பூசை கை முறையாய்ச் செய்திட்டு எரித்தானே
நீ
நிரைத்துமே ஓர் விறகால் நெருப்பை மூட்டி நிலையான பதமாக கிண்டிக் கிண்டி
முறைந்துமே என்னையுட பதத்தைப் பார்த்து முருங்கைப் பூ ஒரு படிதான் போட்டுக்
கிண்டு
கரைத்துமே மயிர் சொகுந்த பிடிதான் போடு கருகாமல் பச்சை நிறங் கண்டு
கொள்ளே.

48. கொள்ளவே மெழுகு பதமிது தானென்று குறிப்பான வடி கலசந் தன்னில் கொள்ளு
வெள்ளவே புநுகு சோரோசனை கஸ்தூரி விதமாக வகைக்கு நாம் களஞ்சி ஆக்கு
வன்னவே வடி கலந் தன்னில் போட்டு வளமாக யென்னை வடித்து வாங்கு
கள்ளமா யடியிலே கசடில்லாமல் கம்பிளியி லிட்டு நீ புளிர்த்திடாயே.

49. புளிர்த்துமே பூசை பண்ணிவேடு கட்டி புதைத்துமே நெல்க் குளியிலிட் டெடுத்து
நளினமாய் நாளு நாள் வட்டம் மூழ்கு நாலாயிரத்து நாற்பத் தெட்டு நோவும்
அறுந்தவே நாள் வட்ட மூள்கும் போது ஆகாத நோயெல்லா மகன்று போகும்
குறுந்த நீர் தள்ளி வெள்ளர் மூள்கு குணமான பசும் பயறுந்தீ*து சீக்காய் தேயே.

50. நஞ்சுந்தவே புளியோடு புகையூந் தள்ளு நாற்பது நாள் மண்டலந்தான் மூள்கும் போது
பழுதில்லாத் தேகமது கஸ்தூரி வீசும் பார்ப்பதற்குப் பசுந் தங்கமாகும் பாரே.

51. பாரே நீ தயிலந்தான் மூழ்கும்போது பாங்கான பெண்ணோடு சஞ்சாரமாகா
சேராதே வாயு வகைப் பதார்த்தந் தன்னை சிறப்பான மோர் தயிரும் புளியுந் தள்
ளு
சேரே நீ வெயில் நடையும் நித்திரை மாகா செப்புறேன் மந்த நாளெல்லாமாமே.

52. மேகராசாங்க தயிலம்:- ~~ல்~~

ஆமென்ற மேக ராசாங்க யென்னை அறையினேற் சருவாங்க நோயுந் தீர
யேமென்ற சித்தேறல் டென்னை படி நாலு யிதமான யீருள்ளிச் சாறுபடி ரெண்டு
பேமென்ற சமுதை லத்திச் சாறு படி ரெண்டு பேய் குமட்டிச் சாறு ரெண்டு கரி
சாலே ரெண்டு
போமென்ற பொரியாரை வல்லாரை குருக்கு பிரமி யொடு பொடி தழையும் அவுரிச்
சாரே

53. சாறுன செருப்படியில் ரெண்டு வகை கட்டு சடைச்சி யொடு யின்பூறல் காட்டுச் சேம்பு
கூறுன களக் கொட்டி கோழியவரை குளிமீட்டான் காட்டுள்ளி தேள் கொடுக்கு
கூறுன கவுதும்பை ஆதனை நீர்முள்ளி ஆய்வேலி மருக்கிலைச் சார் கோவை குன்றி
வாறுன வாழ்த லையும் வெள்ளொருக்கு கரந்தை வகைக்கு ரெண்டுபடி சாறு என்னையிலே
வாரே.

54. வார்த்துமே வெட்டு வகை மருந்து கேசு வாகையொடு மருது கருங் குருந்து வன்ன
காத்திமே கருஞ்சீரை செங்கத்தாரி கத்தானை பூவரசு கருவை யிட்டு
கூத்துமே குவளைபிராய் யெரிகாலன் கொன்றை குருந்தொட்டி நன்னாரி குமுள் நீர்ப்பூலா
சாத்துமே வறப்பூலா புரசு சங்கு தழுதாழை கண்டங்கத்திரி ஆவரை நொச்சியே.

55. நொச்சியொடு சித்தாமுட்டி பேருமுட்டி நோக்கரிய ஏறளிஞ்சி கரந்தை புங்கும்
மச்சியே புரசு கரப்பான் வெம்பாடம் பட்டை மருதோனி நாகவல்லி மகிளம் பட்டை
யீச்சியொடு முள்ளிலவு சங்கங்குப்பி யெருக்கோடு மருக்காரை சின்னி புன்னை
கச்சியே கருமுள்ளி செம்முள்ளி தந்தி காஞ்சொரி காட்டுள்ளி சிறுகுறிஞ்சா வேரே.

56. வேரான சிறு குறட்டை மலை கலக்கி சிவதை வெள் காக்கை வேர் வெளி கீழ்க்காய்
பேரான சிவன் வேம்பு அமுக்கிரா வேர் புன் முருங்கை தை வேளை குப்பை மேனி
நேரான சனியுடையுஞ் சத்தி சாரணையும் நிலக் குமிழும் நிலாவாரை சதினிப் புடையின்
பூறல் முரி
நெருஞ் சாறணையும் வெள்ளைச் சாறணையும் வாளன பால்க் குறண்டி வெள்சா வேளை
வுட்டக் கிலுகிலுப்பையொடு வட்டத் துத்தி யென்னே.

57. துத்தி வட்டத் திருப்பியொடு நிலக் கடம்பு அடரி சுத்தி உள்ளாலத்தி பாகிரி நீர்க கடம்பு
வெத்தியே யறள் தாளை மறள்க் கிளங்கு வெருகோடு வெள்ளிண்டு முக்கா வேளை
சித்திரமாவிலிங்கோடு கிரந்தி நாயகமும் உசிலம் பட்டை உசிலோடு கொடுவேலி சீந்தி
தண்டு
இசையான பாவட்டை நாரட்டை இலுப்பை கழுவையர் மரஞ் செவியும் முத் தெருத்திச்
செவியும்
அசையாத மந்தாரை மைக்கொன்னை காசா அத்தி நாவல் ஆத்தரசு ஆயில் பட்டை
நசியவே நாவலத்தி முசுலைப் பூண்டு நாய்க் கொட்டாப் புனலி கருமத்தை வேம்பே.

58. வேம்பான பெருமருந்து ஆத்தறளி அரசு வேல் குவி ஊ சன்னச்சி முருங்கை மாதளையும்
சோம்பாதே வகை வகைக்குப் பலந்தான் பத்து சொல்லுகிறேன் புல்லுருவி. வகையைக் கேளே
வேம்போடு அரசில் நாவை மாவிலுப்பை வில்வவொடு விடத் தலை மாதளையா மெட்டும்
செம்பாதே புல்லுருவி வகை தானெட்டு சேர்ந்தியதோர் முன் மருந்திற் சேர்க்கக் கேளே.

59. கொப்பா யிடித்த தனைப் பாண்டத்திட்டு எகடியாக என் தாலி சிலூர்த்தான் விட்டு
ஏளப்பா எட்டொன்றாய் எரித்துக் காய்ச்சி யிறுத்து மே கசாயத்தை யெண்ணெயிலே வாரு
ஆருமே வெள்ளாட்டு நீர் படிதான் ரெண்டு ஆவினீர் படிதான் ரெண்டு அதிலே வாரு
ஆறு நீர் கலக்கியதோர் ரவியில் வைத்து அதில் போட மருந்து வகை யறைகிறேனே.

60. அறைகிறேன் சாதிக்காய் கிராம்பு யேலம் அழகான யில்வங்கம் அதிமதுரம் கோஷ்டம்
விரைகிறேன் திப்பிலியுந் திப்பிலி மூலம் வெங்காரம் வால்மிளகு சாலி ஓமம்
கரையாத பெருங்காயம் கடுக்காய் தானி கருஞ்சீரகம் கார்போகி கஸ்தூரி மஞ்சள்
அறைகிறேன் அரத்தை சுக்கு அக்கிரக் காரம் அதிவிடையம் கடுரோகணி கடுகிந்துப்பே.

61. உப்பான சடாமாஞ்சி தாளிச பத்திரியும் உத்தமனே கசகசா ஓமம் கஞ்சா
செப்பாதே வலம்புரிக்காய் பறங்கிப் பட்டை சென்ன கரப்பட்டை யொடு கஸ்தூரிப்பட்டை
தப்பாத வாலுவை சிறுநாகப்பூ தக்கோலஞ் சிறுதேக்கு தகரங் கல்நார்
தொப்பாதே அவிலோடு வசம்பு நீர் வெட்டி சுத்தித்த நேர்வாளஞ் செங்கொட்டை கூட்டே.

62. கூட்டியதோர் வசுவாசி ஆனைத்திப்பிலி கொத்தமல்லி குங்குமப்பூ சிரகங் கச்சோலம்
ஆட்டியே யிவச்சாரம் சத்திச் சாரம் அரேணுகம் நவச்சாரம் சாஸ்திர வேதி
கெட்டியாய் வகைக்கு ஒரு பலந்தான் ஏக்கு கிழங்கு செங்கழுநீர்க் கிழங்கு
காட்டுமே கார்த்திகையிர் அப்பைக் கிழங்கு காட்டுக் கறணையொடு நக கரணைக் கிழங்கே.

63. கிளங்கான நரசுமா தேவிக் கிளங்கு செடியான முருக்கம் பூ யெருக்கம் பூவும்
களங்காதே புங்கம் பூவரசம் பூவும் தாளியொடு முருக்கம் பூ செந்தூரக்கம் பூவு
அளங்கரிய செண்பகப்பூ சித்த சத்திப் பூவும் ஆவரையின் பஞ்சாங்கந் தேத்தாங் கொட்டை
புரங்குமே களமுருந்தோ டெல்ல மொக்கப் புங்கம் பால் விட்டாட்டி யெண்ணெயிலே போடே.

64. போட்டுமே அடுப்பேத்தி எரி நேர்பாக புகளான கணபதிக்குப் பூசை பண்ணி
நாட்டுமே மெழுகு பதந் தன்னைப் பாரு நலமான பதமறிந்து வடிக்கக் கேளு
ஊட்டுமே கஸ்தூரி விராகன் ரெண்டு அளகான பச்சைக் கற்பூரம் ரெண்டு
நாட்டுமே சுத்தித்த லிங்கம் நாரம் நல்ல ரச கற்பூரம் விராகன் நாலே.

65. நாலான யிவையெல்லாம் வடி கலசத்திட்டு நலமாக யெண்ணெய் தனை வடித்திடாடாய் நீ
சேலொடு தயிலத்தைப் பதனம் பண்ணு திரமான கடுகு தனை எரிந்திடாதே
பாலை பச்சை யெண்ணெய் அதிலே விட்டு பரிவாக உலர வைத்து மேலே பூசில்
சேலோடு சிரங்கு குஷ்டம் மேல் ரோக மெல்லாம் தீருமடா அரப்பிட்டுக் குளித்துப் போடே.

66. குளிக்கவே வடித்தெடுத்த எண்ணெய் தன்னை குடிக்க நாளொன்றுக்கொரு கரண்டி வீதம்
களிக்கவே மூன்று நாளந்தி சந்தி கொள்ளு கடிதான பத்தியந்தான் காக்க வேணும்
உளிக்கவே ஏளா நாள் தலை நீர் வார்த்து உப்பதனை யெட்டா நாள் வருத்துக் கூட்டு
அளிக்கவே யிப்படி நீ கொள்ளும் போது ஆகாத நோய்களெல்லாம் அகன்று போகுமே.

67. போமென்ற மேகமொடு கிரந்தி யரையாப்பு பொல்லாத பதினெட்டுக் குட்ட ரோகம்
வாமென்ற குன்ம மெட்டும் வாராதோடும் வாய்வோடு சூலை மகோதரமுந் தீரும்
தாமென்ற வாத பித்தம் சார்ந்து போகும் சயரோக ஷேமங்கே தானேயோடும்
தேமென்ற வண்டுகடி செய்யான் பூரான் தீராத விஷ கடியும் எலி கடியும் போமே.

68. போகுமே விஷமொடு பெரும்பாடெல்லாம் புளவையொடு காமாலை பாண்டு சோகை
யேகுமே கெர்ப்பத்திலேற் வகை நோயும் பெண் மக்காறு கிரத் கிரட்சி போகும்
போகுமே வயத்திலுள்ள மலக் கட்டெல்லாம் புழுவான கிருமியொடு வாய்வு போமே

69. வாய்வோடு மூலவகை ப்வுத்திரமுந் தீரும் மகத்தான விப்புருதி கண்டமாலை
வாய்வோடு அண்டமாலை புண்வு புத்தும் மகத்தான குடி கரப்பான் மண்டை ஊலை
வாய்வோடு விரை வாதம் அண்டவாதம் வலி வாத மற்றுமுள்ள வாதமெல்லாம்
தேயுமே யென்னுடைய பேரு சொன்னால் தேசத்திலில்லாமலோடிப் போமே.

70. போமென்ற யென்னைப் பத்தியந்தான் கேளு புகையிலை வெண்ணீரும் சோறும் முன்னது
வேமென்ற எரி நரல் தலைநீர் வார்க்க விதமான உப்புதனை வைத்துக் கட்டு
வாமென்ற மறுபடி தானென்னை தேய்க்க மைந்தனே மூழ்கிப் பின்னெல்லாங் கட்டு
தேமென்ற யிம்முறை தானுருஞ் சொல்லார் செப்பார்கள் வயித்தியரே தேர்ந்து பார
வாமென்ற பிணியாளி நோய் தீர வேண்டி வயித்தியனை வணங்கியே உபசாரம் பண்ணே

71. பண்ணில் செய் மருந்து பலிக்கும் பாரு பரிவான நோயெல்லாம் பறந்து போகும்
வெண்ணியே யிவனென்ன வயித்தியன் தானென்று வேகாரி உள்ளியம் போல்ச் செய்யச் சொன்னால்
மண்ணிலே வயித்தியர்க்கு மனந்தானொந்தால் மானிடர்க்கு நோய் தீரா மருந்தாகாது
தன்னிலே தானறிந்தால் வணங்கிச் சேர்த்தால் சண்டாளகுறுவந் தீரும் நோயே.

72. <u>செங்கொட்டை வல்லாதி.</u>

நோய் தீரச் செங்கொட்டை வல்லாதி சொல்வோம் நுணுக்கமாய்ச் செங்கொட்டை பலந்தான் பத்து
மோயவே சாணிப்பால் சுத்தி செய்து மூக்கு வெட்டி யின்னமதில் முறையைக் கேளு
சாயவே கொடிவேலி பறங்கிப் பட்டை சங்கோடு அமுக்கிரா சிவனார் வேம்பு
ஓயவே மாவிலிங்கம் பட்டையோடு உத்தமனே வகைக்கு ஒரு பலந் தானென்னே:

73. என்னவே கருஞ்சீரகங் கஸ்தூரி மஞ்சள் யிரு திப்பிலிக் காய் வாலுளுவை கோஷ்டம்
ஏலம் சொன்னதொரு யிவையெல்லாம் யிடித்து வேறே சூரணமாய் வைத்திட்டுச் சொல்லக் கேளு
வின்னியே முன் சொன்ன செங்கொட்டை தன்னை உரலிட்டுக் கொப்பரையின் தேங்காய் ரெண்டு
என்னவே எள்ளு மொரு படிகான் ரெண்டு யிடித்துமே அதின் பிறகு சூரணத்தைக் கொட்டே.

74. கொட்டியே சேர்த்தொன்று யிடிக்கும் போது சூமுறவே பனைவெல்லம் அஞ்சு பலம் போடு
திட்டமாய் ரச கற்பூரம் விராகனஞ்சு சேர்த்திடித்து வல்லாதி செய்து கொண்டு
நட்டவே வல்லாதி அந்தி சந்தி நாளொன்று வெருகடிதான் நயர்ந்து கொள்ளு
குட்டமாங் கிரந்தி பரையாப்பு சூலை குன்மமொடு வயத்து வலி வாயுள்ச் சூலை.

75. சூலையொடு குஷ்டம் வாய்வு தீரும் சொற் பெரிய மேகமெல்லாஞ் சொல்லவொ தோடும்
வாலையாந் தேகமது சித்தியாகும் மண்டலந்தான் பத்தியமாய்க் கொண்டு வா நீ
சூலையே பத்தியந்தான் சொல்லக் கேளு கைப்போடு புளி புகையும் பெண்ணுந் தள்ளு
பாலோடு மத்ரு நெல்லா மிச்சா பத்தியம் பாங்கான உப்பைத் தான் வருத்துக் கொள்ளே.

<u>சண்ட மாருதச் சூரம்பு:-</u>

76. கொள்ளவே வயித்தியர்க்குக் காசி பீடம் கூறுறேன் சண்ட மாருதக் குரம்பு
அள்ளுறேன் ரசமோடு சாதிலிங்கம் அரிதாரம் மனோசிலையும் ரச கற்பூரம்
வெல்லுறேன் கருநாபி வெங்காரம் கெவுரி வெள்வேர் வகை வகைக்கு விராகன் ரெண்டு
சொல்லுறேன் கரந்தைச் சார் பழச் சாறதல் சுருக்கிட்டுச் சுத்தி செய்து கல்வத்திட்டே.

77. இட்டுமே சுக்கிக்க நேர்வாளமப்பா யிந்திடைக்கு பதினு விராகன் போடு
கட்டுமே கிரும்போடு கடுஞ் சுக்கு கடுரோகிணி பெருங்காயம் கஸ்தூரி மஞ்சள்
ஆட்டுமே திப்பிலியும் திப்பிலி மூலமும் ஆனைத் திப்பிலி யோமம் நாகப்பூவே.

78. பூவோடு இந்துப்பு இலவங்கம் கோஷ்டம் புகழான சாதிக்காய் வகை வகைக்கு
தேவோடு விராகனிடை நாலு கட்டு செப்பரிய முன் மருந்தோடொக்கச் சேரு
தேவோடு திருகு கள்ளிப் பாலும் வாரு சிவதையொடு கொடி வேலிக் கஷாயம் வாரே.

79. வார்த்துமே பனிரெண்டு சாமமாட்டு வழித்துமே சிமிளிலெடுத்து வைத்து
ஆத்துமே சுரத்துக்கு அரத்தை சுக்கு அதிமதுரம் சொல்லியதோர் சுரத்துக் கெல்லாம்
கோத்துமே யினமறிந்து சரக்குக் கூட்டி குடி நீரு விட்டிடவே சுரங்களோடு
ஆத்துமே குளம்பிரட வேக மெத்த அப்பனே அருபான மரிந்து கொள்ளே.

80. கொள்ளவே பதின்மூன்று சன்னி தோஷம் குலையவே அரத்தை சுக்கு அரரம்பு திப்பிலி
மெள்ளவே யிஞ்சியொடு மாவிலிங்கப் பட்டை வேளை காட்டா மணக்கு வெண் ணொச்சி வேரு
கொள்ளவே அரையதனைச் சுரசம் பண்ணி கொளம்பிடவே சன்னியொடு தோஷம் தீரும்
வள்ளலே யிருமலென்ற வகைகட் கெல்லாம் மாட்டு நீ கடுக்காயின் கசாயந் தானே.

<u>அநுபான வகை:-</u>

81. தானன வாதமென்ற அன்பதுக்கும் கழுதாதை வெண்ணொச்சி சாத்திலரிட்டு
தோனவே சயமேரும் இருமல் போக ஆடாதொடை கண்டங்காரி ஆடாதோடை
தேடின சித்தரத்தை சிறுகாஞ் சொறி திப்பிலியுங் கடுக்காயுஞ் சேர்த்திடித்து வைத்து
கோருன ஆ ளதிலே ஒரு சேரை போட்டுக் குடிநீரால் கசாயமிட்டுக் குளம்பு கூட்டே.

82. கூட்டவே பித்தமொடு பாண்டு சோகை கொடியதொரு காமாலை யிவை கட்கெல்லாம்
காட்டியே புழச் சாறு வெள்ளாட்டி னீரும் கரிசாலைச் சாறுடு மிளகுங் கூட்டி
மாட்டியே குளம்பிட்டுக் கொள்ளு கொள்ளு மகோதரம் நீருமை யெருவயறு சோகை
காட்டியே கவுசி உள்மாந்தை வீக்கம் கனக்க தொரு நீருமை பொராரை பீலியென்னே.

83. பீலியாம் வகைக்கெல்லாம் சொல்லக் கேளு பலமான நீர்முள்ளிச் சாத்தில் சற்றே
கோலியே நவச்சாரங் கொச்சமிட்டு குளம்பு தனைக் கூட்டியே கொண்டு பாரு
போலியே குன்ம மெட்டும் போகக் கேளு பூவரசம் பட்டையொடு பேய்க் குமட்டி வேரும்
சேலவே சீரகமும் மிளகோடேலம் சேர்த்து நீ குடிநீரில் குளம்பை யூட்டே.

84. தொளும்பான பித்த வகை சொல்லக் கேளு கொத்தமல்லி சீரகமும் முடக் கொத்தான் கூட்டி
விளம்பிடவே பித்த மெல்லா மோடிப் போகும் கொடிதான கிரந்தி யரை யாப்புச் சூலை
களங்கமா மேக வகை கரப்பா னெல்லாம் கரந்தைச் சார் தன்னிலிடக் காணதோடும்
குளம்பான விரை வாதம் அண்ட வாதம் கூட்டிய் வேர்க் கொம்புச் சார் களக் கொட்டிச் சாறே.

85. சாறென்ற வாயுவுக்கு வேளை சுக்கு சாறு தாமணி நொச்சி விஷத்துக் கெல்லாம்
கோனென்ற வெத்திலைச் சாற் யுமுரியாகும் கொள்ளாட்டால் வெள்ளீராம் குளம்பை யூட்டு
ஆனென்ற பதினெட்டு கரப்பான் குட்டம் அமுக்கிரா சிவன் வேம்பு பறங்கிப் பட்டை
கோவென்ற ~~வெத்திலைச் சாற்~~ சூள பண்ணி அமுரி விட்டு முருக்க தனில் குளம்பிடவே கூடட்டமெங்கே
ஆனென்ற மேகவகை யிருபதுக்கும் அப்பனே உள்ள பட்டைச் சாறே.

86. சாறன கொப்பரேய் தீரச் சாத்துறேன் பாகல் சாற் பாளைச் சாற்றில்
காரான கற்பரேய் வகைகளுக் கெல்லாம் கந்த சாற் குமரிச் சாற் கரி சாலைச் சாறும்
வேறன யெலிகடிக்கு முருங்கைப் பட்டை வேளையிலை வெள்ளுள்ளிச் சாற்றி யூட்டு
ஆறன விரியனுக்கு அனிஞ்சிவாகை அரவத்துக் காடு தொடா மூலி வேரே.

87. மூலியே வாகமொடு யிளம் பிள்ளை வாதம் முனையான பச்சை வாதம் பாரிச வாய்வு
நாலியே யிவைக் கெல்லாம் கருவாகை வேம்பு நந்தி கேசரத் தயிலம் கோப் பிறண்டைச் சாறு
கோலியே யிருப்பை மேல் புல்லுருவிச் சாரம் கூட்டி குளம்பிடவே வாத மெல்லாம் கொள்ளை போகும்
ஆலியே நோயரிந்து அப்பானச் செய்ய அதுக்கான அநுபானம் அறிந்து கொள்ளு
நாலிலே நாலாயிரத்து நாலு ம் நோயும் நாடாது பிரமமுனி குழம்பென்றென்னே.

88. <u>அஞ்செண்ணெத் தயிலம்:</u>
எண்ணியே வாதமெல்லாம் மோடிப் போக யியம்புகிறேன் அஞ்செண்ணைத் தயிலங் கேளு
எண்ணவே எள்ளெண்ணை ஏறண்டெண்ணை யிருப்பை எண்ணை புங்கெண்ணை வேப்பெண்ணை ஐந்தும்
அண்ணலே வகைக்கு ரெண்டு படி தான் சொன்னேம் அளந்து விடு பாண்டத்தில் அப்பா கேளு
நன்னவே கருதாளி காட்டாமணக்கு நாயுருவி தைவேளை குப்பை மேனி.

89. மேனியா மாவிலங்கு வேம்பு புங்கு வெண்நொச்சி நாவலினை கண்டங்காலி
கனியே குருந்து கருவாகை. சங்கு கொடிவேலி நிலக் கடம்பு. சடைச்சி யின்று
போனியே அவுரியொரு மருக்காரை எருக்கு புள்முருங்கை ஊர் முருங்கை வெள்ளைச் சாறனையும்
மானியே மருகோணி காட்டுமிமல்லி மத்தை உத்தாமணியோடு களக் கொட்டி தானே

90. கொட்டியே மிளகரணை திருகுகள்ளி ஏழுளோடு அழுக்கு பிரம்பு குன்றி
யிட்டியே பேய்ப் பாலை அடம்பு சின்னி யிலுப்பை மேல் புல்லுருவி நுயிலைப் பட்டை
வெட்டியே. சொன்னதொரு மூலியெல்லாம் வேரோடு. நாரோடு மூலங் கொண்டு
அட்டியே பண்ணாதே. வெட்டி வந்து, அப்பனே வகை. வகைக்குப் பலந்தான் பத்தே.

91. பத்தவே யிவை யெல்லா மிடித்து நன்றாய் பரும் பாண்டத்திட்டு நீ பாகங் கேளு
அத்தாகப் பதினெரு மரக்கால்த் தண்ணீர் அளந்து விட்டு அடுப்பேத்தி எரிக்கக் கேளு
எத்தாகே ஓர் விரகாலெரியை மூட்டு யெட்டொன்றாய் வந்த மட்டு மெரித்து காய்ச்சு
அத்தான கசாயமது படிதான் பத்து அளந்து விட்டு என்னையிலே அறைநியக் கேளே.

92. அறைகிறேன் திப்பிலியும் திப்பிலி மூலம் ஆனைத் திப்பிலி ஓமம் அரத்தை சுக்கு
குறையாத தாளிசையும் கண்ட திப்பிலியும் மரோசாணி கருஞ்சீரகம்/ கிராம்பு குக்கில்
திரையாத சதகுப்பை. வசம்பு கல்நார் சிறுதேக்கு பெருங்காயம் வெள்ளுள்ளி யிஞ்சி
உரையாத விராம்பிசினும் நாகப்பூவும் உத்தமனே சடாமாஞ்சி ஒக்கக் கேளே.

93. கேளே நீ வகை வகைக்கு அரைப்பலமே சொன்னோம் கெடியாகக் கசாயமிட்டு அரைத்தே மை போல்
ஆளே. நீ என்னையிலே கரைத்து வாரு அப்பனே மயிர் பீலி அரைப் பலமே போடு
தோளே நீ வாராதே அடுப்பிலேத்தி குறிப்பாக யின்னமொரு சூட்சங் கேளு
நாளே நீ யாருந்கான். சொல்லாரப்பா நந்தி. கேசரச் சாறு நாலுபடி வாரே.

94. வாரே நீ அடுப்பேத்தி எரித்துக் காச்சி வளமான மெழுகு பதந்தன்னைப் பார்த்து
காரே நீ வடி கலசந் தன்னில் சேரு கஸ்தூரி விராகன் ரெண்டு சாதிலிங்கம் ரெண்டு
போரே நீ ஆகாசத் தாள் கஞ்சு ரெண்டு போட்டுமே என்னைதனை வடித்து வாங்கு
வேரே நீ பண்டக்கின் தயிலத்தோடு வெள்ளுள்ளி முசுரு முட்டை தயிலந்தானே.

95. தயிலமென்ன வகை வகைக்குக் கால்படி தான் சொன்னோம் சாத்தரிய முன் தயிலம் தன்னில் வாரு
தயிலத்தை வேடு கட்டிப் பதனம் பண்ணு சண்முகர்க்குங் கணபதிக்கும் பூசை பண்ணு
தயில மிந்த, முறைப்படியே ஆர் செய்வான் அயிலிமர் தயில மிதின் பேரு சொல்ல
ஆராலு முடியாது அறிந்து பாரே.

96. அறிந்து பார் தயிலத்தில் காசிடை தானுண்டு அப்பனே மேனிலெங்கும் பூசக் கேளு
தெரிந்து வந்த சன்னி யெங்கே தோசமெங்கே கீராத உள் குத்தப் பிற வீச்செங்கே
அரிந்து வருவாதமெங்கே வாயுவெங்கே அடிக்கடி தான் நாவுலரும் சன்னி யெங்கே
யெரிந்து வரும் பக்க வாதம் பாரிச வாதம் யிளம் பிள்ளை வாதமொடு அண்ட வாத மென்னே.

97. வாதமொடு காக்கை வலி முயல் வலிப்பு வறணை வலி குதிரை வலி குமர கண்ட வலியு
ஓத(மென்ற வாத பித்த மொக வாத சன்னி யுத்தமனே பித்த நோய் தந்த சன்னி
போதவே கிற கிறப்பு மண்டைக் குத்து பிடிறி வலி பீனிசமும் பொல்லாத நோயும்
பாதவே சொன்னதொரு நோய்கட் கெல்லாம் பற்றுமே தயிலத்தின் பேரு சொல்லே.

98. சொல்லவே கைப்போடு புளிப்பு தள்ளு சொல்லரிய நோய்தீர்ந்து பத்தியத்தைக் கொள்ளு
சொல்லவே உப்புதனை வருத்தன் கூட்டு சுகமான வழுதலங்காய் முருங்கைப் பிஞ்சு
வெல்லவே நாகளங்காய் வத்தலாகும் வெள்ளாட்டு வத்தலோடு பசுப் பயறுமாகும்
பல்லவே பத்தியந்தான் கண்டு தேறு பாங்காக யின்னமொன்று பாடுறேனே.

<u>வில்வாதி_குளிம்பு:</u>

99. பாடுறேன் வில்வாதிக் குளிம்பு தன்னை பகராரிய நோயெல்லாம் பறந்து போக
ஆடியதோர் வில்லை வேர் பலமும் பத்து அதினுடைய பழந்தானு மிரண்டு பத்து பலமாம்
பாடியே யிடித்து மொரு பாண்டத்திட்டு பதத்துக்கு நீரளந்து விட்டு அடுப்பில் வைத்து
வாடியே எரித்ததனை மூன்று படியாக்கி வத்திய பின்னிறுத்ததிலே சர்க்கரையைப் போடே

100. போடுவது நல்ல வெல்லம் சர்க்கரை தான் மைந்தா போட்டதனைப் பாகு வரும், பதத்தில் சேரு
தேடுவது திப்பிலியுந் திப்பிலி மூலம் செவியமொடு முளகு யிஞ்சி சித்திரமூலம்
தேடுவது சீரகமும். எலம் லவங்கம் சிறு நாகப்பூவோடு தாளிச பத்திரியும்
ஆடுவது அதிமதுரம். கூகை நீர் அழகான வாலுளுவை, மாஞ்சி காணே.

101. காணென்ற அதிவிடைய மதுர மிந்துப்பு கண்டு சொள்ளு வகைக்கு ரெண்டு பலந்தால் சொன்னோம்
தானென்ற குங்குமப்பூ கிராம்பு, பத்திரி சாதிக்காய் வகைக்கு வகைக்கு விராகனிடை ரெண்டு
போனென்ற யிவை யெல்லா மின வருப்புச் செய்து பொடித் தந்த சுக்கு கசாயத்தில் போட்டுக்
யேனென்ற கஸ்தூரி விராகன் போடு இறக்கி வைத்து நாளொன்றுக்கிரு நேரங் கொள்ளு

102. கொள்ளுவது நேரமொரு புன்னைக் காயளவு குன்மமொடு சத்தி விக்கல் நெஞ்சு வலி தீரும்
கொள்ளவே அரோசிகமும் மூக்கு நீர்ப் பாய்ச்சல் குலையெரிவு சாமாலை கிறிசி மூலம்
வள்ளலே யிளைப்போடு யிருமல் யீளை வயத்து ... புருகுடச்சல் கிருமி மூலம்
தெள்ளியதோர் நோய் எல்லாம் மோடிப் போகும் கிரேகமது மண்டலத்தில் கிரேகமாமே.

<u>சுத்த வல்லாதி எண்ணை</u>:-

103. ஆமென்ற சுத்த வல்லாதி யெண்ணை அறையிறேன் சித்திரமூட்டி சமூலங் கொண்டு
பானென்ற முப்பத்து ரெண்டு பலமிடித்து பாண்டத்திலிட்டு யிரு நாழி சலமே வாரு
பேமென்ற குழி சலமாகக் யிறுத்து தனில் அய் வெண்ணை குறுணி வாரு
தாமென்ற சந்தனமும் மதுரங் கோஷ்டம் சாதிக்காய் கிரம்பேலம் பட்டை பத்திரியே.-

104. பட்டையாய் அரத்தை சுக்கு அக்கிலாத் காரம் பாங்கான தாளிச பத்திரியு மாஞ்சி
திட்டமாம் பெருங்காயம் கடுகுரோகனி திப்பிலியும் வாய்விளங்கம் குகை நீர்
கோஷ்டமாம் வால்மிளகு குரோசானி ஓமம் குங்குமப்பூ கருஞ்சீரகம் கடுக்காய் தானி
திட்டமாம் சண்பகப்பூ கொத்தமல்லி செவியம் வாலுளுவை சிறுநாகப்பூவே.

105. பூவோடு மிலையெல்லாம் வகை வகைக்குப் பொடி செய்து போட்டு நீ நாற் களஞ்சி வீதம்
பாவோடு பளச்சாறு படிதான் வாரு பசுவின் பால் படி வார்த்து அடுப்பிலேத்து
சேவோடு கணபதிக்குப் பூசை பண்ணு சிறப்பாக யெரித்து தனை முறுகு பதம் பார்த்து
பூவோடு வடிகலசந் தன்னில் கோறோசினை கஸ்தூரி போடே.

106. போடுவாய் வகை வகைக்கு களஞ்சி வீதம் போட்டு நீ வெண்ணை தனைப் பதனம் பண்ணு
நாடுவா யுள்ளுக்கு கால்சிடை தான் கொள்ளு நாசியிலுந் துளி குத்து மேலும் பூசு
திட்டமாய் மேகவாதம் மண்டை குலை தீர்ந்து போம் பித்தமொடு நீலகாசம்
ஓடுமே பீனிசம் வாயுவு சூலை உடம்பிலுள்ள நோயெல்லா மோடிப் போமே.

107. ஓடுமே சிரசிலுள்ள நோய்களெல்லாம் உத்தமனே சீயக்காய் பசும் பயறு
பாடுமே பத்தியந்தான் கைப்பு, புளிப்பர்கர் பாங்கான மது பத்தியமும் கூட்டு
ஓடுமே ஒருதலை நோய் மண்டை சூலை உத்தமனே நாசி புடம் கன்ன சூலை
நாடாது நயன வாத முகவாத சன்னி நலமான பத்தியந்தான் நன்றாய்ப் பாரே.

108. <u>மகாமேகக் கிருதம்</u>:-
பாரப்பா சருவாங்க நோய்கட்கெல்லாம் பாடுகிறேன் மகா மேக கிருதந் தாரும்
காரப்பா பேய்ச் சுரமுட்டி வேர் பலந்தான் பத்து கடுக்காய் வேர் நெல்லி வேர் தான்றி வேரும்
வேரப்பா சிற்றாமல்லி பேருமல்லி வில்வலைவேர் வெட்டிவேர் விலாமிச்ச வேரும்
பேரப்பா நாகணையு மாதளை காஞ்சொரியும் பொன்முசுட்டை நன்னாரி நெய்தலெண்ணே.

109. நெய்தலொடு செங்கழுநீர் தாமரையு மல்லி நிலப்பனையும் நிலவாகை கண்டங் கத்திரி
பொய்யாத் வகைக்கு ஒரு பலந்தான் பொடு பேய்ச் சுரமுட்டி வேரோடே போட்டிடித்து
யெய்துமே பாண்டத்திலிட்டுக் கேளு யிரு நாழி சலம் விட்டு யெட்டொன்றுக்கி
அய்துமே கசாயமது படிதானது அளந்து விடு ஆவின் நெய் படியு நாலே.

110. நாலோடு சாதிக்காய் கிராம்பு பத்திரி நற்சீரகம் ஏலம் லவங்கப் பட்டை
சாலோடு மஞ்சிட்டி சாத்திரவேதி சதகுப்பை வாய்விளங்கம் தாளிச பத்திரி
சேலான தேவதாரம் நல்ல சந்தனம் சிறுநாகப்பூ வேரொடு மதுரங் கோஷ்டம்
காலோடு மிளகு வால் மிளகுவை சிங்கி தேக்கு கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சளாமே.

111. மஞ்சளாந் திப்பிலியுந் திப்பிலி மூலம் மாஞ்சியொடு கடுகுரோகனி நெருஞ்சிக் காயும்
கொளிஞ்சியே கொத்தமல்லி கோரைக் கிழங்கு குரோசானி வால்மிளகு கடுக்காய் நெல்லி
மிஞ்சாதே குங்குமப்பூ மாதளையின் பிஞ்சு விளங்கவே வகைக்கு நாற்களஞ்சு கூட்டு
அஞ்சாதே ஆவின் பால் படி நாலு சொன்னேம் அரைத்துமே கரைத்து முன்னெண்ணெயில் வாரே.

வாரே நீ செவ்விளநீர் படிதான் ரெண்டு வல்லாரைச் சாறு படி ரெண்டு வாரு
112. சேரே நீ பழச்சாறு படிதான் ரெண்டு சீனி சர்க்கரை யதுவும் ரெண்டு பலமே பேடு
காரே நீ நல்ல வெல்லம் பலந்தானும் கரைத்துமே அடுப்பேத்தி யெரித்து காய்ச்சி வாரே
நீ மெழுகு பதந் தன்னைப் பார்த்து வடிக்கிட்டு வடி கலசம் தன்னில் கேளே.
113. தன்னிலே சீரகம் கோரோசினையுங் கூட்டு சார்வாக வடித்துப் பின் சாத்தக் கேளு
நியமமாங் கணபதியுங் கந்தன் பூசை நிறைவாகச் செய்துமே நெல்ப்புடத்தில்
முன்பு தாய் முப்பது நாள் வைத்தெடுத்து முறையோடே முக்களஞ்சி நெய் தான் கொள்ளு
சொன்னதொரு நாளொன்றுக்கிரு நேரம் கொள்ளு தொலையாத வியாதி யெல்லாந் தொலைந்து போமே.
114. தொலைந்தோடும் சயமீளை காசம் பித்தம் சொல்லரிய தலை நடுக்கல் சொல் மாராட்டம்
உலந்து போம் உஷ்ணமொடு பிரமி மேகம் மூத்திரக் கிரச்சியொடு கல்லடைப்பு
அளிந்தோடும் பெரும்பாடு ரெத்தம் சாய்ப்பு அனலோடு மேலெரிவு உஷ்ண காந்தல்
மலைந்து போம் முயல் வலிப்பு யிருமலீளை வாய்லோடு நீர்ச் சிரப்பு வெட்டை போமே.
115. பேர்மென்ற பன்றி பற்பம் போட்டுக் கொள்ளு பொல்லாத நோயெல்லாம் பொடியாய்ப் போகும்
தேமென்ற கெற்பத்தி லெழுந்த நோயும் தீர்ந்து விடு மலடிக்கும் பிள்ளையுண்டாம்
காமென்ற பத்தியந்தான் சாந்தமாய்க் கொள்ளு கைப்போடு புளிப்பு ரெண்டுந் தள்ளிப் பாரு
காமென்ற கனை வேகமெல்லாந் தீரும் கை கண்ட வித்தை யிது கண்டு பாரே.

116. __பீனிசம் ஏழுக்கும் தயிலம்__:-

பாரப்பா ஏழுவகைப் பீனிசமும் போக பாடுறேன் வெகு சுருகோ ரெண்ணை
காரப்பா நல்லெண்ணை படிதான் ரெண்டு கரிசாலை அவுரி கஞ்சா பொன்னாங்கண்ணி
ஊரப்பா வெத்திலைச் சார் முசுமுசுக்கைச் சாறும் உள்ளிலத்தி முக்குறட்டை அத்திப் பட்டை
ஆரப்பா வகைக்கு ஒரு படி தான் சாறு ஆதண்டைச் சாறு படி ரெண்டு வாரே.
117. வாரே நீ பழச்சாறும் ஆவின் பாலும் வாரு நீ யொன்று வுச்சி சாறும் ரெண்டு
காரே நீ கருஞ்சீரகம் கடுகுரோகணி கஸ்தூரி மஞ்சளோடு கடுக்காய் தான்றி
கூறே நீ யதிவிடையம் அரத்தை சுக்கு கோஷ்டமொடு சதகுப்பை குரோசாணி ஓமம்
சேரு நீ நாகப்பூ தாளிச பத்திரியும் திப்பிலியின் மூலமொடு சித்திரமூலம்.
118. மூலமாம் பெருங்காயம் நெல்லி முள்ளி சிறுகறனை யளிஞ்சி நொச்சி
பாலமாம் வகைக்கு ஒரு களஞ்சி வீதம் பசுஞ் சாற்றிலாட்டி யெண்ணையிலே போடு
ஆலமே அடுப்பேத்தி எரித்துக் காய்ச்சி அப்பனே மெழுகு பதமறிந்து நீயும்
மேலவே முருங்கைப்பூ ஒரு படி தான் போடு யிதமாக வடித்திட்டுப் பூசை பண்ணே
119. பண்ணுவது கந்தரெடு கணேசன் பூசை பண்ணியே நாளுநாள் வட்டம் மூள்கு
எண்ணுவது சீயக்காய் பசும் பயறு தேய்த்து யிளவெந்நீர் முழுகு நாள் புளியாகாது
மண்ணுவது மறுநாள் தான் கட்டிக் கொள்ளு மைந்தனே யிப்படி நீ மூழ்கும் போது
ஒண்ணுவது சிரசிலுள்ள நோய்களெல்லாம் மோடிவிடு மேழு வகைப் பீனிசமும் போமே.
120. போகுமே தயிலங்கள் மூழ்கும் போது புளியோடு புகையிலையும் பொன்னுமாகா
ஆகுமே கைப்போடு புளிப்பு மாகாள் அப்பனே மற்ற நாளெல்லாங் கூட்டு
யேகுமே செய்முறையும் கை முறையும் பார்த்து யிதமாகச் செய்திடில் ~~[illegible]~~ வியாதி தீரும்
ஆகாத வளி விடும்பு செய்வாருமில் அவருக்கு மருந்தொன்றுமாகா பாரே.

121. __ஆக்கிராணம்__:-

பாரே நீ பீனிசங்களெல்லாம் போகப் பாடுறேன் ஆக்கிராண முப்பத்திரண்டும்
ஆரே சுண்டை வேர் சமுத்திராப் பழமும் அரத்தை சுக்கு அக்கிரக் காரம் மதி விடையம்
கூரே நீ திப்பிலியுந் திப்பிலி மூலம் சீருசாணி வாலுளுவை சித்திர மூலம்
காரே நீ கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள் கடுகுரோகணி பெருங்காயம் கண்டந் திப்பிலியே.
122. திப்பிலியும் சாம்பிராணி பேரரத்தை திறமான யளிஞ்சி வேர் வேப்பரிசி கடுகு
செப்பாதே எருக்கிலை மேல் சுண்ணையுங் கூட்டி திறமாக வகை வகைக்கு களஞ்சி தாக்கு
கப்படியாந் தாதுவளை கண்டங்காலி கடிதான சிறுகறனை வெள்ளைச் சாறின் வேர்
ஒப்பரிய பெரு மருந்து பங்கம் பாளை உத்தாமணியோடு கடலிருஞ்சி பொன்னே.
123. என்னவே தைவேளை குப்பை மேனி யிலை தனிலே வகை வகைக்கு களஞ்சிடை வேர் கூட்டி
வின்னவே யத்திப் பாலும் வெள்ளாட்டின்னீரும் விட்டுலக்கி யிடித்துத் தான் சீலை வடி கொண்டு
என்னவே எட்டியுடன் சிமிள் தான் நன்றாயில்லாட்டால் பேய்ச் சுரையின் குடுக்கை யிலே யடைத்து

124. போமென்ற பொடியதனை கடலாசி தன்னில் புகட்டியே திரியாகத் திரித்துக் கொண்டு
நாமென்ற நிம்பெண்ணை கொளுத்தி யாத்தி நவமான புகையதனை நாசிக் கேற்ற
ஓமென்ற கபால சன்னி மண்டைக் குத்து ஒருத்தலை நோய் நீர்ப் பாச்சலோடு பித்தம்
காமென்ற கபாலத்தில் வாய்வு சூலை கரப்பனொடு கண்ரோசி கண்ணப் புத் தே.

125. புத்தால் எழு வகைப் பீனிசமும் போகும் பொல்லாத சிலதோஷம் புகை நீர்ப் பாச்சல்
சுத்தான கபாலத்தில் விப்புருதி சூலை காசமொடு புண் புரையுங் காணதோடும்
மத்துமுள்ள அந்த நோய் செவிநோய் கண்ணோயும் மகத்தான சன்னி வகை போணதும் போகும்
சித்தான சிரசிலேய் தொண்ணூறாக்காரம் தீருமென்று பிரம முனி செப்புவாரே.

126. செப்பியதோர் மானிடர்க்குச் சன்னி தோஷம் சிறந்தொரு பல்க் கிட்டி முச்சடக்கமாகில்
நம்பியே ஆக்கிரணம் பனைவிடை தான் கொண்டு நவச்சாரம் பனைவிடை தான் கல்ச் சுண்ணம் கொஞ்சம்
நம்பியே மற்றுத்து நாசிக்கேத்த நாடாது பல்க்கிட்டுச் சன்னி தீரும்
நப்பியே யின்னமொரு சேதி கேளு உத்தமொரு சடத்திலே ஆராப் புண்ணே.

127. ஆறாத புண்ணுக்கு :-

புண்ணென்ன மேகத்தி லெடுத்த ரோகம் புரையோடி ஆறுத புண்களுக் கெல் லாம்
அன்னென்ன ஆக்கிரணம் கழிஞ்சி கூட்டி அரிதாரம் சாதிலிங்கம் ரசகற்பூரம்
கன்னென்ன கொடிக் கள்ளிப் பட்டைத் தானும் கழுதை லத்தி உலத்தித் தாள் கலந்து கூட்டு
வீணென்று வகை வகைக்கு கழிஞ்சு கூட்டு விரலிடு நீ திருகு கள்ளிப் பால் தான் விட்டே.

128. விட்டதனை யரைத்துலக்தி வைத்துக் கொண்டு விதமான புங்கு புளி தணல் ரெண்டொன்றில்
விட்டதின் மேல் தணலில் பொடியைப் போட்டு மேலே தான் கன் சிரட்டை கொண்டு மூடி
யிட்டதனை வியாதியின் மேல் புகையைக் கொள்ளு வெடி சூலை மேக வெடி கிரந்தி யரையாப்பு
கிட்டமுடன் பவுத்திரமும் அழுகண்ணி குட்டம் தீராத களிப்புண்கள் தீரு மென்னே.

129. தீருமென்ற பொடியதனை யலரிப் பாலில் சேர்த்து நீ யிடித்லத்திச் சீலை யிலே யூட்டி
ஆறுவென்று ஆறுத புண்ணு மேல்ப் போட யழுகி விழும் கிரந்தி குழிவாளைப் புண்ணும்
தீருமே குஷ்டமொடு குறை நோய் புண்ணும் தேகத்தி லெழுந்த தொரு நோய் களெல்லாம்
காரு நீ கண் காணதோடுமப்பா கடிதான பத்தியந்தான் கண்டு கொள்ளு.
மூன்று நாள் புகைதான் கண்டிப்பாய் ஆறுநாள் பத்தியந்தான் காரு
சென்று தான் ஏழா நாள் தலை நீர் வார்த்து சிறப்பாக உப்பதனை வறுத்துக் கூட்டு
முண்டு செய்யா ம பத்தான் விளக்கெண்ணை தேய்த்து முழுகிய பின் மற்ற தெல்லா முண்டு தேறு
சென்று வரும் புகை வேகம் யென்ன சொல்வேன் தீராத நோயெல்லாந் தீரும் பாரே.

130. விஷமுட்டித் தயிலம் :-

தீரவே விஷமுட்டித் தயிலங் கேளு தீராத கரப்பனொடு அழுகண்ணி சூலை
மாரவே செவ்வட்டை மரவட்டை செய்யான் வண்டு கடி புலிச் சிலந்தி புடையன் குத்து
பேரா பில்லி வஞ்சனை ஏவல் சூனியம் பிசாசு முதல் பூத வேதாள மோடு
மாறுத குஷ்டமொடு குறை நோய் தீர மைந்தனே தயில மொன்று விளம்பக் கேளே.

131. விளம்பவே யெட்டி யோறிஞ்சி சங்கு வன்னி புங்கு வண்டு கொல்லி சங்கங் குப்பி
அளம்பவே அடம்பு சின்னி ஆப்ப் பட்டை அரளி வேர் வெள்ளெருக்கும் மருக் காரை யிண்டு
குளம்பவே சிவந்த நாயுருவி கொற்றான் குன்றி மணி யாவாரை கடுத்தக் கன்னி
வளம்பவே சிவனார் வேம்பு கழுதை முள்ளி மருகாளி தானீச்சு கருங்காலி புரசே.

132. புரசான உள்ளலத்தி திருவை வாகை புலி நடக்கி கருஞ் சூரை கரந்தை மத்தை
விரசான கொடிவேலி அமுக்கிரா தேக்கு விடத்திரையின் பிலாசு பிலா மிளகறணை குமரி

யரசோடு பூவரசு மருது கொன்றை ஆத்தாளி களக் கொட்டி செங்கத்தாரி
சரி குவளை பெரு மருந்து காட்டுள்ளி யவுரி சமனிடை தானிலை யெல்லாத் தரித்துலத்தே.

133. உலத்தியே பெரும் பாண்டத்திலிட்டு நீயும் குழிப் புடத்தில் தயிலம் வாங்கி
அலத்தியே முன்னும் அண்டங் காக்கை யழுங்கோடு கருகாமை ஆந்தை கூகை
புலத்தியே தேவாங்கு பச்சோந்தி முசுரு பசுந் தவளை பெருவிரியன் பச்சைப்
பாம்பு
யலத்தியே பன்றி விட்டை கழுதை லத்தி ஆனை லத்தி பரிக் குளம்பு எருமை
முலத்தியே தலை முண்டை கழுதை மண்டை முயல் புழுக்கை வாலோடெலிப்
பூ புழுக்கை யென்னே.

134. என்னவே ஒட்டை லத்தி வெள்ளாட்டுப் புழுக்கை யிவை யெல்லாம் சமன் கொண்டு
யிடித்துலத்தி
தன்னவே சீவ செந்து வகைகளெல்லாம் சமூலமு மிடித்துலத்தி ஒக்கச் சேர்த்து
பன்னவொரு பாண்டத்திலிட்டு மூடி பதறாதே குழிவெட்டி யடிக் கலசம் வைத்து
தன்னவே குழிப் புடத்தில் தயிலம் வாங்கி தவறாமல் முன் தயிலத்தோடொக்கச்
சேரே.

135. சேருமே ரெண்டு வகைத் தயில மொன்றாய் சேங்கொட்டைத் தயில மொரு படி
யரைதான் வாரு
காருமே குங்கிலியங் களஞ்சி யெட்டு கார்த்திகைப் பூடு களஞ்சி யெட்டு
ஆரு நீ கருஞ்சீரகந் தானெட்டு யளகான தேவதாரம் கஸ்தூரி மஞ்சள்
சேரு ரச கற்பூரம் களஞ்சி யெட்டு சென்ன கரப்பட்டை யொரு பலந்தானென்றே

136. பலமொன்று பறங்கிப் பட்டை பலந்தான் ரெண்டு பாங்கான கஸ்தூரிப் பட்டை
பலம் ரெண்டு
பலமான பிரம்போடு கிழங்கு பலந்தான் ரெண்டு பேரான வலம்புரிக்காய் வாலு
ளுவை கடுக்காய்
யலையாதே வகை வகைக்குப் பலந்தானென் ஆட்டுவாள் கொடிக் கள்ளிப் பால்
ஒதியம் பட்டைச் சாறு
மலையாதே விட்டரைத்து அதிலே வாரு மருந்தான. ரோக மெல்லா மாண்டு
போமே.

137. மாண்டு போம் பூதப் பிசாசு வேதாளம் மருண்டோடும் வஞ்சினையும் பில்லி சூனிய
மும்
மாண்டு போம் சொறி நோவு சிரங்கு குஷ்டம் மாறும் அழுகண்ணி வாத சன்னி
மாண்டு போம் யிவை யெல்லாந் தயிலம் பூச மயிலெண்ணை வேப்பெண்ணை சேர்த்
துக் கொள்ளும்
மாண்டு போம் சறுவாங்கந் தவளையோடு மக்த நாள் வேது விட்டுக் குளித்துப்
போடே.

138. ஒளிக்கவே தழுதாழை கரந்தை நொச்சி குன்று மணி சங்கங் குப்பி வாத மடக்கி
களிக்கவே நோயறிந்து வேது கட்டு கைப்போடு புளி புகையுந் தள்ளிப் பாரு
களிக்கவே உப்புதலை வருத்தக் கட்டு வெள்ளாடு முயலுடும்பு பயிரை விரால்
தேளி யாகு மென்பார் குணமான வியாதியுட கறிந்து கட்டே.

139. <u>வாத மென்பதுக்கும் குமட்டிக்காய் பதங்கம்:-</u>
கூறவே குமட்டிக்காய்ப் பதங்கஞ் சொல்வேன் கூறியதோர் வாத மென்பதுந்
தான் போக
கூறவே தழுதாழை ஆயில் பட்டை கொடிவேலி பாவட்டை யழுக்கிறா வேர்
மூறிட வெண் சாறணை சத்தி சாறணை முடக் கொத்தான் பெருவாகை நாதவளை
சடைச்சி
தேறியமை தைவேளை குப்பை மேனி சிவன் வேம்பு பிரம்பிட கிழங்கு சங்கு
மாறிவிடும் அவரி யொடு வில்வலை வேரும் மாவிலிங்கம் வகை வகைக்குப் பலந்
தானென்றே.

140. ஒன்றாக யிவை யெல்லாம் சூரணமே செய்து உத்தமனே கண்ட திப்பிலி சிராம்பு
ஓமம்
தின்றுவால் மிளகு தாளிச பத்திரியும் திப்பிலியும் வாலுளுவை திப்பிலி மூலம்
யன்றான சதகுப்பை பறங்கிப் பட்டை அரத்தை சுக்கு அதிவிடையம் சிறுநாகப்பூவே

141. பூவான கருஞ்சீரகம் வகைக்கு நாற் களஞ்சு பொடித்து நீ முன் மருந்தோடொக்
கச் சேர்த்தே
தேவோடு கல்வத்திலிட்டுக் கேரு திருகு கள்ளிப் பாலோடு
உத்தாமணிச் சாறும் பாலோடு வாக்கதனை யரைத்துலத்தி
பக்குவமாய்ப் பேய்க் குமட்டிக்காய் தான் கேரு சோவோடு வெண்முடி வேது
கொண்டு வந்து
குடைந்துள்ளே சதையோடு விரையும் போக்கே.

142. போக்கியே மருந்தெல்லாம் காயினுள்ளே புகட்டி யந்தக் கோட்டாலே மேலே
மூடி
யேக்கியே பாண்டத்திலிட்டு நீயும் மேல் மூடிச் சீலை செய்து குழிதான் வெட்டி
கேழ்க்கவே வெள்ளாட்டுப் புழுக்கை மைந்தா கீழ் மேலு மிட்டு நடுப் பாண்டம்
வைத்து
பாக்கியே புடம் போட்டு ஆறவிட்டுப் பாரு பக்குவமாய்க் காயெல்லாம் சிவந்து
காணே.

143. காணுவதுக்கு காமல் யிப்பூரல் வாங்கிக் காயெல்லாம் ஆற விட்டு மருந்தைக் கொட்டி
போனியே குங்குமப்பூ சாதிக்காயும் போட்டு நீ பொடி செய்து வைத்துக் கொண்டு
ஆவது வெருகடி அளந்தி சந்தி அப்பனே மூன்று நாள் ஆறு நாள் கொள்ளு
காணுவது வயறு ளைந்தால் நிறுத்திப் போடு கலங்காதே யெருமை மோர் சோறுண்ணே.

144. உள்ளவே வாதமெல்லா மோடிப் போகும் உத்தமனே கைப்பு புளிப் புகையுந் தள்ளு
மள்ளியே வாதத்துக்காகா தெல்லாம் மைந்தனே தள்ளுமக்க திர்சா பத்தியம்
கண்ணுவது உப்புதனைக் கூட்டு காண கண் காணுதோடுமடா வாத சூலை
ஒண்ணுவது காலு கை முடக்கிருப்பு வாதம் உத்தமனே பக்க வாத மோடும் பாரே.

145. <u>சயமீளை மந்தார காசத்துக்கு லேகியம்</u>:-
பாரே நீ சயந்தீர ஆடாதோடை பாடுகிறேன் ஆதலை சிறுகாஞ்சோறி
காரே நீ முசுமுசுக்கை கண்டங்காலி கரிசாலை முள்ளங்கி மணத்தக்காளி
சேரே நீ சிறுக மிஞ்சி வாதலையுஞ் சங்கு சேர்த்து நிலையாவாரையும் குரனைமே செய்து
காரே நீ கடுக்காயுங் கோஷ்டந் திப்பிலி கருஞ்சீரக மிளகு வசம்பிந்துப்பே.

146. உப்பான் சித்தரத்தை பேரரத்தை உத்தமனே வாலுளுவை கூகை நீர்
செப்பாதே சீரகமும் கற்கடக சிங்கி சிறுநாகப்பூ வோடு நெல்லி முள்ளி
உப்பான வகை வகைக்குக் கால் பலமே ஆக்கி உத்தமனே யிடித்து நன்றாய் முன் மருந்தில் சேர்த்து
செப்பாதே ஆவின் நெய்யைப் படி தான் வாரு சிறப்பான வெள்ளாட்டின் பால் படிதான் வாரே.

147. வார்த்துமே அரக்காம்பல் சாறு படி வாரு வளமாக யடுப்பேத்திக் கொதி யிடும் போது
பார்த்துமே பனங் கல்கண்டு பலந்தானும் பழைய வெல்லம் பலம் நாலு போட்டுக் காச்சு
சோர்த்துமே பாகுவரில் சூரணத்தைக் கொட்டிக் கிண்டு கொம்புத் தேனொரு சேரை கூட வாரு
ஆத்துமே லேகியமாய்ப் பண்ணிக் கொண்டு அந்தி சந்த நாளொன்றுக்கிரு நேரம் கொள்ளே.

148. கொள்ளுவது பவள பற்பம் அரிதார பற்பம் கூட்டியே நேரமொரு பாக்களவு கொள்ளு
தள்ளாதே மண்டலமே கொள்ளும் போது சயமீளை கபமிருமல் மந்தார காசம்
விள்ளாதே ஓடிவிடும் சயரோகம் மேலும் மேக வகை கிரந்தி குட்டம் உஷ்ண வாய்வு
கள்ளமாம் வியாதி யெல்லாங் காணதோடும் கை கண்ட வித்தை யிது கண்டு பாரே.

149. பாரே நீ கைப்போடு புளிப்புந் தள்ளு பசுவின் நெய் வெள்ளாட்டு மாங்கிஷ முங் கூட்டு
சேரே நீ ஆவின் பால் வெள்ளாட்டின் பால் திகழ்ந்த தொரு சீனியிட்டுக் காய்ச்சிக் கொள்ளு
சேரே நீ பத்தியந்தானிம் முறையைச் செய்து சார்ந்து பார் சண்டாள ரோகம் போகும்
யேரே நீ தலை முழுக ஆவின் நெய்யாம் யில்லாட்டால் முக்கூட்டு யெண்ணை முளிகே.

150. <u>அரிதார பற்பம்</u>:-
முருகவே யரிதார பற்பஞ் சொல்வேன் முனையான அரிதாரம் பலந்தானென்று
தேளால கல்ச் சுண்ணம் படி தானென்று தேசி நீர் படி ரெண்டு செப்பக் கேளு
வாழ்கவே புதுச் சட்டி தன்னிலே தான் வளமான கல்ச் சுண்ணங் கீழ் மேலிட்டு
நாள்கவே யரிதாரங் கிழி போல்க் கட்டி நடுவே நீ கிளி வைத்து தேசிநீர் வாரே.

151. தேசி நீர் தன்னிலே உவர்ப்பூ விட்டு தெளிய வைத்து தெளிவிறுத்து வார்த்து நித்து
ஊசியே யிப்படியே யேழு தரந் தீர்க்க அரிதாரம் மஞ்சள் கக்கி வெள்ளையாகும்
மாசியே யிதை யெடுத்து மறு சட்டியிட்டு மைந்தனே யடுப்பேத்தி யீருள்ளிச் சாறு
காசியே படி யொன்று தரந்தைச் சாறென்று கலந்து மொரு சுருக்கிட்டுக் கருதிக் கேளே.

152. கருதியே புரசம் பட்டை புளியம் புறனி கன்மான நாயுருவி சுட்ட சாம்பல்
கருதுவேன் வகைக்கு ரெண்டு படிதான் சாம்பல் கலந்துமே சட்டியிலே கீழ் மேலிட்டு
யருதியே தாளகத்தில் கவசங் கேளு அண்டோடும் உவர்ப்பூவும் தலை மண்டை யோடும்
வெருவியே அன்ன நீராவின் பாகும் விட்டரைத்து மேல்க் கவசங் கட்டிப் போடே.

153. கட்டியே ரவியிலிட்டு உலர்த்தி பின்பு கமமான சாம்பலிலே நடுவே வைத்து
சட்டியை மேல் சட்டி கொண்டு மூடி சந்து வாய் சீலை செய்து அடுப்பிலேத்தி
கட்டியே தென்னமட்டை தென்னை வேராதல் கமலம் போல எரித்திடுவாய் நாலு சாமம்
அட்டியில்லா தெரித்து நீ யாற விட்டுப் பாரு அரிதாரம் நீறுமப்பா ஆர் சொல்வாரே.

154. சொல்லாத பற்பமொரு பணவிடை தான் மைந்தா சுகமான நெய் தேனில் கூட்டிக் கொள்ளு
கொள்ளாத சயமீளை மந்தார காசம் குலைந்தோடும் கிரந்தி யரையாப்புக் குட்டம்
சொல்லாதே வேதை யிட்டாலேழு மாத்து சுருக்காகும் ரச பற்பம் சேர்த்துக் கொண்டால்
கல்லான வியாதி யெல்லாந் தீருமப்பா கை முறையாய்ச் சொல்லி விட்டேன் கண்டு பாரே.

155. <u>பவழ பற்பம்:-</u>

பாரே நீ பவழ பற்பம் சொல்லக் கேளு பாங்கான நற்பவழம் பலந்தான் ஆக்கி
நேரே நீ யிலந்தை யிலைதனை யரைத்து ரெண்டாய்ப் பிடித்து அதின் மேலே பவளம் வை;
பேரே நீ மேலுமந்த யடையால் மூடி பொருந்தவே சீலை செய்து முளப்புடத்தில் போடு
ஆரே நீ யாற விட்டு எடுத்துப் பாரு அப்பனே பவள மெல்லாம் பீங்கானிலிட்டே.

156. யிட்டுமே ஆவின் பால் நிறைய விட்டு என் மக்களாவியிலே வைக்க நீறும் பாரு
திட்டமாய் பவள பற்பம் யாரும் சொல்லார் செப்பாதே வெகு சுருக்கு திறமாய்ப் பாரு
கொட்டாதே பற்பமொரு பணவிடையே ஆக்கு கொம்புத் தேனில் நெய் பாலுங் கூட்டிக் கொள்ளு
தட்டாதே மேகமோடு குடு காந்தி சயமீளை யிளைப்பிருமல் நீர்ச் செருப்புப் போமே.

157. <u>சிங்கி பற்பம்:-</u>

போமென்ற சிங்க பற்பம் சொல்லக் கேளு புகழான கலைக் கொம்பு பிளந்து நாலாய்,
ஆமென்ற மேனியிலை ~~ஆமென்ற மேனி தன்னிலை~~ யரைத்து அப்பனே முளப் புடத்திலிட்டு வாங்கி
தேமென்ற நீறுமது தீர்க்கமாக திரமான ஆவின் பால் விட்டரைத்து
வேமென்ற வில்லை தட்டிக் காய வைத்து விதமாக ஓட்டி லிட்டு மோலோடு மூடி
தாமென்ற முளப் புடத்திலிட்டு வாங்கு சங்கு போல் நீறியது தவளமாமே.

158. தவளமாம் பற்பம் ரெண்டு பணவிடை ஆக்கிக் கொண்டு சார்வான ஆவின் வெண்ணை தன்னில் கொள்ளு
தவளமாய் மேகமொடு உஷ்ண காந்தி தலையாத எடெரிவு நீர்க் கட்டு நீர்ச் செரிப்பு
தவளமாய்ப் பவள பற்பம் சேர்த்துக் கொள்ளு கல்லடைப்பன் நீரடைப்பான் கச ரோகங்கள்
தவளமாஞ் சயமீளை ஜூரமாங்கிஷங்கள் தலையாத வியாதி யெல்லாம் தலைந்து போமே.

159. போமென்ற தந்த நோய் முப்பத்திரண்டும் போகவே உப்பு ஒரு பலந்தான் வாங்கி
வேகவே எருக்கம் பால் மேனிச் சாறும் விட்டரைத்து வில்லை தட்டிக் காய வைத்து
ஆமென்ற ஓட்டிலிட்டு ஓடு மூடி அப்பனே முளப் புடத்திலிட்டு வாங்கு
ஆமென்ற பொடி செய்து வேறே வைத்து அயப் பொடியுந் தரிசு நந்தங் காசுக் கட்டி.

160. கட்டியொடு கருஞ்சீரகம் கண்டங்கத்திரி விரையோடு களிப் பாக்கு வகை வகைக்கு
ஒட்டியே களஞ்சிடை தான் சமமாய்ச் சேர்த்து உத்தமனே அயக் கறண்டி தனிலிட்டு
ஆட்டியே வறுத்து நன்றாய் கல்வத்திட்டு அதிலோடு கொட்டாச்சிக் கரியுஞ் சேர்த்து
யிட்டுமே பொடி செய்து முன் பொடி யோடொக்க யிடைப்பாகங் குறையாமல் சமமாய்ச் சேரே.

261. சேரே நீ கொப்பளிக்கக் கசாயங் கேளு திரமான கடுக்காயும் சுக்கான் கல்லும்
ஒரே நீ முடக் கொற்றான் கருவேலம் பட்டை ஒரிகாலை நீர்ப் பூலா யிலை தானும்
பாரே நீ யிடித்து மொரு பாண்டத்திட்டு பதக்கு நீர் விட்டெரித்துக் கசாயம் பண்ணி
காரே நீ யிப்பொடி யெடுத்துத் தந்த சுத்தி செய்து கசாயத்தை வார்த்து நீ கொப்பளித்துப் போ

262. போடவே பல்லசைவு தந்த வாய்வு பொல்லாத பல் மத்தப் பல்லறனை
ஓடவே பல்ப் புழுவு பல்லுக் கூச்சம் முகலாத சன்னியொடு தந்த சன்னி
நீடியதோர் பல் வாதம் பல்லு ஊச்சல் நேத்திர நோய் வேர் வெட்டுச் சொத்தைப் பல்லு
பாடியதோர் தந்த நோய் முப்பத்திரண்டும் பறந்து போம் பொடியிட வேகந் தானே.

163. செற்ப நோய்க்கு என்னை :- 7.1.64

பறந்து போம் செற்ப நோய் தீர வேண்டி பாடுகிறேன் விளக் கெண்ணை படிதான் ரெண்டு
விரைந்திட்ட பேய்க் குமட்டிச் சாறு படி ரெண்டு வேப்பம் பட்டைச் சாறு ரெண்டு களக் கொட்டிச் சாற்படி
ரெண்டு முறைக்கிட்ட அம்மேலி பிரமிச் சாறு முடக் கொத்தான் உள்ளலத்தி காட்டுள்ளிச் சாறும்
யிருந்திட்டட வகை வகைக்கு ரெண்டு படி தான் சாறு என்னையிலே வார்த்திடு நீ யின்னங் கேளே.

164. கேளாய் நீ கொடிவேலி பங்கம் பாலை இருவை நிலையாவாரை குருந்து சங்கு வேளே நீ முன்கிலை கஸ்தூரிப் பட்டை வெள்ளருகு தலை சுருளி காக்கட்டான் குமரி
வாளே நீ வெள்ளைச் சாறணையிறேடு வகை வகைக்கு ஒரு பல்ந்தான் வரிசையாக
கோளே நீ கொடிக் கள்ளிச் சாற்றுலாட்டிச் சுளப்பியே யென்னையிலே கரைத்து வாரே.

165. வாரே நீ கடுகோடு திப்பிலியுங் கடுக்காய் வால்மிளகு குரோசாணி கடுகுரோகணி
ஆரே நீ கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள் அரத்தை சுக்கு வால்மிளகு சிறுநாகப்பூ பேரே நீ யிந்துப்பு ஆனைத் திப்பிலி பெருங்காயம் சாதிக்காய் தாளிச பத்திரியும்
யேரே நீ செங்கொட்டை ரச கற்பூரம் யிஞ்சியொடு யவச்சாரம் யியம்பக் கேளு.

166. யியம்புறேன் வகைக்கு நாற் களஞ்சு வீதம் எரிகாலன் சாறோடு வெள்ளாட்டு நீரும்
வயம்பாதே விட்டரைத்து யென்னையிலே வாரு அடுப்பேத்தி யெரித்து நீ மெழுகு பதம் பாரு
அயம்பாத வடி கலசந் தன்னில் சேரு ஆகாசத் தாளோடு வெங்காரம் ரெண்டும்
வளமாக வகைக்கு ரெண்டு களஞ்சு போடு வடித் தெடுத்த என்னையை நீ வைத்துக் கொண்டு
நயம்பாதே தாரஊத்தி மூன்று நாளும் நாளொன்றுக்கோர் கறண்டி என்னை சொன்னேன்.

167. என்னைதான் மூன்று நாள்க் கொள்ளும் போது என்ன சொல்வேன் செற்பமேயெரு மெங்கே.
தன்னலே குக வாய்வு கிரச்சி குன்மம் தலைந்தோடும் செற்பக் கிறுணி வாய்வு தலை
வின்னவே பத்தியந்தான் மூன்று நாளும் வெள்ளாட்டுப் பாலெறிய சோறென்றுகா அன்னவே பாலிதேழ்ள நீராகும் அப்பனே நாலா நாள் தலை நீர் வாரே.

168. வார்த்த நாள் முதல் மறு மூன்று நாளும் மைந்தனே ஆவரயிலை சிறுவை யிலை ரெண்டும்
ஆதிருமே அயவிரலி யிலையுங் கூட்டி அரைத்தாவில் பால் வென்னை யதனில் கொள்ளு
ஏத்துமே ஆறு நாள் என்னை மூழ்கி ஏழா நாள் நாயகமேடினங்கச் சொன்னேம் போக்கரிய மலடியுமோ பெறுவாள் பிள்ளை பெண் மலடே யுலகத்திலில்லை காணே.

169. இல்லையப்பா கை கண்ட வித்தை பாரு யிருசியே யாருளம் பிள்ளையுண்டு தொல்லையே பிசாசு பிலி கிரக தோஷம் போகவே சாந்தி செய்ய தகடு செய்து
அல்லவே நோயோடு பேயுங் கூடில் அவிழ்தந் தானென்ன செய்யு மப்பா கேளு டில்லவே மனி மந்திரமுன்னே செய்து மறுபடி நீ யிம்மருந்து செய்யப் பலிக்கும் பாரே.

170. பலிக்கவே அயத் தகடு சதிரமாகப் பன்னியே யிருலக்கந்சரை தான் கீறி பலிக்கவே யறை தோசத் சிவாய நம வென்று மனைய வசியென்ற சனை மாறிப் போடு
சுளிக்கவே சுத்தெல்லாம் ஓம் போடு குலத்தின் நனி கோறு மாகாரம் போடு அளிக்கவே யறைதோசம் ஒங்காரம் போடு அன்பக்கோண லெக்கம்மி லடைத் திடாயே.

171. அடைத்திட்டு நோயாளி பேரமிட்டு அயங் காய தேசியுட கருவும் பூசி கடுத்திடவே லெட்சமுரு வேறச் செய்து சாந்தி செய்து ஓமம் செய்து சாபம் நீக்கி
நொடிக்கிட்டு கும்பத்தில் சலத்தை வாங்கி நோயாளி சிரசிலே புரோட்சித்து நீயும்
வடித்திட்டு யிப்படியே தகடு செய்து வயித்தியரே பின்பவர்க்கு மருந்து செய்யே.

172. செய்திடவே தீராத நோயு முண்டோ தேசத்திலுன் போலே வயித்தியர் தானுண்டோ
நொய்யாதே நோயாளி சொல்லக் கேளு நோய் தீர வயித்தியனை உபசாரம் பண்ணு
மெய்யனே யென்று குரு பாதம் போற்றி மேதினியில் தான தர்மஞ் செய்து வாநீ
அய்யனே வினையெல்லா மகலப் போகும் ஆதவன் போல் நீடூழி வாழ்வாய் தானே.

173. வர்மலே யென்னையிலே நவச்சாரம் போட்டு மைந்தனே நீர்முள்ளிச் சாறும் விட்டு
வாழ்கவே உள்ளுக்குக் கொள்ளச் சொல்ல மகோதரம் நீராம்பல் பெருவயறு சூலை
போகுமே பொல்லாத குன்ம மெட்டும் பித்தமோடு உள்மாந்தை பாண்டு சோகை
யேகுமே கரப்பனொடு வாதசூலை யிந்திர கண்டி மலக்கட்டு யிரைச்சல் வாய்வே.

174. வாய்வோடு புழுக்கிருமி யெல்லாம் போகும். வாகு பெறச் சொல்லி விட்டேன்
என்னை தன்னை
வா.ய்வோடு வியாதிகட்கு மலடி கட்டும் சொன்னேன் நோயேது அவர்கள் செய்த
கர்மம்
நோய் போலே அவர்வரைத் தொடர்ந்த தப்பா நாயைப் போலே அலையாதே
சொல்லக் கேளு நலமான கர்மத்தைத் தீரச் செய்யே.

175. தீரவே தானதர்மஞ் செய்ய வேணும் சிவபூசை குருபூசை செய்ய வேணும்
தீரவே கோவில் குளங்கட்ட வேணும் சிலையங்கள் திருவிளக்கு வைக்க வேணும்
தீரவே அன்னதானங் கன்னிகா தானம் திருவரசு நந்தவனம் செய்ய வேணும்
தீரவே தர்மத்தை விரும்ப வேணும் தீராத தீவினைதான் தீர வென்றே.

176. தீரவே வயித்தியனை உபசாரம் பண்ணு திறமாக வாகி மகன் வயித்தியனே யாகில்
தீரவென்று சாஸ்திரத்தை ஆய்ந்து பார்த்து செய் முறையுங் கை முறையும் திரமாய்
செய்வான்
ஆரென்று வேத நூலறியா மோடா அகப்பட்டபடி செய்வார் ஆகாதென்றும்
காரென்று குருபதத்தைப் போற்றி செய்து கை முறையாய் மருந்து செய்யில் பலிக்
கும் பாரே.

177. பாரே நீ நிலவாகைச் சூரணத்தைக் கேளு பரிவான நிலவாகை கொண்டு வந்து
சேரே நீ நிழலுலர்த்தி யிடித்து நாளாய் சிறப்பாகப் பலம் பத்து நிறுத்துக் கொண்டு
சேரே நீ மிளகொடு கடுக்காய் தானி சீரகமும் வாலுளுவை சிறுநாகப்பூ
காரே நீ யேலம் லவங்கப் பட்டை கடுகுரோகணி சிவதை தாளிச பத்திரியும்
சேரே நீ சாதிக்காய் கிராம்பு திப்பிலி செவியமுடனிந்துப்பு கதை நீரே.

178. நீதான் சுக்கோடு வகைக்கு கால் பலம் நிறுத்திடித்து முன் மருந்தோடொக்கச்
சேரு நீ
யிரண்டு வகைச் சூரணமும் சமமாய் சீனி சர்க்கரை பாதி சேர்த்துக் கொண்டு
நேரு நீ நாளொன்றுக்கந்தி சந்தி நெய் தேனில் வெருகடி தான் குழைத்துக் கொ
ள்ளு
சேரே நீ மண்டலமே கொள்ளும் போது தீராத நோயேது செப்பக் கேளே.

179. செப்பவே மேகமொடு பித்தம் போகும் சிறப்பான அரோசிகமும் வாய் நீரூறல்
தப்பான மலக் கட்டு வாய்வு கார்ந்தி சூடு கொள்ளல் சொரி சிரங்கு மூல வாய்வு
முப்பொருளு மலக்கியர்கம் பாரு முலத்தில் நோயெல்லா முறிந்து போகும்
செப்பாதே வெகு சூசு யின்னமொன்று சிவனார் வேம்பு சூரணத்தைச் செப்புறேனே

180. சிவனார் வேம்பு சூரணம்:-
சொல்லுகிறேன் சிவனார் வேம்பு சூரணமே செய்ய சுகமாக பலம் பத்து நிறுத்துக்
கொண்டு
மல்லுறேன் சிவன் வேம்பு தயிலந்தாளும் வாங்கியே படியொன்று வேறே வைத்து
அல்லுறேன் வாலுளுவை தாளிச பத்திரியும் அதிகான சிறும்பேலம் அதிமதுரம்
கோஷ்டம்
கல்லுறேன் சாதிக்காய் சாதிபத்திரியும் கருஞ்சீரக மிளகு கடுக்காய் திப்பிலியே.

181. திப்பிலியு மதிவிடையம் பறங்கிப் பட்டை சிறுநாகப்பூவோடு வால்மிளகு
யிப்படியே வகை வகைக்குக் கால்பலமே. தாக்கு. யிடித்து. சிவனார் வேம்பு சூரணத்
தோடொக்க
தப்பாதே சமபாகம். சரிபாதி சீனி சாரித்து ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு
செப்பாதே தினமொன்று வெருகடி தானப்பா. சிவன் வேம்புத் தயிலத்தில் குழைத்
துக் கொள்ளே.

182. கொள்ளவே பதினெட்டுக் குட்டரோகம் குலைந்தோடு மேகசூலை மேகவாய்வு
கள்ளமாங் கரப்பனொடு சொரி சிரங்கு வெட்டை கடி விஷங்கள் சில் விஷங்கள்
விறணங் கார்ந்தி
தள்ளியே நோயெல்லா மோடிப் போகும் சொல்லரிய காய சித்தி சுழுக்கு மெத்
த
கள்ளமில்லை சொல்லிவிட்டேன் சிவனார் வேம்பு கற்பத்தைக் காதியாம் கண்டு பா
ரே.

183. கண்டு பார் சூதகத்தில் உதிரம் போகா காலோடு கை மேலும கடுத்துக் குத்தி
சென்று பார் வயித்திலே சோரை தங்கி திரட்சி குன்மம் வாய்வாகிச் சூலையாச்சு
அன்று பார் சூசிகா வாய்வு மாச்சு அபானமாங் கருக் குளியிலுதிரங் கட்டி
உண்டு திரமுதிரத்தில் வாய்வு சேர்ந்து உள்ளங் கால் நகங்கள் கண்கள் குத்தலாச்
சே.

184. சூதக வாய்வுக்கு:-
ஆச்சென்ற சூசிகா வாய்வு பொல்லாங்கள் தூருந்தால் நீர் கரி யாரப்பா கேளு
பேச்சென்ற கொடிவேலி அருக்கிருவேர் பெருமருந்து கோரை பிறண்டை நொச்சி
சங்கு
வேச்சென்ற மாவிலிங்கை மிளகறணை சொளிஞ்சி வெள்ளைச் சாறணை அடம்பு
கள்ளிப் பீளை

ஆச்சென்ற நிலையாவரையிட்டு அப்பனே வகை வகைக்குப் பலந்தான் ஈக்கே.

185. ஈக்கியே யிடித்ததனை சீலைவடி கொண்டு சூரணமாய் செய்திநியே சொல்லக் கேளு
ஆச்சென்ற வால் மிளகு கடுக்காய் தாளி ஆனைத் திப்பிலி ஓமம் அரத்தை சுக்கு
தாக்கி யிஞ்சி பெருங்காயம் கண்ட திப்பிலி சதகுப்பை கு சாலி திப்பிலி மூலம்
தாக்கியே சாதிக்காய் இரும்பு பத்திரி தாளிச பத்திரியோடு சிறுநாகப் பூவே.

186. பூவோடு திப்பிலியும் இடையமாஞ்சி புகழான செங்கொட்டை ரசகற்பூரம்
கோவோடு வகைக்குக் கால் பலமே ஈக்கு கொள்ளிலைச் சாற் தேங் காய்ப் பால் விட்டு
ஆவோடு முன் மருந்தோடொக்கச் சேரு அப்பபேத்திச் சட்டி தன்னைக் காய வைத்து
கோவோடு நல்லெண்ணை படி காள் வாது கொதிக்கையிலே வெள்ளள்ளி ரெண்டு பலம் போடே.

187. போடவே தோல் போக்கி நெரிக்கப் போடு புகழான பழை வெல்லம் நாலு பலம் போடு
கூடவே ஆவின் பால் படி தான் வாரு அப்பனே மூங்கிலை யரைத்து நன்றாய்
கேடவே தேசிக் காயளவு போடு சேரிக்கக் கிண்டையிலே லேகியம் போலாகும்
நாடியே சூரணத்தைக் கொட்டிக் கிண்டு நீர்பா நெற்பொரி யிதிலே சேரை போடே.

188. சேரையே போட்டு நீ கிண்டி நன்றாய் சேர்த்துமே லேகியம் போல் பண்ணிக் கொண்டு
ஊரே நீ நாளொன்றுக் சந்தி சந்தி அப்பனே கொட்டைப் பாக்களவு கொள்ளு
தேரே நீ வயத்திலே குன்மமேது திரட்சியொடு வாய்வேது உதிர மேகம்
சோரை யென்ற உதிரமெங்கே வாயுவெங்கே குதக வாய்வு குத்தல் உலைந்து போச்சே.

189. போச்சென்ற பத்தியந்தான் சொல்லக் கேளு புளியோடு புகையிலையுங் கைப்பு தள்ளு
சுருவத்தல் வெள்ளாட்டு வத்தல் கட்டு கூச்சென்ற யரைக் கீரை முருங்கைப் பிஞ்சு
ஊக்கச்சக் கருவாடு சோளிச் சாறு ஆச்சென்ற புளியில்லா தவிர்க்கக் கூட்டு
அப்பனே உப்பு தனை வைக்கக் கூட்டே.

190. கூட்டுவை மருந்து கொள்ளும் போது தள்ளிக் கொண்டு மறு பத்தியத்தில் கூட்டிக் கொள் நீ
நாட்டியே இன்மொன் சொல்லக் கேளு நலமான வாதமொடு சூலை ரோகம்
ஓடியதோர் ரோக மெல்லா மோடிப் போகும் பறங்கிப் பட்டை ரசாயனத்தை பாடுறேனே.

191. <u>பறங்கிப்பட்டை ரசாயனம்</u>:-
பாடுறேன் பறங்கிப் பட்டை பலந்தான் பத்து பருத்தக்கையா யிடித்துப் பதங் கங் கேளு
பாடுறேன் புதுக் கலசம் மூன்று வாங்கி பட்டைத் தா ளொரு கலசந் தன்னில் போடு
ஊடுறேன் முழ உயரம் குழிதான் வெட்டி தா ளிட்ட கலசத்தை யடியில் வைத்து
நாட்டியே மறு கலசந் தன்னில் கேளு நலமான கலசத்தாள் தமர் மூன்றிட்டே.

192. யிட்டுமே சுத்தித்த நெல்லிக்காய்க் கெந்தி யிதமாக ரெண்டரையே பல மந்தக் கலசத்திலிட்டு
போட்டு மடிக் கலசத்தின் மேலே வைத்து பொருந்தவே சந்து செய்து மறு கலசங் கலசந் தன்னில்
காட்டுமே ஈரிலே தமர் மூன்றிட்டு கார்த்திகையின் கிளங்குதிலே பலந்தானைந்து
வட்டியில்லா திடித்திந்தக் கலசத்திட்டு அக்கலசம் வாய் மூடிச் சீலை செய்தே.

193. செய்துமே கெந்தியிட்டுக் கலசத்தின் மேலே சிறப்பாக வைத்து நீ சீலை செய்து
செய்யவே கலசம் ரெண்டு மடியில் நிற்க தெரியவே கிளங்கிட்ட கலசமேலே வைத்து
பொய்துமே கலச மூன்றுமொன்றாய் பொருந்தவே செய்துமே புடத்தைப் போடு
எய்துமே கிழங்கிட்ட தயிலந் தாமும் யிறங்கியே கெந்தியிலே யிளக்கங் கொண்டே.

194. இளகியே கெந்தியுடன் தயிலம் ரெண்டும் யிறங்கியே பட்டையிலே ரேசித் தொன்றாய்
பளகியே ரெண்டு வகைத் தயிலந் தானும் பறங்கிப் பட்டை தன்னிலே சொருகி நிற்கும்
மிளக்கமாய் யாரியந்த பறங்கிப் பட்டை யிடித்துமே நன்றாகச் சீலை வடி கொண்டு
விளக்கமாய் புதுப் பானை வாயிலேதான் மெல்லிசான சீலையிட்டு நீ வேடு கட்டே.

195.

195. வேடு கட்டிச் சூரணத்தை யதின் மேல் வைத்து மேல் சட்டி கொண்டு நன்றாய் பொருந்த மூடி
வேடு கட்டும் பானையுட விளாவில் பொக்க விதமான புங்கந் தனையுள்ளே யிட்டு
போடுவது சாம்பிராணி பலந்தான் பத்து பொடி செய்து புகை யெழும்பப் போட்டுவா நீ
யாடுவது சாம்பிராணி யெல்லாம் போட்டு வப்பனே சூரணத்தில் பதங்க மத்தே.

196. பறந்து போம் கைப்போடு புளிப்புந் தள்ளு பசுவின் பால் நெய் மோரு பாங்காய்க் கூட்டு
பறந்து போம் உப்புதனை விறுத்துக் கொள்ளு பசும் பயறு யரைக்கீரை முருங்கைப் பிஞ்சு
பறந்து போம் பத்தியந்தான் சொன்னபடி செய்து பாங்காக மருந்துண்ணத் தீரும் நோய்தான்
பறந்து தான் பத்தியத்தில் பாகந்தப்பில் பல பலவா மருந்துண்டு பாழாய்ப் போமே.

197. <u>பத்திய முறிவுக்கு மருந்து</u> :-
போமென்ற அவுஷதங்கள் கொள்ளும் போது புகளான பத்தியந் தான் முறிவு கண்டால்
ஆமென்ற தேகத்துக் கசடில்லாமல் அவுரி வேர் பிரமியிலை மிளகு கூட்டி
போமென்ற கசாயம் வைத்து முப்பொழுது கொள்ளு பத்தியத்தில் முறிவு யெல்லாம் பாகமாகும்
ஆமென்ற பத்தியத்தில் புளிப்புக் கூட்ட அரையிறேன் புளி பாகம் வெள்ளை சாறுனை

198. சாற்றனையினிலே யரைத்துப் பழம் புளி மேல் பூசி சார்வாகச் சுட்டதனை மேல் கவசந் தள்ளி
சாறதனையா மருந்திட போக்சாரிந்த சார்வாகக் கட்டிடு வாயுப்பைக் கேளு
சாற்றனையாம் வாதி யென்றால் கட்டிக் கொள்வானில் லாட்டால் சங்க யிலை பிரமி யிலையாம் போட்
சீராவின் பால் தெளித்து வறுத்துக் கூட்டு சிறமான பத்தியமாம் தீரும் நோயே.

199. தீருமே அஸ்தியிலே சூடு கொண்டால் தீராத வறட்சியொடு யிரைப்பு யிருமல்
தீருமே புகைச்சலொடு கனை வேகங்கள் தீருமே யிவை யெல்லா மோடிப் போகும்
அறையிறேன் ஆடாதோடை கோஷ்டந் திப்பிலியே.

200. திப்பிலியின் வசம்போடு நெல்லி முள்ளி கடுக்காய் சிறுவழுதலை பேரரத்தை கற்கடசிங்கி
கப்பரிய மிளகோடு நாகப்பூ வகைக்கு கால் பலமே சேர்த்திடித்துச் சூரணமாய் செய்து
வெப்பிலே நாளொன்றுக் கந்தி சந்தி வெருகடியாந் தா னெடுத்து விளம்பக் கேளு
செப்பரிய நெய் தேனில் குழைத்துக் கொள்ளச் செப்பியதோர் நோயெல்லாந் தீரும் பாரே.

201. <u>பதினெட்டுக் குட்டத்துக்கு</u> :-
பாரே நீ பதினெட்டுக் குஷ்டம் போக பாடுறேன் காள கற்குடோரி
ஆரப்பா பறங்கிப் பட்டை பல தீராது அளிஞ்சி சங்குங் கப்பியொடு கஸ்தூரிப் பட்டை
காரப்பா சிவன் வேம்பு பூவரசம் பட்டை கருங்காலி விடத்திலை யோடாயிலப் பட்டை
வேரப்பா கரந்தையொடு வகைக்கு ரெண்டு பலந்தான் மிஞ்சாதே ரசகற்பூரம் பலந் தானென்று.

202. ஒன்றாக யிவ்வ யெல்லாஞ் சேர்த் திடித்து உத்தமனே வடிகட்டி வைத்துக் கொண்டு
முன்றாக சேங்கொட்டை எட்டிக் கொட்டை கொடிவேலி செவ்வரை கார்த்திகையின் கிழங்கும்
பன்றாக கொடிக் கள்ளி வாழவைவை வகைக்குப் பலம் பத்து நருக்கியே குழித் தயிலும் வாங்கிப்
பன்றாக தயிலமுஞ் சூரணமுமப்பா பரிவாக வெவ்வேறே வைத்துக் கொள்ளே.

203. கொள்ளவே சூரணத்தில் வெருகடி தானப்பா கொடுத்திடு லாய் காசிடையே தயிலங் குத்தி
நள்ளவே நாளொன்றுக் கந்தி சந்தி நாற்பது நாள் மண்டலமே கொள்ளும் போது
விள்ளாதே பதினெட்டு குட்ட மெங்கே விருகான மேகமொடு கிரந்தி சூலை
கள்ளமாங் கரப்பனொடு வாத சூலை கடி விஷங்களுள்ளதெல்லாங் காததோடும்
கொள்ளவே சூன்ம மெட்டுங் குடிப்போம் சொன்னேன் கூறறிந்து பத்தியமாய்க் கொள்ளு வாயே.

204. கொள்ளுவது பத்தியந்தான் குஷ்ட நோய்க்கு கூவேள் பழம் புளியாம் கொளுக்
கொள்ளுவது புளியிட கொட்டை வாங்கி கருக யிடித்ததனைப் பிசைந்து சுத்திதல்
யுள்ளபடி எட்டி மரத் தடியில் சென்று உளி கொண்டு துளைத்ததனைக் குடை வாய்ப் பண்ணே.

205. பண்ணியே புளியை யதனுள்ளே வைத்து பரிவாக மேலுமந்தச் சிராயால் மூடி
எண்ணியே யிருவத் தைந்து நாள் சென்ற எடுத்துமே வத்ததனைப் பத்தியத்தில் கூட்டு
வண்ணிதாய் சொன்ன புளி குஷ்ட நோய்க்காம் வன்னிப் பட்டைச் சாற்றிலுப்பு வறுத்துக் கூட்டு
எண்ணியே கரியென்றரி வெள்ளாடு கொண்டு யிலைக் கள்ளி சிறுகுகள்ளி சதிரக்கள்ளி யென்னே.

206. கள்ளியே கத்தாழை பெருக்கோடு யிஞ்சி வெட்டி கருஞ்சூரை தொடிக் கள்ளி
கிள்ளியே யிலை யெல்லாம் கொண்டு வந்த கிலமேய்த்து யெட்டு நாள் கின்ற பின்பு
தின்னியே யிதுடைய கறிதான் கூட்டு சிறுநீரில் புங்கம் பூ ஊற வைத்து
அள்ளியே மேல்க் கண்ட புண்ணுக் கெல்லாம் அந்த நீர்தனை வார்த்துக் கழுவிப் போடே

207. போடவே ஊட்ட மெல்லாம் பறந்த போகும் பொல்லாத ரோக மெல்லாம் பொடியாய் போகும்
ஆடவே விளக்கெண்ணெய் தேய்த்து முழுகு அவசார பத்தியங்கள் பணி வேண்டாம்
ஆடுமே தீராத நோய்களுக் கெல்லாம் உன்னுடைய சிறுநீரில் ஒரு சேரை கொள்ளு
போடவே மண்டலமே கொண்டாயானால் பொல்லாத விஷரோகம் குட்டம் போமே.

208. போமென்ற தன்றுக்குள் மருந்தை வைத்து பூமியிலே நீ மருந்து தேடுவானேன்
ஆமென்ற தன்றுக்குள் முறியாலே பத்துப் போம் நோய்களெல்லா மறிந்து பாரு
போமென்ற மேகமென்று பொல்லா ரோகம் போகவே யுள்ளலக்கிப் பட்டை வாங்கி
யாமென்ற யிடித்ததனை யமுரி விட்டுப் பிசைந்து யல்லாட்டால் வெந்நீரால் பிழிந்து கொள்ளே.

209. கொள்ளவே நாளொன்றுக் கரைப்படி தான் போதும் குறியாக மூன்று நாள் கொள்ளும் போது
விள்ளவே மேக மொடு கிரந்தி யரையாப்பு வெட்டையொடு பிரமேகம் மேக வாய்வு
கொள்ளவே வாதமொடு சூலை குன்மம் கொடிதான நோயெல்லாங் கடிபோம் பாரு
கொள்ளவே பத்திய மென்று யிச்சா பத்தியம் குடித் தெடுத்த புகையோடு புளி யுந் தள்ளே.

210. புளியோடு வாய்வென்ற பதார்த்தந் தன்று புகழான உப்புதான் வறுத்துக் கூட்டு
எளிதான பத்தியந் தானும் நாளா யேளா நாள் தலை முழுக யெல்லாங் கூட்டு
ஒளிதான வெள்ளாட்டுக் கறி கொழுப்பு உத்தமனே போதர வாயுண்டு தேறு
களியான மேகமொடு வாத வாய்வு கால் முடக்கல் கை முடக்கல் சடுப்பு குத்தல்
கொளிப்பான கிரிரோடு வாதபித்தி முடக்கிலும் சொல்லுகிறேன் புளவிக் தண்டே.

211. தண்டோடு திருகுகள்ளி சுடு ஈரத்தி தழுதாழை முடக் கொத்தான் வேப்பம் பட்டை.
வெண்ணை சங்கோடு உத்தாமணி வெண்ணொச்சி பரிக் குளம்பு வெள்ளிருடு பிரம்பு
பன்னை பதினென்றும் வகை வகைக்குப் பலம் பத்து நிறுத் திடித்துப் பாண்டத்திட்டு
அன்னை சிலமதிலே பதினெட்டு மரக்கால் அளந்து விட்டு அடுப்பேற்றி எரித்துக் காய்ச்சி
கன்றுன சிலமாறு மரக்கால காய்ச்ச பின்பு வேடு போல் மேலே வாரே.

212. வாத்துமே உள்ளக்கு மொரு சேரை கொண்டு மைந்தனே மேலிலிட்டுப் பிடிக்கச் சொல்லி
வாத்துமே மூன்று நாளிப்படியே செய்து மைந்தனே ஆனை லத்தி ஒட்டை லத்தி
சேத்துமே வெள்ளாட்டின் புழுக்கையோடு தேள் கொடுக்கு களக்கொட்டி தேங்காய்ப் பூ யெருக்கின் பூவு
வாத்துமே வறுத்து நீ மூன்று நாளரைத்துப் போட வாதமொடு மேக மெங்கே வாய்வு மெங்கே
ஆத்துமே அண்ட வாய்வு விரை வாதமோடு ஆகாத நோயெல்லா மகன்று போச்சே.

213. போச்சென்று பத்தியந்தான் றென்று மாகா போக்கோடே யேழா நாள் வறுத்து கூட்டு
போச்சென்ற யெட்டா நாள் தலைநீர் வார்த்து புளி கூட்டு யின்னமொன்று புகலக் கேளு
ஆச்சென்ற திருகு கள்ளி கொண்டு வந்து அப்பனே வரகுலைக்கல் தன்னிலாட்டி
காச்சென்று புளிந்து தான் கள்ளிச் சாறு கண்டிடைக்கு நல்லெண்ணை கூட்டிக் கொள்ளே.

214. கொள்ளவே வாதமொடு வாய்வு சூலை குகிர வலி முடக்கு வலி குதிகால் வாதம் குலைந்து போகும்
உள்ளே கொள் மூன்று நாற்பப்பில்லாமதே யுண்டு நீ யாறு நாள் மறு பத்தியம்
விள்ளாதே மேக வெட்டை வெள்ளை காங்கிர் விதமான பழம்பாசி கொண்டு வந்து
தெள்ளியே யிடித்ததனை நீற்றுப் பாகச் சலத்தை விட்டுப் பிசைந்து நன்றாய் யிறக்குக் கொள்ளே.

215. யிறக்கு தனில் நற்சீரகம் யிருள்ளி ரெண்டும் யதமாக வகைக்குக் கால் பலமே கூட்டி
அரைத்துமே கலக்கியதில் நல்லெண்ணை தானும் அப்பனே சாறு கண்ட அளவில் பாதி
நரைத்துமே விட்டதனில் சொல்லக் கேளு ராயபுரிச் சர்க்கரை தான் கால் பலமே
முறை தப்பாதிப்படியே மூன்று நாள் கொண்டு முதிய வெள்ளை பிரமேகம் வெட்டை போகுந்தானே.

216. தானென்ற யின்னமொரு சூட்சங் கேளு சார்வான ப்ழமிளகு முப்பத்திரண்டு
யேனென்ற சொடிக் கள்ளிக் கொழுந்து தாமும் எருமிச்சங் காயளவு கூடக் கூட்டி
வேனென்று யரைத்த தனை யந்தி சந்தி வேளைக் கரைக் கொட்டைப் பாக்களவு
சொன்று
பாலென்ற மூன்று நாள்க் கொள்ளத் தீரும் பத்தியந்தான் பசுமோருஞ் சோறு முண்ணே

217. வெள்ளை பிடிக்கு சகல மேகத்துக்கும் புங்கம் பூச் சூரணம்:-

ஊண்ணவே கை கண்ட வித்தை சொன்னேம் உத்தமனே. மேக வகை யிருவதுந் தான்
போக
பன்னவே புங்கம் பூ படி தானென்ற பாங்காகச் சட்டியிட்டு அடுப்பிலேத்தி தின்றுதே
ஆவினெய் சேரு ரெண்டு
உன்ன உன்ன விட்டதனை வறுத்த வாங்கு நன்றாக நெய்யெல்லாம் பூவில் சேர நன்றாகப்
பி ரட்டியே வழக்கெடுத்த
திண்ணமாய் யுதை யாகி தன்னில் கேரு கிமொன்றுக். கந்தி சந்தி வெருகடி பூக்
கொள்ளே.

218. வெருகான புளியொடு புகையிலையுந் தன்று வெள்ளாட்டு வத்தலொடு ஆவின் பால்
நெய்
வெருகாக மிஞ்சியுமே கூட்டிக் கொள்ளு மேக வெடி மேகப் புன் மேக சூலை
வெருகான பிரமேக வெட்டை தீரும் மெய்யிதலே கண்டபடி தான் சொன்னேம்
கருதான மேகங்களெல்லாம் போகக் கஸ்தூரி யென்னை யொன்று கருதக் கேளே.

219. கருதியே சித்தேரன் டென்னை தாரும் கலங்காதே ரெண்டரையே படிதான்
கருதியே பழகியதோர் பாண்டத்தில் வாரு கால் படி தானீருள்ளிச் சாறு வாரு
சருகவேன் பறங்கிப் பட்டை பலந் தானும் கஸ்தூரிப் பட்டை யிது விராகனெடை வ
வரிசையாய்க் கெருடநட கிழங்கு தானும் வாகாகப் பலமெட்டு நிறுத்துக் கொள்ளே.

220. கொள்ளவே கஸ்தூரிப் பட்டை தன்னை குருந்த தண்ணீர் தன்னிலே யூறப் போட்டு
அள்ளவே யரைத்த தனை யென்னையிலே வாரு அதின் பின்பு பறங்கிப் பட்டை யரைத்
துப் போடு
கொள்ளவே யிவை யெல்லாம் வெவ்வேறாக---- கரைக்கந்த என்னையிலே வாரே.

221. வாத்துமே யதிற் பேத்திப் புளி விறகு தவிர மற்று நீ யோர் விறகாலே தீயை மூட்டு
வாத்துமே யெரித்தத னை மெழுகு பதம் பார்த்து வடித்து நீ சுப்பிரமணியர் பூசை
பண்ணு
வாத்துமே யெடுத்ததனை வைத்துக் கொண்டு மைந்தனே யென்னை கொள்ளும் வகையை
கேளு
வேத்துமே யென்னை கொள்ளு முதலளப்பா விளக்கெண்ணை கேய்த்துமே முழுகிப் போ
டே.

222. மூழ்கிய மற்றநாள் சொல்லக் கேளு முனையான என்னையிலே அரைச் சேரை கொள்
பழகிய சரீர பலம் பார்த்துக் கொள்ளு. பத்து விசை பேதியாம் பதறாதே
கருதியே சுடு கஞ்சி வறுத்தப்புப் போட்டு காச்சியே கொண்டிடவே பேதி நிற்கும்
நெருகவே மறுநாளும் விளக்கெண்ணை தேய்த்து நீராடிக் கறி பதார்த்த மெல்லாங்
கூட்டே.

223. கூட்டி நீ பத்து நாளாறப் போட்டு கொளிந்த முறைப்படியே யென்னை தானும்
மூட்டியே யிப்படியே மும்முறை தான் கொள்ளு முனையான மேகவகை யிருபதுமே
போகும்
யீட்டியே யிந்த முறையாருஞ் சொல்லார் என்னை நிசமப்பா கொண்டு பாரு
காட்டாதே யிந்த என்னை யொருவருக்கும் கை முறையாய்ச் சொல்லி விட்டேன்
கண்டு பாரே.

224. அமுக்கிறாச் சூரணம்:-

கண்டிடா யமுக்கிறாச் சூரணத்தை கருதியே பலம் பத்து நிறுத்துக் கொண்டு
வண்டிடித்து வடிகொண்டு சூரணமே செய்து வால்மிளகு சூரோசாணி பறங்கிப் பட்டை
கண்டிடாய் கருஞ்சீரகம் கடுக்காய் சுக்கு கடுகுரோகணி வாலுளுவை யரத்தை திப்பிலி
யும்
யிவ்விடாய் வகை வகைக்கு பலமே சாக்கு யிடித்ததனை முன் மருந்திற் சமமாய்ச்
சேரே.

225. சமமாகச் சீனியதில் காலக் தொன்று சாரிக்கு வெருகடி தான்ந்தி சந்தி
சமமாக ஆவின் நெய் சேர்த்துக் கொள்ள வுரையாப்பு மேகவடை கிரந்தி குஉட்டம்
எமனான வாய்வோடு கடி விஷங்களெல்லாம் எலி கடியுஞ் சில்விஷங்கள் பூரான்
செய்யான் கமனை மேகமொடு வாத பித்தம் கிளை போம் பத்தியந்தான் கண்டு
கொள்ளே.

226. கொள்ளுவது கைப்போடு புளிப்புத் தள்ளு கொள்ளவே மத்ததெல்லா பிச்சா பத்தியம்
தள்ளாதே அப்பா கேள் ஆடாதோடை சாக்குறேன் லேகியமாய்ச் சகல நோய்க்கும்
கொள்ளவே தோடையது மூலங் கொண்டு குறிப்பாக நிழலுலத்திச் சூரணமே செய்து
விள்ளாதே பலம் பத்து நிறுத்ததை கொண்டு மிளகோடு கொத்தமல்லி யரத்தை சுக்கு

227. ஆடாதோடை லேகியம்:-

சுக்கான யதிமதுரம் தாளிச பத்திரியும் சுகமான யிந்துப்பு பேரரத்தை கோஉட்டம்
நய்க்கவே கருஞ்சீரகம் கடுகுரோகணி விடையம் நாகப்பூ வாலுளுவை கிரம்பு தேக்கு
எய்க்கவே

எய்க்கவே வகை வகைக்கு ஒரு பலமே சொன்னேம் யிடித்துமே முன் மருந்திற்
சமஞ்ச் சேரு
அய்க்கவே சீனியதில் நாலத் தொன்று நூலின் நெய் தேனிலே அருந்தக் கேளே.

228. அருந்தவே. லேகியமாய்ப். பண்ணிக் கொண்டு. அந்தி சந்தி தொட்டைப்
பாக்களவு. தாரும்
அருந்தவே சயமீ ளை மந்தார காசம் அக்கி சுரம் பித்மொடு வரய்வு, சாந்தி
யருநதவே குக்கிருமல். சிறுக்கிருமல் புகைச்சல் ஆகாத பிரட்டல் பித்தம்
கிறுகிறுப்பு வறச்சி
யருநதவே சூலையெரிவு உடல் பிரட்டு ஆகாத பல. பிணி நோய். யறுகாதப்பா
கருந்தவே பக்கியந் தானிச்சா பத்தியம் கைப்போடு புளிப்பு ரெண்டுந் தவிர்
த்துக் கொள்ளே..

229. <u>நாகு கரந்தைச் சூரணம்</u>:-

தவிரவே நாகு. கரந்தை சூரணத்தைக் கேளு சார்வான கரந்தையதை நிழலுலத்தி
பவிரவே யிடித்ததனைச் சூரணமே செய்து பலம் பத்து நிறுத்தப் பால் பகரக்
கேளு
நவிரவே கருஞ்சீரகம், கடுக்காய் தானி நல் வசம்பு திப்பிலியும் மிளகிந்துப்பு
திவிரவே வாயுவிளங்கம் கோஷ்டம் சுக்கு சிறு தேக்கு கார்கோலி சித்திர மூலம்.

230. சித்திரமாய் வகை வகைக்குப் பலந்தானென்று சேரு ரச கற்பூரம் பலமுங்
கால்தான்
சித்திரமா. யிடித் ததனைச் சூரணமே செய்து சேர்த்திடு. நீ கரந்தையுட சூரணத்
தில் சமஞ்ய்
சித்திரமாய்ப். பனவெல்லம் சர்க்கரையுந் தேனும் சேர்த்துமே நூலின் நெய் விட்
டுக் கிண்டி
பக்திரமாய் நாளொன்றுக் கந்தி சந்தி பருங் கொட்டைப் பாக்களவு கொள்ளு
கொள்ளு

231. கொள்ளுவே குட்டமொடு கிரந்தி யரையாப்பு கொடிதான மேகவெடி கரப்பா
னூறல்
மெல்லவே நெஞ்சடைப்பு நடக்கல் மேனி வெளும்போடு படுதாமரை தழுதளையுஞ்
சூலை
அள்ளவே படுத்தி மும். புரை. புண்புர குளிவாளை யூடு கல்லி யரிசிரந்தி சொரியும்
தெள்ளியே ஆனைச் சொரி தவளைச் சொரி தேமல் தீராத வெடி கரப்பான்
தீருந் தானே.

232. <u>திருவாகைச் சூரணம்</u>:-

தீரவே சகல நோய் தீரக் கேளு சீரகத் தோட்கி மஞரம் மகரப் பூவும்
தாரமாங் கருஞ்சீரகம் சன்ன லவங்கம் சதகுப்பை வகை வகைக்கு பலந்தா
னென்று
கூறவே சரக்காறும் ஆற பலஞ் சொன்னேம் கொத்தமல்லி பலமாறு சமஞ்யக்
ட்டி
சேருமே வகை யொன்றுய் பனிரெண்டாச்சு சீனிக் கல்கண்டு பலம் பனிரெண்டாமே.

233. பனிரெண்டும் வெவ்வேறே யிடித்துக் கொண்டு பாங்கான காசி யென்ற மேருவிலே
யடைத்து
உள்ளியே வெருகடி தான் அந்தி சந்தி கொள்ளும் ஒரு நேரம் வெந்நீர்
கொள்ளுண்மையாக
குன்றுஞ் சரீர திடம் நெஞ்சு வலி சூலையெரிவு நெஞ்சு திடமாகும்
உள்ளியே சிரசு நோய் எல்லாந் தீரும் ஒடுமே பித்தமொடு பிரட்டல் நீருறல்
கண்ணிலே நீர் ப் பாச்சல் அரும் பிறயாசமாகும் கலங்காத புத்தி வரும்
உள் மாந்தந் தீரும்.

234. தீருமே நித்திரையும் சுக முண்டாகும் தீராத புழுக் கிருமி சேரப் போகும்
வாருமே யிடுப்பு வலி கல் கலலடைப்பு வலிப்பு வாய் கோணல் வாய் குளறல்
உமாத பித்தம்
தீருமே செவி நோயும் செவிடுமை சேத்துமமும் பில்லி வஞ்சினையுந் தீரும்
சாறிடுமே தொடை வாளை கண்டமாலை சரீரத்தில் நீர்க் கட்டுக் சாந்தி
போமே.

235. <u>அமிர்தாதி உருண்டை</u>:-

போமென்ற அமிர்தாதி உருண்டை கேளு புகழான கோரோசனை செண்பகப்பூ
கோஷ்டம்
வேமென்ற வெட்டி வேர் ஏலமதி மஞரம் விதமான காஸ்திர வேகி மாசிப் பச்சை
காமென்ற தானிக்காய் வகை வகைக்கு களச்சி ரெண்டு முலைப் பாலில் கருதி
ஆட்டு
ஆமென்ற நில்லாட்டரால் வெட்டி வேர்க் கசாயம் ஆட்டியே கடலை அளவு
உருண்டை செய்யே.

236. செய்யுமே நிழலுலத்தி வைத்துக் கொண்டு சிரமான முலைப்பாலில் வெந்நீரிலிடவே
கைத்துமே உடல் பிரட்டு உஷ்ண காந்தி தாபசுரம் பித்த சுரம் சார்ந்து
போகும்
பொய்துமே கண் மாந்தம் மாந்த சன்னி புழுக் களிச்சல் ப்போர் மாந்தம்
கல்வெட்டை · குடு

எய்துமே சிறு பிள்ளை நோய்களெல்லாம் சீர யிதமான அமிர்தாதி உருண்டை சொன்னேன்
பொய்தவே காமாலை சோகை பாண்டு போகவே சிந்தாதி புகலக் கேளே.

<u>காமாலை பாண்டு சோகைக்கு சிந்தாதி லேகியம்:-</u>

237. புகலுறேன் புளியிலை பலந் தானாறு புகழான தருப்பிடிக் கயிறும் பதிலே பதி
நெகலுறேன் முன்னை வேர் சாறணை வேர் நெருஞ்சி வேர் [illegible] கண்டங் கத்திரி
செகலான கறி முள்ளி கீழ் காய் நெல்லி செம்முள்ளி வகை வகைக்குப் பலந்தான் பத்து
யிகலுறேன் முன் மருநதோடொக்கச் சேரு யிவை யெல்லாம் யிடித்து ஒரு பாண்டத் திட்டு

238. யிட்டுமே யிருநாழி செலமே வார்த்து எரித்ததனை யெட்டொன்றாய் வத்தக் காய்ச்சி
கட்டுமே கசாயத்தை யிறுத்து வாங்கிக் கரிசாலை சாற்றிலே படி தானென்று
கொட்டியே பழச் சாறு படி தானென்று கொம்மட்டி மாதளைச் சாறு படி தானென்று
நாடியே யீருள்ளிச் சாறு படி தானென்று நல்லெண்ணை படியொன்று யதிலே வாரே

239. வாத்துமே கொதிக்கையிலே மருந்து கேளு வளமான யிஞ்சியொடு தேவதாரம்
சேர்த்துமே செவியந்திப்பிலி மூலம் திரமான வகையொன்று பலம் பத்தாக
காத்துமே குரோசானி மிளகு திப்பிலி கரிய சீரகம் ஓம மிலவங்கப் பட்டை
வாத்துமே சுடுக்காயும் அவரை முட்டரும் வகை தனக்கு பலமொன்று பழங் குட்ட நாது
சேர்த்துமே யிவை யெல்லாம் யிடித்துத் தூளாய்ச் சிறக்கவே கசாயத்தில் போட்டுக் கிண்டு
ஊட்டுமே பனைவெல்லம் பலந்தானஞ் லோக செந்தூரமது ரெண்டு பலம் போடு
வீட்டுமே ஆவின் நீர்தனில் கொஞ்சம் விட்டுமே லேகியமாய்க் கிண்டிக் கொண்டு
ஊட்டுமே நாளொன்றுக்கந்தி சந்தி அப்பனே நேரமொரு பாக்களவு கொள்ளே.

240. கொள்ளவே பாண்டு காமாலை சோகை மத்தலெடு பீனிச சுவாச காசம்
கொள்ளவே யின்ன வகை வியாதி யெல்லாம் குலைந்தோடச் சிந்தாதி லேகியத் தைச் சொன்னேம்
கள்ளமே லேகியந் தான் கொள்ளும் போது அகப்போடு புளி புகையும் ரெண்டுந் தள்ளு
வெள்ளாட்டு வத்தலாம் வருத்தப்புக் கூட்டு விளம்புறேன் சுராங்குச மாத்திரை சொல்லே.

<u>சுராங்குச மாத்திரை:-</u>

241. சொல்லியே தாளவளை கண்டங்காரி துளசி தும்பை செருப்படியும் விஷ்ணு கராந்தி
செல்லலா மிச்ச வேராம் கோரைக் கிழங்கு சித்த முட்டி பேராமுட்டி பேய்த் தும்பை
செல்லவே குமுளோடு பேராமல்லி சிறு குமுருங் சிக்கமல்லி புன் முருங்கை யவுரி
யெல்லவே சொன்னதொரு வேரு வகையெல்லாம் யிடித்துமே வகை வகைக்கு களஞ்சு ரெண்டு
செல்லவே சித்தரத்தை அதிமதுரங் கோஷ்டம் சிறுநாகப்பூவோடு கிராம்பு திப்பிலியே.

242. திப்பிலியும் நிலவேம்பு தானிக்காயும் சுக்கு சீரகமும் கருஞ்சீரகமும் கடுகுரோகணி ஓமம்
ஒப்பரிய நிலவிளா வேர் யிலவம் பிசினும் உத்தமனே வகை வகைக்கு களஞ்சு ரெண்டு
கப்பரிய அவுரிச் சாறுடாதோடை கரிசாலை சிறு புள்ளடி பிரியார் கூந்தல்
செப்பியே சாறதுச் சாமமத்தி சேர்த்தரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொள்ளே.

243. வைத்துமே யிஞ்சி நீர் முலைப் பால் வெந்நீர் அல்லாட்டாள் நொச்சி சுக்கு சந்நிலைச் சார் தேனில்
உய்த்துமே யிந்த வகை அநுபானந் தன்னில் உத்தமனே நோயறிந்து ஒருண்டை கொள்ளே
நய்த்துமே சுரமெல்லாம் நாடா தோடும் நலமான அஸ்தி சுரம் மாந்த சன்னி
உத்துமே கணை வேக மாந்த பித்தம் ஜுரப்பிரமல் உய்த்துமே குளிர் சுரங்குது
வன் மாந்தம் உப்பிசமும் போமென்று உரைத்த வாறே.

<u>கடுக்காய் லேகியம்:-</u>

244. வாருன கடுக்காயின் லேகியத்தை வளமாகச் சொல்லுகிறேன் மக்காள் கேளும்
பாருமே கடுக்காய் தான் கொட்டை போக்கி பல சிவதை வேர் பலந் தான் ரெண்டு
வாருன் கரிசாலை பலந்தான் ரெண்டு வல்லாரை புளியாரை வகைக்கு ரெண்டு
காருன நிலையாவாரை பலந்தான் ரெண்டு கருதியே யிடித் தொன்றாய்ச் சூரணமே செய்து
சீரான கடுகுரோகணி. கிரும்பு திப்பிலி சிறுநாகப்பூவோடு வாசுருவை சிங்கி யென்னே.

245. சிங்கியொடு கருஞ்சீரகம் மிளகு காளி சிறப்பான கொத்தமல்லி தாளிச பத்திரியும்
யிரங்கியே வகை வகைக்கு கால் பலமே ஆக்கி யிடித்துமே வடி கொண்டு முன மருந்திற் சேரு
காங்கியே ஆவின் நெய் தேனும் விட்டு சர்க்கரையும் போட்டு நீ லேகியமாய்ப் பண்ணே.

246.. பண்ணியே நாளொன்றுக் கந்தி சந்தி பருங் கொட்டைப் பாக்களவு கொள்ளு கொள்ளு
திண்ணியே தீர நோய் சொல்லக் கேளு சலக் கட்டு மலக் கட்டு சோனைக் கட்டு
உண்ணவே உதங்ஙவாய்வு மேக காங்கி உள்ளங்கால் கை யெரிவு சூலை யெரிவு பிரட்டல்
யென்னவே மூலத்தில் சுடு காந்தீ யிளைப் பிருமல் புகைச்சல் வறச்சி சோகை தீரும்
என்னியே பத்திமா யுண்டு தேற யிதை விட்டால் கற்பம் வேறே யுண்டோ சொல்லே.

247. <u>இஞ்சி லேகியம்</u>:-
சொல்லவே யிஞ்சி லேகியத்தைக் கேளு தோல் போக்குப் பலம் பத்து நிறுத்துக் கொண்டு
மல்லவே பழச் சாத்தாலாட்டி மை போல் மைந்தனே சட்டியிலிட்டுக் கேளு
அல்லவே சீரகமும் மிளகோடேலம் அதிமதுரம் திப்பிலியுங் கோஉட்ட மூலம்
கல்லவே வாலுளுவை தாளிச பத்திரியும் கடுகோடு கொத்தமல்லி சித்திர மூலம்
அல்லவே சிங்கியொடு குரோசானி ஓமம் அப்பனே வகை வகைக்கு அரைப் பலமே ஆக்கு.

248. ஆக்கியே கரிசாலை பூவரசம் பட்டை சாற்றில் துவளரைத்து முன் மருந்தோடொக்கச் சேரு
உறக்கமாய் பிறவ்டையது மோரிலப்பிட்டுறி யுலர்த்தித்து ஒரு பலமே போடு போடு
ஆக்கவே வங்காளச் சீனியப்பா அதில் பாதி போட்டு நீ ஆவின் நெய் வாரே.

249. நெய் வார்த்து லேகியம் போல் பண்ணிக் கொண்டு நேரமொரு பாக்களவு யந்தி சந்தி கொள்ளு
பொய்யல்ல பித்த வாய்வுஉங்ஙல் காந்தி மாராட்டல் சத்தி வலி குன்மம் பித்த குன்மம்
மெய்யான அஸ்தி சுரம் சன்னி தோஉஷம் வீரன யெரிகுன்மம் அசீரண வாய்வு வாதம்
செய்யவே முப்பிசமும் வுரோகிகமுந் தீரும் தீவனமாம் பசி யறிந்து சீராய்க் கொள்ளே.

250. சீரான வாத மென்ன வயித்திய மென்று செய்முறையோடே விதங்கள் செய்வதென்ன
பாரான பல நூலும் பார்க்க வேணும் பாத்தறிந்து செய்கிற பாகம் வேணும்
கூறான சரக்கு வகையின மறிய வேணும் குருவாசான் கை தொட்டுக் காட்ட வேணும்
சார்வாக யிதை விட்டு முறை தப்பாய்ச் செய்த சாஸ்திரம் பொய்யென்பார்கள் சண்டாளர் தானே.

251. பொய்யென்ற சாஸ்திரத்தைச் சொன்னதினால் புழுவான பாழ் நரகில் வீழ்வார் பாவி
மெய்யென்று குரு பதத்தைத் தொண்டு பண்ணி வேதாந்தம் பல நூலும் விரித்துப் பார்த்து
கை முறையுங் குருமுறையுங் கண்டு தேறி கற்றவரை வணங்கியே சொல்லக் கேட்டு
பொய் மறந்து மெய்யுகந்து அறிவிற் கூடி பூரணமே தெய்வ மென்று போற்றி நித்தம்
தய்யவனே முறையோடே செய்து பாரு தொட்டதொரு வித்தை யெல்லாம் பலிக்கும் பாரே.

252. பலிக்கவே கருவென்ன பூமிநாதம் பாங்கான வாதமொடு வயித்தியமுஞ் செய்யும்
பலிக்கவே சொல்லாமல் மறைத்தார் சித்தர் பாடிலுர் சாஸ்திரத்தில் முன் பின்னாக
பலிக்கவே சொல்லுகிறேன் பூனீற்றை வாங்கி பத்து முறை சுத்தி சலம் தெளித்துக் காய்ச்சி
பலிக்கவே குருவாக வைத்துக் கொண்டு பாடியதோர் வயித்தியத்தில் பாகங் கேளே.

253. பாகமாந் தயிலங்கள் வடிக்கும் போது பாங்கான வடி கலசங் களஞ்சு குருப் போடு
பாகமாங் கட்டின முருக்கினமும் பற்பம் பாங்கான லேகியங்கள் செந்தூரங்கள்
பாகமாங் குருவதிலே சேர்த்துப் பண்ணி பாங்கான வயித்தியத்தில் திறமோ மெத்த
ஆகமா யிதை விட்டால் வாதம் பொய்யாம் ஆகாச பருதி யுப்பு வேகந்தானே.

254. தானென்ற யிதிலுலே வெடியுப்பாச்சு சத்தியுட நாதமப்பா கெந்தி சேரில்
ஆமென்ற அண்ட ரண்டம் உருவிப் போச்சு அரசர் வெடில் கல் கோட்டை யிடியலாச்சு

போமென்ற காரமென் வெடியுப்பாச்சு புகழான சாரமென்ன நவச்சார மாச்சு
ஆமென்ற சார காரம் ரெண்டுஞ் சேரில் அறுபத்து நாலு சரக்கும் கட்டிப் போச்சே.

8-1-54

255. போச்சென்றி சாரம் விட்டால் சாரமில்லை புகழான காரம் விட்டால் காரமில்லை
ஓச்சென்ற சாரத்தின் மகிமை யென்ன ஒன்பது நீர்ச் சாரமொருவர் சாரமாச்சு
தேச்சென்ற சாரத்தின் மகிமை சொல்லச் சித்தர் முதல் ரிஷிகளால் முடியாதப்பா
ஆச்சென்ற ராமதேவர் சாரந் தொட்டு ஆடினார் யேழு யுகம் பார்த்திட்டாரே.

256. பார்த்திட்டார் காரமென்ற உப்பு உப்பு பாங்கான உவருப்பு மண்ணை வாரி
வேத்திட் மும்முறைதான் காச்சு வாகான வெடியுப்பாம் கடையில் விற்கும் காரமில்லை
ஆத்திட்டு வாதமுறை செய்ய வென்றால் அந்த உப்பை வாங்கி நீ கரை சலத்தில்
வாத்திட்டு அடுப்பேத்திச் காச்சு உப்பாம் வளருமந்தப் பதமறிந்து மது பாண்டத்தில் வாரே.

257. வார்க்கவே கம்பி போல் வளரு முப்பு மகத்தான மந்த உப்பிலே சுத்த சலம் விட்டு
பார்த்துமே யடுப்பேத்தி யெரித்துக் காச்சி பதமறிந்து மது பாண்டத்திலெடுத்து வா
ஆர்த்துமே பொங்கியது வளர்ந்து ஓங்கி அதிமகாம் வெடியுப்புக் கடுங்காரமாச்சே.

258. காரமாம் இந்த உப்பு வேதைக் காகும் கடை தனில் முறுங் காச்சல் கரு மருந்துக் காகும்
காரமாம் வெடியுப்பைச் செய்நீர் செய்யில் கருதியே சரக்கெல்லாம் கட்டிக் கொள்ளும்
பாரமாம் வாதத்துக் காதியுப்பு பார்த்திட்டார் சித்தரெல்லாம் வேதை கோடி
நூரமாம் வெடியுப்புச் செய்நீர் கேளு அறைகிறேன் ஆறு நீறு விபரந்தானே.

259. விபரமாம் வெடியுப்பு அஞ்சாங் காச்சல் விளங்கவே பலம் பத்து நிறுத்துக் கொண்டு
கவரமாம் சீனமது பலந்தான் ரெண்டு கட்டாது பலம் ரெண்டு குடம் ரெண்டு
யிறமாங் கடல் நுரையும் பலந்தான் ரெண்டு யேலென்ற சிப்பியது பலந்தான் ரெண்டு
அறவமாம் வெடியுப்போடொக்கச் சேர்த்து அப்பனே கல்வத்திலரைக்கச் சேனே.

260. அரைக்கவே அமுரியிலே புனிட்டு அத் தெளிவு மண்ட வெள்ளைக் கருவுங் கூட்டி
அரைத்துமே அரைத்து வில்லை ரவியிற் காய்ந்து ஒட்டிவிட்டு மேலோடு கொண்டு மூடி
நிறைத்துமே சீலை செய்து முழப் புடத்தில் போடு நீறியது சுண்ணமாயிலைக்கும் பாரு
குரைத்துமே சுண்ணமதில் நவசாரம் பாதி கட்டியே பொடி பண்ணிப் பீங்கானில் வையே.

261. வைத்துமே தாளி வாய்ச் சட்டியிலே கேளு வளையம் போல் சாணியிட்டுத் தண்ணீர் வார்த்து
அய்த்துமே பீங்கானை யதனில் வைத்து அசையாமல் மேல் சட்டி கவிழ்த்து மூடி
குய்த்துமே காத்தில்லாக் குருந்த விடந் தன்னில் குளி வெட்டி மணலிட்டு தண்ணீர் வார்த்து
மெய்த்துமே குளியிலிந்த சட்டி வைத்து மேலே யொரு தாளி கொண்டு மூடிப் போடே

262. மூடியே பட்சத்தி லெடுத்துப் பாரு முசியாதே பிசுபிசுத்து சலமாய் நிற்கும்
ஆடியே செய்நீரை குப்பியிலே வாங்கு ஆத்தாள்க்கும் வடுகருக்கும் பூசை பண்ணு
வாடியே செய்நீரில் வீரம் பூரம் வகைக்கு ஒரு விராகனிடை பொடிதூப் போடு
பாடியே பாசாண மது பத்து நாலும் பரிவான லவண வகை யிருபத்தஞ்சும்
ஊடியே கட்டிவிடும் உருக்கிறு மாகும் உபரசங்கள் சத்தாகும் மெழுகுமாமே.

263. மெழுகாகும் சரக்கெல்லாம் தனித் தனியே கட்டும் வேதை யிட வெள்ளி தாரம் யெட்டு போடு
மெழுகாகும் நவலோக மெல்லாம் நீசம் விட்டோட்ட சூதமது வெள்ளை போலாம்
தழுகாகும் சூத வெள்ளை வேதை பாரு சாறனை தான் செய் குளிகை கெவுனமாகும்
கருவான வாதமொடு வயித்தியந்தான் ரெண்டும் கருதியே சூத்திரத்தில கலந்தோன் யூகம்
பருத்தியே நவ மணிகள் கொரு திட்டம் போல் பாகமாய்க் கை முறையாய்ப் பாடினேனே.

264. சண்ட மாருதக் குடோரி:-
பாடுறேன் சண்ட மாருதக் குடோரி தன்னை பார்த்திட்டால் நோயெல்லாம் பறந்து போகும்
நீடிய வெள்ளைப் பாசாணம் சீலையும் லிங்கம் தொரி விஷமுடு மரிதாரந் கெவுரி அத்தகம்
ஊடியே வெங்காரம் வீரம் பூரம் சூதமொடு பவிரெண்டு வெவ்வேறாகக்
காடியே வெடியுப்புச் செய்நீராலே கட்டியே வகை வகைக்குக் களஞ்சி ரெண்டே.

265. களஞ்சி ரெண்டு அப்பிறக நவநீதந்தான் காடியதோர் கெந்தி ரெண்டு குருவும் ரெண்டு
களஞ்சியே யிலை யெல்லாம் கல்வத்திலிட்டு எருக்கும் பால் புள்ளடிச் சாறு முருக்கிலைச் சார்
தளஞ்சியே மால் தாமரை கத்தாழைச் சார் ரசம் பட்டைச் சார் நாவல் பட்டை சார்
உளஞ்சியே கரந்தைச் சார் ஊசி மல்லிச் சார் உத்தாமணி யோடவ்ரி மேனிச் சாறு
அளிஞ்சியே வெடியுப்பு நீருங் கேளு கூட்டு நீ சாறென்று சாம மொன்றே.

266\. சாமந்தான் பனிரெண்டு சூட்டி வில்லை சாதகமாய்க் கட்டியே ரவி யுலர்ந்தாந்த
சேமமென்ற ஒட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலை செய்து முளத்தில் செந்தூர மாகும்
நாமமென்ற யெட்டுத் தனைக் கல்வத்திலிட்டுக் கூர்ந்த செந்தூரமொடு லோக செந்தூரம்
தாமமென்ற காரீயம் வெள்ளிய செந்தூரம் தாம்புர செந்தூரமொடு நாக செந்தூரம்.

267\. செந்தூரம் வகைக்கு ரெண்டு களஞ்சிட்ட தானப்பா சிறப்பான கஸ்தூரி களஞ்சு ரெண்டு
சுந்தரமா யப்பிரக செந்தூரம் ரெண்டு சுத்தி செய்த கர்நாபி களஞ்சி ரெண்டு
சுந்திரமாய் பூனைத் திப்பிலி திப்பிலி மூலம் கருஞ்சீரகம் சதகுப்பை சித்திர
மந்திரமாந் திரிகடுகு கிராம்பு கோஷ்டம் மாவிலிங்கு முருங்கை வேர் மூலம் எருக்கம் வேரே.

268\. எருக்கோடு விலாமிச்சை கோரைக் கிழங்கு யிவை யெல்லாம் வகை வகைக்கு களஞ்சு கூட்டி
அருக்கோடு சேரவே கல்வத்திட்டு யரைக்கவே சாறு வகைக் கசாயங்கள்
கருக்கோடு ஆவரை கண்டங்கத்திரி தும்பை பேய்த் தும்பையொடு துளசி காந்தி
பெருக்கான சித்தமல்லி பேராமல்லி பெருங்குரும்பை புன் முருங்கை வென்னொச்சி யென்னே.

269\. நொச்சியொடு பேராமுட்டி சித்தமுட்டி நேர்க்கரிய குருந்த முக்காவளை
காச்சியே யிவை யெல்லாம் யிடித்து தொன்பக்கி கசாயந் தானெட்டொன்றாய்க் காச்சி வாங்கி
மூச்சியே கசாயத்தால் நாலு சாமம் அவுரிச் சாற் கரிசாலை குமரிச் சாறும்
தீச்சியே மேனிச் சாற் வேளைச் சாறும் செருப்படிச் சாற் பொய்த்தலைச் சார் பிரமிச் சாறும்
ஆச்சியே சாறு வகை சாமமெட்டு யரைத்திடவே பனிரெண்டு சாமமாகும்
உச்சிதமாங் கணபதியைப் பூசை பண்ணு உழுந்தளவு உருண்டை செய்து நிழலுலத்தே.

2700\. உலத்தியே நோயறிந்து யனுபானம் செய்த உத்தமனே ஒருண்டை யனுபானத்தில்
சலத்தியே ஒரு உருண்டை கொள்ளும் போது சன்னி வகை தொண்ணூறு மெங்கே யெங்கே
அலத்தியே பதினெட்டு சுர தோஷ மெங்கே அசையாத வாத பித்தம் சிலேற்பனந் தானெங்கே
உலத்தியே யெட்டு வகைக் குன்ம மெங்கே மூலையாத வாய்வெங்கே வாத மெங்கே போச்சே.

271\. எங்கே போம் சயமீளை மந்தார காசம் ஏத்கரிய உள்ச் சுத்தப் பிற வீச் செங்கே
தங்காத முயல கண்டன் குமர கண்டன் தமர் வாதங் காக்கை வலி குதிரை வலி வாதம்
மங்காத பதினெட்டுக் குட்டம் மூலை வாய்வோடு கிரந்தி யரையாப்புக் காசம்
நங்காத கெர்ப்ப நோய் குதக வாய்வு தரியாத பெருவயறு சூலை உள் மாந்தை யென்னே.

272\. மாந்தையாம் விரை வாதம் மாரடைப்பு வறவாய்வு அந்திர வாய்வு
மாந்தையாம் ருத்திர வாய்வு மூல வாய்வு மந்தார நீலகாசம் ருத்திர காசம்
தாந்திரீக சன்னியொடு செய்பிற சன்னி சுத்தி பித்தம் காமாலை பாண்டு சுக சன்னியும்
மாந்தை யெல்லாம் விராதோடும் மகா மல சண்ட மாருதக் குளிகை யென்னே.

273\. <u>அப்பிரக செந்தூரம்</u>:-
என்கவே அப்பிரக செந்தூரஞ் சேரு யிதமான ~~கிருஷ்ணா~~ அப்பிரக நன்று
நன்னயமாய் வாங்கி யதைக் காச்சிக் காச்சி நலமான ஆவின் பால் தன்னில்த் தேய்த்து
தன்னவே கரிசாலை பொய்த் தலையில் மேனிச் சாற் தனில்க் காச்சித் தோய்த்து நன்றாய்
வென்னவே சுத்தி செய்து நவநீதம் பண்ணி மேனிச் சாற் விட்டு ஒரு சாம மாட்டி
ஒன்னியே வில்லை தட்டி உலர விட்டு ஒட்டிலிட்டு மேலோடு கொண்டு மூடே.

274\. மூடியே முளப்புடத்தில் விட்டு வாங்கி முசியாதே ஆட்டி முன் போல் புடத்தைப் போடு
மூடியே மேனியிலை பலர்தான் பத்து முள்ளங்கிச் சாத்திலே புடந்தான் பத்து
போடவே பொற்றலையின் சாற்றில் பத்து பொன்னாங்காணிச் சாற் பத்துக் கதலிச் சாற் பத்து
நீடவே மல்லிகைச் சார் ஊமத்தக்காளி நீர் முள்ளி முருக்கிலை கற்றுழஞ் சாறு
ஆடவே அவரிச் சார் முசுமுசுக்கைச் சார் அப்பனே ஒவ்வொன்றில் புடந்தான் பத்தே.

275. பத்தென்ன முன் போலே யரைத்துப் போடு பதறாதே தடுக்கா தின்னங் கேளு
வித்தென்ன குறுவதிலே களஞ்சியோடு வெடியுப்பு நீராலே சாமமாட்டு
நய்த்துமே வில்லை தட்டிக் காய வைத்து நலமாக முன் போலே புடத்தைப் போடு
அய்த்துமே யெடுத்துப் பின் செய்நீராலே யாட்டியே முன் போலே புடத்தைப் போடு
அய்த்துமே யிப்படியே பத்து முறைபோடு அம்மம்ம வெடியுப்புச் செய்நீர் வேகம்
கய்த்துமே போகாது தடுக்கிராத கசடில்லா அப்பிறகு செந்தூரமாமே.

276. செந்தூரச் சோதனை:-

செந்தூரச் சோதினையை யரிய வேண்டி செலத்தை ஒரு சட்டி தன்னில் விட்டு மேலே
செந்தூரம் பணவிடை தாளதிலே போட்டுச் சிறக்க வொரு உலந்ததனை மேலே போட்டு
செந்தூரம் உலந்ததனைத் தாங்கித் தாவல் செயமாகு மில்லாட்டால் பின்பு கேளு
செந்தூரந்தனை யெடுத்துக் கல்வத்திட்டு செய் நீராலாட்டி முன் போல் புடத்தைப் போடே.

277. போடவே அப்பிரக செந்தூர மகிமை புகலுதற்கு நாவுண்டோ வாயுமுண்டோ
சொல்லடா வெடியுப்புச் செய்நீர் விட்டால் மற்றொன்றிலப் பிறகும் நசுக்காது
கூட்டியே தடுக்கிருந்தால் உடலில் தங்கும் படி தேடும் அரோசிகம் நோய் குணமாகா
தேடியே செந்தூர மதிரமாகச் செய்து தின்றிடிலே நோயேது செப்பக்கேளே.

278. சூத செந்தூரம்:-

செப்பரிய சூத செந்தூரங் கேளு திரமான சூதமது பலந்தான் பத்து
ஒப்பரிய கெந்தியது ரெண்டரையாம் பலந்தான் ஒட்டியிட்டுக் கெந்தகத்தைத் தானுருக்கிப் போது
மற் பெரிய சூதத்தைக் கொட்டிக் கிண்டு மணல் போலே சூதமதைக் கல்வத்திட்டு
அப் பெரிய காட்டுச் செம்புச் சாற்றால் சாமம் அரைத்துமே பொடியாக்கிச் சிப்பிக் கேத்தே.

279. ஏத்தியே வாலுகையின் மேலே வைத்து எரித்திடு நீ தீபம் போல் மூன்று சாமம்
ஆத்தியே மறுபடி மரைத்து முன் போல் அப்பனே வாலுகையி லெரித்து வாங்கு
போத்தியே மறுபடியுங் கல்வத்திட்டுப் புகழாக முன் சாற்றலாட்டித் தானாய்
யூத்தியே சிப்பிக்கு யரைவாசியிட்டு அப்பனே வாலுகையில் தீயை மூட்டே.

280. மூட்டியே தீபம் போல் மூன் சாமம் முறையாக எரித்திடவே கருவைக் கேளு
போட்டியே தாளகந்தான் பலமும் ரெண்டு பொடி செய்து வைத்து நீ கொஞ்சம் கொஞ்சம்
ஆட்டியே குப்பியிலே போட்டு நீயும் அப்பனே கிண்டிக் கிலா கையாலே
தீட்டியே அடியிலே மருந்தில்லா விட்டால் சீரான பதமென்று அடுப்பை யாத்தே.

281. ஆத்தியே செந்தூர மருணம் போல அப்பனே தேங்காய் போலிருக்கும் பாரு
தேத்தியே தாளகந் தான் போடா விட்டால் சிவக்காது மயிற் கழுத்து வர்ணம் போலாம்
பாத்துமே ஆத்தானைப் பூசை பண்ணி பணவிடை தான் செந்தூரம் பனை வெல்லத்தில்
ஆத்துமே உள்ளுக்குக் கொண்டாயானால் அரையாப்புக் கிரந்தி குஷ்டம் ரோகம் போமே.

282. பேர்மென்ற பத்தியமா யுண்டு தேறு பொல்லாத குன்மமொடு வாய்வு சூலை
தாமென்ற மேகவெடி தந்தனையுஞ் சூலை தவனை சொறி வெண் குஷ்டம் அருகன்னி கரப்பான்
நாமென்ற நோயெல்லாம் நாடாதோடும் நல்லதொரு செந்தூரத்தினை மடக்கி
ஆமென்ற அரத்து முன் போல் தங்கஞ் சேர்த்து அஞ்சு தரம் வைத்தெடுக்கச் செந்தூரம் அருணமே.

283. அருணமும் செந்தூரம் வேதை யிட்டால் அழகான நவலோகம் பத்து மாத்து
மருணமும் வாதத்தில் சித்தரெல்லாம் மறைத்து வைத்த கருவை யெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
கருணமாங் குரு முறைக்கு வகையுஞ் சொன்னேன் கருவாளியானால் கால் கண்டு பாரு
தருணமாம் வயித்தியத்தில் முறை தப்பாமல் சாற்றினேன் நிசமாகச் சார்ந்து பாரு.

284. பாரப்பா மகத்தான திராவகத்தைப் பாடுறேன் மாணக்கர் பரிந்து கேளு
காரணமா நோயெல்லா மாற்று போக மகத்தான சரக்கெல்லாம் கட்டிப் போக
காரணமாஞ் சித்தரெல்லா மெச்சிக் கொள்ள கைக்குள்ளே ரச வாதஞ் சித்திப் போக
நாரணமாம் நாயுருவி யுப்பு மேனி நல்த் தானை நாவல் தென்னை கதலி யென்னே.

285. கதலியாம் முருங்கை கொடிவேலி தத்தி கருமத்தை சொடிக் கள்ளி திருகு கள்ளி யெருக்கு
வதலியே வெவ்வேறே சுட்டுச் சாம்பல் வகைக்கு நாழி படி யளந்து பாண்டத்திட்டு
கதலியே ஆனை நீர் குதிரை நீரும் கழுதை நீர் ஒட்டை நீர் மனிதர் நீருமே.

286. நீரான ஆவின் நீர் வெள்ளாட்டின் நீரும் நிலையாகக் கலக்கி ஒன்றாய்ச் சொல்லக் கேளு
சாரான சாம்பலுக்கு ரெட்டி வாரு சாதகமாய்க் கலக்கி யந்தத் தெளிவை வாங்கி;

ஆூக அடுப்பெத்தி யெரித்துக் காச்சி அப்பனே ரவியிலிப்பாம் வகை வகைக்குப்
பூாக வகைக்கு ரெண்டு பலந்தான் சொன்னேம் பூனீறு காச்சி யுப்பு ரெண்டு பலந் போடே.

287. பலமான கல்லுப்பு வளையலுப்பு பாறையுப்பு வெடியுப்புச் சவுட்டுப் போடு
சலமான யிந்துப்பு அட்டுப்போடு கரியுப்பு வகை வகைக்கு பலந்தான் ரெண்டு
சலமான நவச்சாரம் கூடன் சீனம் காட்டு நவச்சாரமுடன் அன்னபேதி
குலமான யிவை யெல்லாம் வகைக்கு ரெண்டு பலமாகும் கூரிய வெடியுப்பு யிருவத்தஞ்சே.

288. அஞ்சான சீனமது யிருவந்தஞ்சு ஆகவே வகை யெல்லாம் பலம் ஞ ருச்சு
தன் சாறுய் மேனிச் சாற் நாயுருவிச் சாறும் கலிலரைத்துச் சனல் விரை போல் வில்லை செய்து
அஞ்சாதே ரவி தனிலே உலரச் செய்து அஞ்சு பங்கிட்டதனைப் பாண்டந் தன்னில்
அஞ்சாதே ஒரு பங்கு மருந்தெடுத்து அரை வாசியிட்டுமே யறையக் கேளே.

289. அறையிறேன் சக்கரமாம் பாலை சட்டி அதை மேலே சந்து வாய் பொருந்த மூடி
வரையிறேன் சந்து வாய் சீலை செய்து வாணங்கன்ப யடுப்பேத்தி யெரியை மூட்டி
வரையிறேன் திராவகம் வருகும் வாங்கு வகை கேளு அடுப்போரம் வளைந்த சாலி
பிரையான சாலியின் மேல் சலத்தை விட்டுப் பீங்கானுள் ஆனி யதின் மேலே வைத்து
முறையாக சக்கரமாம் பாலை சட்டை மூங்கை யந்தப் பங்கானில் முகம் நோக்கி வைய்யே.

290. வைக்கவே முந்தி முந்தி வெள்ளை நீர் தான் வருது மப்பா வாங்கியதை வீசிப் போடு
நய்க்கவே சிவிந்த நீர் பின் வருகும் மக்காள் நலமான நீரதனை வாங்கி நீயும்
அய்க்கவே மறுபங்கு சரக்கிரட்டி அரைத்துமே வில்லை தட்டிக் சாய வைத்து
தைக்கவே முன் போலே பாண்டத்திட்டு சக்கரமாம் பாலதனை மேலே மூடே.

291. மூடியே அடுப்பேத்தி யெரித்து நன்றாய் முன் போலே திராவகத்தை வாங்கு வாங்கு
ஆட்டியே மறுபங்குச் சரக்கிரட்டி அப்பனே முன் போலே அரைத்துக் கட்டி
சாடியே முன் போலே பாண்டத்திலிட்டு சக்கரமாம் பாலை கொண்டு மேலே மூடி
போட்டியே அடுப்பேத்தி எரியை மூட்டி புகைபட்டால் சடம் விரியும் பின்பாய் நில்லு
நாடியே சுபமுகம் விலகி நின்று நலமான திராவகத்தை வாங்கு வாங்கே.

292. வாங்கியே மறுபங்கிரட்டி வாங்கு வாகாக யிப்படியே அய்ந்து தரம் வாங்கு
தேங்காதே ஆத்தாள்க்கும் வடுகநுக்கும் பூசை செய்துமே அரைக் கிளர்க் குப்பியிலே அடைப்பாய்
ஒங்கியே மற்றொன்றில் அடைத் தாயாகில் உறுகுமே கல்லு முதல் நவலோக மெல்லாம்
வாங்கியே நாதாக்கள் பாதம் போற்றி வாதமொடு வயித்திய முன் கைக்குள்ளாச்சே.

293. ஆச்சென்ற விபர மென்ன வென்று கேட்டால் அப்பனே எட்டு வகை சூலை குன்மம்
ஆச்சென்ற வலி வாய்வு உதிர வாய்வு அந்திர வாய்வு சூலை முட்டிருத்தி வாய்வு
நீச்சென்ற தமர் வாய்வு பித்த வாய்வு நீமை கவிசி கென்டை மகோதரம் பேராமை
தோச்சென்ற பெருவயறு காமாலை பாண்டு குசிகா வாய்வோடுப்பிச வாதந் தானே.

294. தானென்ற அந்தந்த வியாதிகட்கு தூத்தியதோர் அவிழ்தத்தில் திராவகஞ்--
சென்று யில்லாட்டால் அருபான மருந்து கொன்றிருவே ரேயெல்லாம் கும்பிட்டோடும்
வேச்சென்ற பாசான அறுபத்திநாலும் மெழுகாகும் உபரசங்கள் யீயமாகும்
கோச்சென்ற நவலோக மெல்லாம் நீறும் கொள்ளேயோ கொள்ளை யிது வாதந் தானே.

295. வாதமாங் கல்வத்தில் சேரை ~~சார~~ சூதம் வாத்துமே திராவகத்தில் மஞ்சாடி சூத்த
வேதமாஞ் சூதமது வெந்து நீறும் வேதையிலே வெகு தூரம் மெட்டியோடும்
சூதமாம் நவச்சாரம் கட்டி வாங்கி தோய்த்துமே திராவகத்தில் ரவியிற் போட
நாதமாஞ் சாரமது கட்டிப் போகும் நாதாக்களாட் டெல்லாஞ் சூதத்தாலே
போதமாங் கட்டியதோர் சாரந் தன்னை போட்டிடவே நாகமது கட்டிப் போகும்.

296. கட்டியதோர் நாகத்தில் லோகஞ் சேரில் கண் கொள்ளா வேதையாங் கண்டு பாரு
திட்டமாய் நவலோகம் நவரெத்தினங்கள் திராவகத்தில் தோய்த்துமே ரவியிலிட்டு
நாட்டியே புடம் போட நீறிப் போகும் நலமான மால் தேவி சீலையும் லிங்கம்
திட்டமாய் வீரமொடு முடன் சீனம் சிறப்பான செந்தியொடு கெவுரி பூரம்
தட்டியே பாசாணம் அறுபத்து நாலும் தனித் தனியே கட்டியது மெழுகுமாமே.

297. மெழுகாகும் ஒவ்வொன்றில் வேதை கோடி விரித்து நான் சொல்ல வென்றால் பனை யோலையில்லை

அருகாதே புத்திமான் நீயே யானல் அலையாதே பல நூலும் பார்த்துப் பார்த்து
விருக்ாதே செயந் தனிலே வயித்தியமுந் தேரும் சஞங்கலாய் திரிந்திட்டால் நான் செய்வ
தென்னே.

298. செய்வதற்கு வாதத்தின் கருவைக் கேளு செப்பாதே சூரியத்தில் விந்து நாதம்
செய்வதென்ன பூமியுட நாதமென்று சிறப்பான பிரம கெற்பம் கல்லுச் சுண்ணம்
மைவதென்ன பாரையாங் கல்லுப் பொன்னு பாங்கான அண்டமொன்று பிண்ட மொன்று
தைவதென்ன பஞ்ச பூத மஞ்சு மாச்சு தன்னுக் குளய்யன் நின்முல் குருவு மாச்சு
உய்வதென்ன பயனென்ன சாரசாரம் உரையாமல் சித்தரெல்லா மொளித்திடாரே.

299. ஒளித்திட்டுப் பல பலவாய்ச் சொன்னரய்யோ உள்ப் பொருளை யறியாமல் அலைந்
தார் வாதி
அளித்திட்டு அண்ட பிண்டம் ஆதி யந்தம் ஆகாசம் அடி முடியுமறியா தீதம்
அளித்திட்டு சாகாத வேகாதெல்லாம் அடங்கி நின்ற பொருளென்ன விந்து நாதம்
தெளித்திட்ட மனோமணித் தாய் பூரணமேயாகும் சிவ சிவா சூரிய வெளி அட்சரமு
மாமே.

300. அட்சரத்தை யறிந்தார்கள் சித்தரெல்லாம் அறியாமல் உலகத் தோரலைந்து
கெட்டார்
நிச்சயமா யென்னா லே நிலைக்கச் சொன்னேன் நிலை தருமம் பூரணத்தை நிலைத்
தப் பாரு
அட்சரமாய் நிலைத் தங்கி யறிவிற் கூடி அடங்கி நின்ற பொருளெல்லாம் மவுன
மாச்சு
அட்சரமாஞ் சொல்வதற்கு ஆராலாகும் அறிவு குருவல்லாத ஆராலுண்டே
நிச்சயமாய் வாசிதனை மூலத்தாணி நிலைந்திட்டால் அமிழ்தைதான் நிசமாய்க் காணே

301. காணே நீ யிந்நூலை யார்க்குங் காட்டாய் காட்டாமல் ரவி கோடி நரக மெய்
தும்
வீணே நீ வாசிதனை அங்கென்றாணி வேதாந்த சற்குருவை நித்தம் பூசி
ஊனே நீ மூலத்தில் நந்தி உள்ளிருந்து உந்தனக்கு உபதேசிப்பார்
ஆனென்ற ஆறுவமுமாய் கை நீக்கி ஆங்கார சஞ்சலத்தை அடித்துத் தள்ளி காணவே
காணவே கருவி காரணதி காணப் போக்கி சுண்ணடி சுளி முனையைக் கருதிப் பாரே.

302. கருதியே சூரிசியுட கருவைக் கேளு கை முறையாய்ச் சொல்லுகிறேன் காட்டார்
சித்தர்
கருதியே சூரிசியொடு பலந்தானப்பா கட்டியாய் வாங்கி மேல் கசடு போக
சூரிசியாங் கட்டி மேல் சுண்ணச் சீலை சுத்தியே கருவங்கங் குகையில் வைத்து
உருகையிலே நெய்க் குறட்டால் சூரிசை வாங்கி உறுதியாய் வங்கத்தில் முகத்தி
வாங்கே.

303. வாங்கவே யிப்படித் தான் ஏழு தரந் தோய்த்து வாங்கிடவே சூரிசியது வெள்ளை
யாகும்
நாங்கவே யின்ன மதிலப்பா கேளு நாய்ப் பாகல் விரையின் தயிலம் வாங்கி
எங்கியே சூரிசை யிதில் தோய்த்துத் தோய்த்து ஏழு நாள் ரவியிலிட நீறும் பா
ரே.

304. பாரினி மேல் முதல் தரமாம் நாதம் வாங்கி பாங்கான விந்துவதில் சமனாய்
வாரு
சேரே நீ குட்டிரு காசு போடு தெளிவாகும் வாங்கியதில் வீரம் பூரம்
ஆரே நீ கருநரிவி உரமுஞ் சூதம் ஆரு புள்ளி வண்டு முட்டை கழுதை வண்டு
சேரே நீ குருவண்டு புருகோடே எட்டும் சிறப்பான வகை வகைக்கு பலந்தான்
ஆக்கி
வாரே நீ பொடியாக்கி அதிலே போக மத்திக்கையில் வேரும் வகை தான் கேளு
வாரான அயக் கோலால் அலரிக் கொம்பால் மத்திக்கச் சலமாகித் தயிலமா
மே.

305. சிலத்திலே முன் சொன்ன சூரிசி தன்னை நீர்க்கமா யுள்ள வுள்ளப் பிரட்டிப் போடு
மலத்திலே ஏழு நாள்ப் போட மல்லிகைப் பூப் போலாம் மலர்ந்து சுண்ணமாகும்
நலத்திலே கடுங்கார மெத்தக் கேளு நவச் சாரம் விராகனென்று
முலத்திலே சவுக்காரச் சுண்ணமொன்று முன்னீராலரை சூரிசி மேல் கவசம் போ
டே.

306. போட்டுமே அஞ்சு சுண்ணக் குகையில் வைத்து புகழான குகை மேலே சுண்ணும்பு
சீலை செய்து
ஆட்டுமே பத்தெருவில் புடத்தைப் போடு அம்மம்மா என்ன சொல்வேன் சூரிசு
சுண்ணம்
காட்ட வென்றால் யாருந்தான் காட்டுவாரோ கை முறையாய்ச் சித்தர்கள் தான்
சொல்லுவாரோ
நீட்டென்ன குருவரியா நிசமாய்ச் சொன்னேன் நிலைத்து தொரு மனோன் மணியைப்
பூசை பண்ணே.

307. பண்ணியே சூரிசியுட குருவைத் தொட்டு பாங்காக் கோடி யுகம் வாதம் பார்த்
தேன்
யெண்ணியே பார்த்திட்டுத் தலைய வில்லை எடுத்த தொரு சரக்கெல்லாம் சுண்ண
மாகும்
நண்ணியே சூரிசியுட சுண்ணந் தன்னை தொட்டிட்டால் சேரரஉநமஞ்ஞ வெண்ணையாகு
ம்
பண்ணியே நவலோக மெல்லாம் நீறும் பாசாணவர்க்க மெல்லா மெழுகுமாகும்
தன்னீராம் சாகவாம் தனக்குத் தெல்லாம் சவளை போல் நவரசங்களியமாகும்

308. யியமாம் சூத மெல்லா மரியுமாகும் என் மக்காள் குகை கட்டி சாரணை செய்யில்
பொய்யல்ல சடத்தோடே உசரந்தா க்ஷம் போக்கோடே அகண்ட வெளி கடந்து போகும்
கை கண்டேன் நவலோக மெல்லாந் தங்கம் கல்லோடு மண் முதலாய் தங்க மாமே.

309. திசமுகமாம் செந்தூரம் சற்வரோகம் தீரும்:
தங்கமென்ற திசமுகமாம் குரு செந்தூரம் சாத்துரேன் நோயெல்லாம் தவிடு பொடியாக
பொங்கமாம் நவலோகந் தங்கமாகப் புகலுரேன் காரியம் பலந்தானென்று
கங்கமாம் நீரின் மேல் நெருப்பின் சாத்தில் காரியந்தனை யுருக்கிச் சாய்க்க கட்டும்
உங்கவே காரியங் குகையிலிட்டு உருகையிலே கெவுரியொரு பலந்தான் போடு
சாங்கமாய் செய்நீரால் கட்டிப் போகும் கலந்துருக்கி யொன்றாகக் கல்வத் தாட்டே.

310. ஊட்டியே தாம்பிரமும் பலந் தானென்று சுத்தி செய்து கட்டியதோர் கெந்த கந் தானென்று
தாட்டியே குமரியுட சாத்தாலாட்டி தாம்பிரத்தின் மேல்ப் பூசிப் புடத்தைப் போடு
ஊட்டியே புடமாரி எடுத்துப் பாரு உற்பனமாய் நொறுங்கியது பற்பமாகும்
தீட்டியே கல்வத்திலிட்டுச் சேகு சிறு கண்ணும் நாகமொரு பலந்தான் வாங்கி
மூட்டியே யிருப்பை நெய்யில் சாரம் போட்டு மூவாறு திரஞ் சாய்த்து எடுத்துக் கொண்டு
ஆட்டியே செய்நீரில்லொரு தரஞ் சாய்க்க அதிகமாம் நாகமது கட்டிப் போமே.

311. கட்டியே நாகமது நின்றுருகும் போது கசகாதே சூதமொரு பலத்தை யூட்டு
தெட்டியே சேர்ந்தொன்று யுருகும் போது திருமாலின் தேவியொரு பலந்தான் போடு
வெட்டியே யுருகி நன்றாய்க் கல்வத்திலிட்டு வெள்வங்கம் பலமொன்று குகையில் வைத்து உருக்கி
ஆட்டியே சூடாவின் தோடைச் சாத்தில் அப்பனே யேழு திர முருக்கிச் சாயே.

312. சாய்க்கவே வெள்வங்கம் நொருங்கிப் போகும் சார்வான குகையிலிட்டு உருகும் போது
வாய்க்கவே மசேலையும் பலந்தானென்று வளமான செய்நீரால் கட்டிப் போடு
சாய்க்கவே உருகி யொன்றாய்க் கல்வத்திட்டு தங்க மொரு பலம் நின்று உருகும் போது
ஆய்க்கவே சாதிலிங்கம் பலந்தானென்று அதிலிட்டு உருகும்பபோ உருகும் தங்கம்
ஆற்கமா யிவை யெல்லாங் கல்வத்திட்டு அப்பிரக நவநீதம் பலந்தானென்றே.

313. பலமான பஞ்சமுக சரக்கு ரெட்டி பாங்கான் திசமுக மாங்குருவுமாச்சு
பலமான குருவோடே பனிரெண்டாச்சு பேசாதே பனிரெண்டுந் தீட்சையாச்சு
பலமாங் குருவென்று சொல்லக் கேளு முப்பூவின் குருவதிலே களஞ்சி போடு
பலமாக யிவை யெல்லாஞ் சேர்த்து ஒன்பது பேருள வெடியுப்பு நீராலாட்டே.

314. ஆட்டியே நாலு சாமம் வில்லை கட்டி அப்பனே காய்ந்த பின்பு அகலிலிட்டு
மூட்டியே மேல் மூடிச் சீலை செய்து சிறு புடமாய்ப் போட்டெடுத்துக் கல்வத் திட்டு
நாட்டியே பொற்றலையின் சாத்திலே நாலு சாம மாட்டி முன்போல் புடத் தைப் போடு
காட்டியே புள்ளடிச் சார் ஆல தாமரைச் சாறு கலந் தொன்று யாட்டியே புடத்தைப் போடு
நாட்டியே மறுபடியும் சாத்திலரைத்துமே நலமாக ஆட்டியே புடத்தைப் போடே.

315. புடம் போட்டு எடுத்ததனைக் கல்வத்திட்டு புகழ் முருக்கம் பூவோடு செம்பருத் தம் பூவும்
மடம் போடு மாதளம் பூக் கத்தாளம் பூவும் ஆலாமல்லிச் சாறோடு ஊசி மல் லிச் சாறும்
கடம் போடு பனிரெண்டு சாமந் தாழும் கை முறையா யரைத்துமே ஆளாய்ப் பல்லி
அடம் போடு காசியென்ற மேருக்கேத்தி அளகான வாலுகையில் வைத்திடாயே.

316. வைத்துமே முத்தீயும் பனிரெண்டு சாமம் வளமாக எரித்திட்டு ஆறிப் பின்பு
அய்த்துமே குப்பியை நயிப்பால் வாங்கி ஆத்தாளுக்கும் வடுகனுக்கும் பூசை பண்ணு
உய்த்துமே கந்தனொடு கணபதிக்கும் பூசை உபதியாய்ச் செய்து குப்பி உடைத் துப் பாரு
பைத்துமே செந்தூர மென்ன சொல்வேன் பருதி யென்று கண் கூசிப் பார்க்கப் போமே.

317. போமென்ற செந்தூரம் நவலோகத்தில் போட்டிடவே பத்தாகு மாத்துக் காணும்
நாமென்ற செந்தூர மனுபானத்தில் நாற்பது நாள் மண்டலமே கொள்ளும் போது

போமென்ற நாலாயிரத்த நாற்பத்தெட்டு பொல்லாத நோயெல்லாம் பொடியாய்ப் போகும்
கோமென்ற பதினெட்டுக் குட்டரோகம் குன்மமொடு கிரந்தி அரையாப்பு சூலை
வாமென்ற பாண்டு காமாலை சோகை வலி குன்மம் சத்தி பித்த வாய் சூலை மாண்டு போமே.

318. மாண்டு போம் சன்னி சுரந் தாகந் காசம் வாத பித்த சிலேற்பனத்தில் வந்த நோயெல்லாம்
மாண்டிடுமே கண் காதோடிப் போகும் மண்டலத்தில் காய சித்தி சுருக்கா மெத்த
கண்டதொரு கற்பமின்னம் வேறே யுண்டோ கைப்பு புளி ரெண்டு தள்ளிப் பத்தியமா யுண்ணு
ஆண்டு பார் சென்றாரம் வேக மெத்த ஆருந்தான் சொல்லார்கள் அப்பா பாரே

319. அரிந்துமே தாம்பிரத்தின் சத்தி கேள் அரிதப்பா சொல்லுகிறேனப்பா கேளு
பரிந்து தான் பனச் சாறு புளியிலையின் சாறு பசுவிட்ட கோமியத்தில் பத்து நாளூறி
பொரிந்து தான் யெடுத்த தலை புளியிட்டுத் தேய்த்து புளி நரளைக் கிழங்கு நாய்க் கொட்டான் பட்டை
செரிந்து தானிட்டதலைப் பொதிந்து உடம்பில் திரமாகப் புடம் போட்டு எடுத்துக் கொள்ளே.

320. எடுத்துமே அகத்தியுட பசுப்புச் சாறும் இதமான முருக்கிலைச் சார் நாய்ப் பாகல்ச் சாறும்
கடுத்துமே கொள்ளிலைச் சார் தேசிநீரும் கலந் தொன்றாய் ஒரு கலசந் தன்னில் வாரு
உடுத்துமே உவர்ப்பூவு ஒரு பலமே போடு உக்த கருங் குன்டு மணி அரைத்து நீயும்
கடுத்துமே தேசிக் காயளவு நீயும் கலக்கியே தாம்பிரத்தை உருக்கிச் சாயே.

321. சாய்க்கவே வெவ்வேறே பத்து முறை சாய்ப்பாய் தாம்பிரந்தான் கடிய சுத்தி தங்கம் போலாம்
ஆய்க்கவே வேதை யிட்டால் ஊறல் காணு அச்செம்பு நாலு வெள்ளி ஆறு சேர்க்க
மாய்க்கவே மாத்தென்ன ஆறு காணும் மயங்காத தாம்பிரத்தின் சுத்தி நன்று
தோய்க்கவே தாம்பிரத்தில் செய்முறைகளெல்லாம் சுத்தி செய்ய மெத்த நன்று சுருக்காய்ப் பாரு.

322. சூத பற்பம்:-
சுருக்காகச் சூதபற்பம் சொல்லக் கேளு சூதமது ஒரு பலந்தான் கல்வத்திட்டு
வருக்காக முந்திரிக் கொட்டையுட தயிலம் வாங்கியே சூதத்தில் விட்டு ஆட்ட
யிருக்காகச் சூதமது சலவை போலாம் எடுத்துமே கல்வத்திலிட்டுக் கேளு
மருக்காக விடந் தீண்டலிச் சாறும் மால் தேவிக் கிழங்குச் சார் வெள்ளெருக்கம் பாலே.

323. பாலோடு வகை வகைக்குச் சாமமாட்டு பாங்காக வில்லை தட்டிக் காய வைத்து
கோலியே அகலிட்டு மேல் மூடி தான் குக்குடமாய் புடம் போடச் சூதம் நீறும்
ஆலவே அம்பைப் பூப் போலாம் பற்பம் ஆத்தாளைப் பூசை பண்ணி யெடுத்துக் கொண்டு
பாலென்ற பணவிடை தானொன்றுக்கு பனைவெல்லந் தன்னுடனே பத்தியமாய்க் கொள்ளே.

324. கொள்ளவே ரச பற்பம் வாய் வேகாது குமையாகும் நோயெல்லாம் கூறக் கேளு
கொள்ளவே கிரந்தி குட்டம் வாய்வு சூலை கூறிய அரையாப்புக் குன்ம மெட்டும்
மெள்ளவே நோயெல்லா மோடிப் போகும் விருது சொல்லி வயித்தியத்தை விரைந்து பாரு
உள்ளபடி சூத பற்பஞ் சொல்லிப் போட்டேன் உத்தமனே தங்க மென்ற தாயைச் சேர்த்து
கள்ளமில்லை நவலோகம் பத்தக் கொன்று காட்டிடவே மாத்தாறு கனகமாமே.

325. கனகமாம் வெள்ளிக்கு வெள்ளைப் பாசாணம் கட்டுதற்கு குருச்சமாய்க் கருதிக் கேளு
கனகமாம் பாஷாணக் கட்டி வாங்கி கருதியே வெள்ளாவி வேகும் போது
வசனமாய் வெள்ளாவிச் சீலை நடு வைத்து வாங்கிடவே யென்னைக்கு சுத்தியாகும்
சுணங்காதே பிராய்ப் பட்டை தயிலம் வாங்கி சுருக்கிடவே கட்டியது சுத்தியாமே

326. சுத்தியாம் வெள்ளை சவுக்காரம் வெல்லம் சுகமாக ரேகித்து அரைத்துக் கொண்டு
புத்தியாம் பாஷாணக் கட்டி மேலே பொதிந்து நீ தாம்பிரக் குகையில் வைத்து
சித்தியாம் மேலுமந்தச் சில்லால் மூடி சீலை செய்து குக்குட புடத்தில் போட்டு
புத்தியாய்த் தேவி பதம் பணிந்து போத்து புகையாது பாசாணங் கட்டிப் போமே.

327. கட்டியே உருகியது மணி போலாகும் கசட கத்திச் செம்பிலே பத்தக் கொன்று
முட்டிடவே வெள்ளியா மெழுகு செய்ய முறையைக் கேளு முள்ளம் பன்றி நெய் வாங்கி

தட்டியே வெண்கருவுஞ் சதிரக் கள்ளிப் பாலும் சாரிக்கச் சலமாமம் தன்னை வாங்கி
கட்டியே முள்ப் பன்னி நெய்யோ டொக்கக் கலந்துமே பாசாணங் கறல்டியிலே வைத்து
மூட்டியே ஒரு சாமம் சுருக்கப் போட மெழுகாகும் பூசை பண்ணி யெடுத்துக் கொண்டு

328. எடுத்துமே வேதை யிட்டால் பனிரெண்டு மாத்து யெட்டியே வெகு ஊரமோடு மப்பா
எடுத்துமே வாத மென்கு வயித்தியத்தைப் பாரு யென் மக்காள் மோட்சத்துக் கிடமாய் பாரு
அடுத்துமே கட்டியதோர் பாசாணந் தன்னை அநுபான சுரசங்கள் கசாயந் தன்னில்
கொடுத்திடவே சுரமொன்பதுந் தோஷ மெட்டும் ஓடி போகும் வாத சன்னி தொல்லூர் த்தாரும்
அடுத்துமே கிட்டாதே ஓடிப் போகும் அறையிறேன் பாஷாண மதீதங் காணே.

329. காவென்ற சாதிலிங்கக் கட்டுக் கேளு கருதியே நெடுங் கம்பி லிங்கம் வாங்கி
பாவென்ற பலமொன்று அயக் கறல்டியிட்டு பளச் சாறு முலைப் பாலுஞ் சுருக்குத் தாக்கு
கோவென்ற ஒரு சாமம் சுருக்குத் தாக்கு கொம்புத் தேன் ஒரு சாமம் சுருக்குத் தாக்கு
யேனென்ற லிங்கமது கடிய சுத்தி எடுத்து மது அயக் கறல்டி தன்னில் வைய்யே.

330. வைத்துமே அய் விரலி பருபாகல் சாறும் வகை வகைக்கு ஒரு சாமம் சுக்குப் போடு
அய்த்துமே அயப் பொடியை பளச் சாறு விட்டு அரைத் தந்த லிங்கத்தின் மேலே பூசி
உய்த்துமே பேய்க் குமுட்டிக் காய்க்குள் வைத்து ஒரு முடர் தானிட் டெடுத்து முருக் கட்டாச்சு
தைத்துமே சன்னி சுர தோஷமெல்லாம் சன்னுமே தொல்லூர் த்தாறு வாதம்
செய்த்துமே மெழுகு செய்ய வேணுமென்றால் செவ்வகத்திப் பூப் பட்டை யிடித்துச் சாறு
பய்த்துமே பன்றியுட நெய்யுங் கட்டி பாங்காகச் சுருக்கிடவே மெழுகுமாமே.

331. மெழுகெடுத்து நவலோகந் தன்னிலிய வேதித்துப் பத்தரையே மாத்துக் காணும்
தருகெடுத்த மெழுகிலொரு பணந் தானுண்ணில் சன்னி சுரந் தொல்லூர த்தாரும் போகும்
தெளிவான அரிதாரந் தன்னை வாங்கி தேசிநீர் சுண்ணம்பிலேழு சுத்தி செய்து
எளிதான ஒட்டிலிட்டு அடுப்பிலேத்தி யிரு சாமங் கரந்தைச் சார் சுருக்குத் தாக்கே.

332. அரிதார செந்தூரம்:-
தாக்கிடவே அரிதாரங் கட்டிப் போகும் சன்னி சுர தோஷமொடு சயமீளை காசஞ்
சோக்கிடவே அரையாப்பு அரு கன்னி கிரந்தி குலையொடு பதினெட்டுக் குஷ்டம் வாய்வு போகும்
தாக்கிடவே செந்தூரஞ் செய்யக் கேளு சுத்தி நெடுஞ் சாறனை வேர் மூக்கில் ரெண்டும்
ஆக்கிடவே முருக்கிலைச் சார் வாய் நீராளும் அரைத்துமே மால் தேலிக் சங்கி பூட்டி
போக்கான காவி மண் சீலை யேழு பொதிந்துமே முக்கடத்தில் போட்டு வாங்கே.

333. போட்டெடுக்கச் செந்தூரமாகும் போலாம் புகட்டிடவே நவலோகம் பத்து மாத்து
பாட்டெடுத்த நாளொன்றுக் கது பானத்தில் பணவிடை தான் மண்டலமே கொண்டாயானால்
காட்டெடுத்த நோயெல்லா மோடிப் போகும் காய சித்தாம் முருந் தொட்டுச் செய்து பாரு
ஊட்டெடுத்த காரீய்ய பற்பந் தன்னை வுறையிறேன் காரீய்யந் தன்னை வாங்கே.

காரீய்ய பற்பம்:-

334. வாங்கியே நல்லெண்ணை தன்னிலே தான் வகையாக யேழு தர முருக்கிச் சாய்க்க
தாங்கியே காரீய்யஞ் சுத்தியாகும் தகடாக கனத்திலே தட்டிக் கொண்டு
பாங்கியே பத்திராட்சு யிலை யரைத்து பக்குவமாய்ப் பொதிந்து மேல்ச் சீலை செய்து
ஓங்கியே புடமிடவே வங்கம் நீறும் அப்படியே மறுபடியு மெடுத்துக் கொண்டு
தாங்கியே சுத்தி சாறனை யரைத்துச் சார்வாக முன் போலே பொதிந்திடாயே.

335. பொதிந்துமே புட மூன்றில் காரீய்ய பற்பம் புறமை யென்ன நறும் பூ நிறமொவ்வாது
அதிர்ந்துமே பற்பத்தை யநுபானத்தில் அரிந்தன்ன வாத சன்னி சயமீளை காசம்
கதிர்ந்ததொரு தேகத்தில் கடுப்புக் கத்தல் கடிதான நோயெல்லாங் காணா தோடுந்
தெளிந்த பற்பத்தில் பரி குகஞ் சேர்த்து செய் நீராலாட்டியே புடத்தைப் போட
கதித் தெழுந்த குருவாகும் வேதையாகும் காய சித்தாங் காரீய்ய பற்பந்தானே.

336. <u>தாம்பிர பற்பம்</u>:- 9.1.64.

பற்பத்தில் வெகு சுடினம் தாம்பிர பற்பம் பண்ணில் சிவயோகச் சித்தியாகும்
அற்ப மென்று யென்னதே தாம்பிரந் தன்னில் அஞ்சு முத்திரைத் தகடா பால சல்லி வாங்கி
கொப்பான கருங் குண்டு மணி யரைத்து கொள்ளிலையின் சாத்திலே கரைத்துக் கொண்டு
கற்பமாம் பழச் சா தேசி நீருங் கலந்ததிலே தாம்பிரத்தைக் காச்சித் தோயே.

337. தோய்க்கவே யெழு தரஞ் சுத்தியாகும் சொல்லரிய ஆதளை கொண்டு வந்து
போத்தியே அரைத்ததைத் தாம்பிரத்தில் பொதிந்து சுத்தியே பெரியதொரு புடத்தைப் போடு
சொல்லரிய தாம்பிரந்தான் வண்மையாகும் நயத்தமே வெள்ளை நீர் முள்ளி வாங்கி
நலமான வெள்ளெருக்கம் பாலாலாட்டே.

338. ஆட்டியே தகட்டின் மேல் தட்டிப் பூசி அப்பனே உலர்ந்ததின் மேல் சுண்ணம்புச் சீலை
ஆட்டியே பொதிந்து முன் போல் புடத்தைப் போடு ஆத்தாள்க்கும் வடுகனுக்கும் பூசை பண்ணு
தாஉண்டிகமார் தாம்பிர பற்ப மென்ன சொல்வேன் சங்கு போல் நீறியது தவளமாகும்
கேட்டென்று சித்தர்கள் சொல்வாரோ செகத்தி லெந்தன் சீடருக்காய்ச் செப்பினேம் நாம்
காட்டாதே யொருவருக்குங் கை முறை யிதப்பா காட்டினும் கடை நரகில் மாறுவாயே.

339. மாளாதே யென் மக்காள் சொல்லக் கேளும் மகத்தான பற்பத்தைப் பதனம் பண்ணு
கோளான குதமொரு பலத்துக்கப்பா குறிப்பான பற்பமொரு களஞ்சி போடு
தேளான வெண் கருவு எருக்கின் பாலுஞ் சேர்த்தாட்டு குதமது விரைந்து போகும்
வேளை நீ வில்லை செய்து அகலிலிட்டு மேல் மூடிச் சீலை செய்து குக்குடத்தில் போட
கோளான குதமொடு தாம்பிர பற்பம் கொடிதான் சுண்ணமாங் குருவ மாச்சே.

340. குருவெடுத்து நவலோகந் தன்னில் பூசி குறையாது பத்தரை மாத்துக் காணும்
பருவான சரக்கெல்லாஞ் சுண்ணமா முன் பற்பத்தில் பணவிடை தான் அநுபானத்தன்னை
செரிவான மண்டலமே கொண்டாயானால் தீராத குன்ம மெட்டு வாய்வு சூலை
அருவுத்த கிரந்தி யரையாப்புக் குஷ்டம் ஆகாத கயரோக மந்தார வாய்வு
திருகெடுத்த பல பிணியுந் தீர்ந்து போகும் தீர்க்கமாங் காயமது சித்தியாமே.

341. <u>நாக பற்பம் செந்தூரம்</u>:-

சித்தியாம் நாகத்தில் செந்தூர பற்பம் செப்புறேன் மாணுக்கன் தெளிந்து கேளு
புத்தியே சிறு சுண்ணும் பலந்தான் பத்து பாங்கான யிருப்பை நெய்யில் சாரம் போட்டு
முத்தியாய் மூவாறு தரந்தான் சாய்க்க முறையாக நாகமது சுத்தியாகும்
சித்தியாய் யாடுதொடா இலைச் சாறுஞ் செய்நீருஞ் சேர்த்ததிலே எழு தரஞ் சாயே

342. சாய்க்கவே நாகமது கட்டிப் போகும் கருவான நாகவல்லி யிலையிலேது
ஆய்க்கவே நீரு மேல் நெருப்புங் கூட்டி அரைத்துமே கவசமாஞ் செய்தலத்தி
ஆய்த்துமே பெரியதொரு படத்தில் போட அப்பனே நாகமது நீறிப் போகும்
காய்க்கவே கார கட்டி நின்றதானால் கற்பூர வெத்திலைச் சார் விடந் தீஞ்சான் சாறும்
ஆய்க்கவே கல்வத்தில் அரைத்து நன்றாய் அப்பனே வில்லை தட்டி புடத்தில் போடே.

343. புடம் போட நாக பற்ப மென்ன சொல்வேன் பொற் கொம்பைப் பூசை பண்ணி எடுத்துக் கொண்டு
இடம்போடு அநுபானம் அறிந்து கொள்ள குன்மமொடு கைரோகங் காசி சூலை
நடம்போடு பாண்டு காமாலை சோகை சொல்லரிய மேகமொடு சுவாச காசம்
வடம்போடு சயமீளை மந்தார காசம் வறட்சியொடு இத்திருமல் புகைச்சல் மெத்த
திடம் போடு உள்மூலம் சோகை தீராத கயரோகந் தீரு மென்னே.

344. என்னவே மடல் வாதம் மடல் பிரட்டு யீளை பித்தந் தீராத யிருமல் வாய்வு
நன்னயமாய்ச் சொன்னதொரு வியாதி யெல்லாம் நாடாது நாக பற்பம் கொண்ட போது
சொன்னதொரு கட்டியதோர் நாகந் தன்னில் குகமிட்டு தங்க மிட்டுச் செந்தியிட்டு
கன்றுன குலாமல்லிச் சாத்தாலரட்டி காசி யென்று மோருக் கேத்தே.

345. யெத்தியே பனிரெண்டு சாமம்தி யாட்டி எடுத்ததனைப் பூசை பண்ணி
பாத்துமே நவலோகம் நாத்துக் கொண்டு பரிசிக்கப் பதிந்து மாத்துக் காணும்
ஆத்துமே அநுபானத்தோடே கொண்டால் அகலாத நோயெல்லா மகன்று போகும்
காத்துமே மண்டலமே கொண்டாயானால் காயத்துக் கழிவேது கற்பாந்திரமாமே.

346. கற்ப மென்ற யிது வெல்லாங் கற்பமல்ல காய சித்திக் கேத்த கற்பங் காட்டார் சித்தர்
சொற்பமாய்ச் செய்யென்று சொல்லொன்னை சொன்னதுவுங் கருமறைந்துச் சொல்லப் போகா
அர்ப்ப மென்று நகைப் பொருளைச் செலவு செய்து அலைந்து கெட்டுப் போவார்கள் அதிலுல் பாவந்

அதிலுல் பாவந் தப்பில்லாச் சீடரென்று பின்கைகளுக்காதச் சாகாத
கற்பமென்று சாற்றுச் சேரே.

347. சாத்தரிய வர்தம் நாலு சாதி தனை யரிந்து முதல் சாதி நாதம் வாங்கி
சேத்துமே கர்பூரம் பொடித்துப் போட்டுச் சிலமாகுந் தெளிவ்திலே சமரும் விந்து
சேர்த்துமே நாளொன்றுக் கல் களஞ்சி வீதம் சய பர்பங் குரு பர்பங் சேர்த்துக் கொள்ளு
சாத்தரிய மண்டலத்தில் தேகம் பொன்னும் சத்தியமாய்ச் சொல்லி விட்டேன் சாவில்லை தானே.

348. இல்லையே யெமனென்ற பேரும் போச்சு மிருக்கப் பேரபான மென்றும் வாஸ்து வென்றும்
அல்லவே செய்நீருஞ் சுபான மென்றும் அப்பனே மத்தியாபான மென்றும்
செல்லவே ஆயிரத் தெள் மலருக்குள்ளே சிறந்திருந்த பூ வென்று மதிமுர்த மென்றும்
சொல்லாதே சாகாது வேகாதென்று சித்தர்கள் தான் பூசிக்கும் வாம மென்று
வல்லவே யிதை விட்டு வெற நீருண்டு வகை யறிய மாட்டார்கள் வாமி தானே.

349. மாளாமல் சொல்லியதோர் கர்பங் கொள்ளு மறைத்து வைத்த வாலையுட கருவைக் கேளு
மாளாத மதி யமுர்த பூரணந் தானப்பா மயங்காதே கடத்தில் வாலை தன்னை
மாளாதே பீங்கானில் வேறே வாங்கி வளமான கர்பூரம் பொடித்துப் போடு
மாளாமல் பொருமியது உப்பு முப்பும் மைந்தனே கல்வத்திலிட்டுக் கேளு
மாளாதே வில்லை தட்டி ரவியில் காய்ந்து வளமான அஞ்சு கஞ்சக் குகைக்குள்ளே வைய்யே.

350. குகை தனிலே வீரமொரு புரம் பூரம் குரு வங்கு கருநாவி உரமுஞ் சுத்த
வகையான சிப்பி நீர் தன்னாலாட்டி வாலை யென்ற வில்லையின் மேலப்பி பூட்டி
அசையாத அஞ்சு கஞ்சக் குகைக்குள் பூசி அகக்குள்ளே வாலை யென்ற வில்லை வைத்து
நகையாக மேல் மூடிக் கஞ்சச் சீலை சுத்தியே காடையொரு படத்தைப் போடு
குகையான முப்பூவின் வாலையாச்சு முறையோடே அய்ந்து தரம் புடத்தைப் போடே.

351. போடவே வழலை யென்ற கண்மாச்சு புத்தி கெட்ட வாதிக்கே சித்தர் சொல்லார்
கூடவே நாதாக்களாட் டெல்லாந்தான் அம்மம்மா வழலை விட்டால் வேறே ஒண்டோ
மேடென்ற அடி முடியும் கார சாரம் பேரான அண்டரண்டம் பிரம கெற்பம்
வாடென்ற எரியென்றும் பாரை யென்றும் மதரயன் தனை கல்லென்றும் வீரமென்றும்
கூடவே சொன்னதெல்லாம் விந்து நாதம் அதையல்லா வேறென்று மறியென்பாரே.

352. பாரென்ற நாதத்தில் விந்து புக்கி பாங்கான பிரிதிவியும் நீர் அப்பும் வாய்வும்
ஆரென்ற அய்வருந்தான் தேசத்திலே அருவருவாய் அயங் கால பிண்டமாச்சு
சாரென்ற வழலை யென்ற முப்பூ வென்றும் சவுக்காரக் குரு வென்று மிருக்கே போம்
பாரென்ற கோச பீசமிங்கே பேராம் பஞ்ச பூத சாக்கென்று மிருக்கப் பேராம்
பேரென்ற யிதை மறைத்துச் சித்தரெல்லாம் பல பலவாய் நாலு தோரும் பாடினாரே.

353. பாடினாரென்னாலில் வெளியாய்ச் சொன்னேன் பதினெட்டுப் பேருமென் மேல் பகைத்திட்டார்கள்
வீடியே நான் சொன்னதொரு வழலைப் போக்கு வெவ்வேறே யென்று சொல்ல மலைக்க வேண்டாம்
பாடியதோர் நாத விந்தில் வழலையாகும் பரிவான பிண்டத்தில் வழலையாகும்
மாடிய தோரடி முடியும் வழலையாகும் மந்தியொடு மாமிசமும் வழலையாகும்
மாடியே வழலைதொட்டு வாதம் பாரு அசைகாத கற்பத்தை உண்டு தேறே.

354. தேறவே ரச வாதம் சிவ சொர்தப்பா செப்பாதே பொருள் தனையே யிச்சிக்காதே
யாரவது செய்தாலும் பரத்துக்கு யீந்து அறிவு குரு பாதத்திலடங்கி நில்லு
பாரு நீ யற்பமாய்த் திரிந்தாயானால் பரியாது அவன் தனக்கு வாதமேது
கூருர்கள் வாதமொடு ஞானம் ரெண்டும் குரு பதத்தைப் போற்றி செய்யில் அறிவில் கூடும்
வீருக என்னாலே வெளியாய்ச் சொன்னேன் விண்டிட்டால் வின்விட விழும் பாரே.

355. விளாமலைநிலுக் குளவிலை யுன்னி வேதாந்த வாலையைத் தான் நித்தம் பூசி
மாளாத யோக சித்தி யட்டமா சித்தி வசமாக வெள்ளெருக்கின் மூலி தன்னை
மாளாதே யதிலுடைய முளையை வாங்க மயங்காதே வகை யென்று கதிர் நாள்ப் பூச
மாளாதே மூலி யென்ற வேரறுமல் அடி மூலங் கண்டளவு வெட்டிச் சோதி
கேளே நீ யந்த வேர் நுனியிலப்பா விளங்குதலும் லிங்கம் போலிருக்கும் பாரே.

356. இருக்குமதை வெண் சாவல் பெலியும் பொங்கலிட்டுமே தூப தீப நெய்வேத்தியத்தோடும்
கருக்க மேல் கன்னி நூல் காப்புக் கட்டி கருதியே வேரதனை வேறே வாங்கி

விருக்குமே விநாயகனைப் போல் பண்ணிக் கொண்டு மீதுள்ள வேரை யெல்லாம் வெவ்வேறே குளிச
முருக்குமே செய்து நீ தம்பனமும் வசிய மோகன உச்சாடனமும் முறையாய்ச் செய்தே.

357\. செய்குமே வெவ்வேறே வைத்துக் கொண்டால் செகமோ கதம்பனமும் வசியுஞ் சித்
செய்திடவே யெட்டெட்டுஞ் சித்தியாகும் திறமான அடிமூல விநாயகனைக் கேளு
யெய்யுமே ஆறை யடாத் தலை மண்டையோடு கொண்டு வந்து குளி வெட்டி தாவித்துக் கொண்டு
உய்யுமே பதின் மேலே மண் திரளை போட்டு ஓங்கார பீட்டதின் மேலிருந்து கொண்டு
அய்யுமே மசான மாகாளியை கேட்ட மல்லாட்டாலி லலமே மயான மென்ற
மெய்யுமே பரித் தகட்டில் நவ கோணமிட்டு விநாயகனை வைத்ததின் மேல் நின்கென்றேதே.

358\. ஒருவ மவுனத்தி மெத்தைப் பத்தி உத்தமனே வாசிதனை யடக்கி யுள்ளே
ஓதவே சரியை யொடு கிரியை மார்க்கம் உத்தமனே யோக சித்தி ஞான சித்தி
தீதறவே யெட்டொடுஞ் சித்தியாகும் சிவயோகங் கைக்குள்ளே சிக்கிப் போச்சே.

359\. போச்சென்று சித்தரெல்லா மெச்சிக் கொண்டு புகழ்ந்தனக்கு சகல சித்து வகையில்லார்
ஆச்சென்ற சித்துக்குச் சித்தருவார் அரிதான வெள்ளெருக்குச் சிவமூலியப்பா
தேச்சென்ற திம்முறை தாருருஞ் சொல்லார் சித்தர்கள் தான் செய்கின்ற முறையீதப்பா
நாச்சென்ற வெள்ளெருக்கின் தயிலந் தன்னில் ரசம் நீரம் நவச் சாரங் கட்டிப் போமே.

360\. போமென்ற நவச்சாரந் தன்னை வாங்கி புகழான தயிலத்தில் பூசிப் பூசி
தேமென்ற யேழு நாள் ரவியிலிட்டு சிறு புடமாய்ப் போட்டெடுக்கச் சாரங் கட்டும்
மாமென்ற சாரத்தால் செய்நீராகும் அறுபத்து நாலு சரக்குங் கட்டிப் போகும்
மாமென்ற ருதத்தைக் கல்வத்திட்டு அரைத்தந்தத் தயிலத்தால் வில்லை கட்டி
போமென்ற ஒட்டிலிட்டு மேலோடு மூடி புடம் போடச் சுதமது நீறிப் போமே.

361\. நீறியதோர் தயிலத்தில் சொல்லக் கேளு நிசமான புனுகு கோரோசனையுங் கூட்டி
காரு நீ சாராவின் பாலாலாட்டி கருவென்ற சுக்கிலமுங் கருதிக் கொஞ்சம்
சேரே நீ தயிலத்தி லொக்கச் சேர்த்து திலதமிடச் செகமேழும் வசியமாமே.

362\. ஆமென்ற தேசியிலே யனேக வித்தை யாருந்தான் சொல்லார் களப்பா கேளு
காமென்ற தேசியென்ன கடைப் பிறப்பு கருவறியா மாலபார்கள் தான் கழுதை யென்பார்
காமென்ற வெகுபிறப்புங் கடந்து போச்சு காசினியில் மறு பிறவியில்லை யில்லை
தேமென்ற தேசியென்ன சிவத்துக் கொக்கு தேசிகளு மென்று சித்தர் செப்பினரே.

363\. தேசி நீர் :-

செப்பினர் தேசியுட வித்தை கேளு திறமான பாசாண மறு பத்து நாலும்
செப்பினர் சுத்தி செய்த தேசி நீராம் சிறப்பான அன்னீரில் பூவிரிட்டு
நப்பியே கலக்கி யந்தத் தெளிவை வாங்கி நலமாகச் சொல்லியதோர் சரக்கெல்லாந் தான்
செப்பியே சுடும் சுத்தியாகும் பாரு செப்பரிய யிதை விட்டால் செயமாகாதே.

364\. செயமாகத் தேசியுட குளம்பு தன்னை சிறப்பான பூப் பீடத்தில் தயிலம் வாங்கி
சுயமாகுங் காரிய முருக்கிச் சாய்க்க கட்டியது குருவாகும் வேதை கோடி
தமவான தேசியுட மண்டை தன்னை தயிலமாக யிறக்கி யதிற் சாரம் போட்டு
சுயமான நாகத்தை யுருக்கிச் சாய்க்க கட்டிப் போர் தயிலத்தில் லிங்க மெழுகாகும்.

365\. மெழுகாகு மதின் பித்து முருங் கானுர் மெய்க் காட்ட வித்து வே சாத்தை யோதில்
தெளிவாகுங் கருங் கழுதைப் பித்து வாங்கி சிறந்த புல்லா மணக்கும் பேய்ப் பீர்க்கம் வித்து
ஒளிவான கருவேம்பு தயிலம் வாங்கி குளியானை யோடுந் தன் சுக்கிலமுங் கூட்டி
தெளிவான பித்துடனே சேர்த்து மத்தித்துத் திலதமிடச் சிவனுங் காணார் கேளே.

366\. கேளப்பா வதிலுடைய கன்னை வாங்கி கெடியாக உலத்தியே பொடியாய்ச் செய்து
வாளப்பா பெண்ணுடைய விலைக் கச்சலும் வாங்கி யந்தப் பொடி யூட்டித் திரியாய்ப் பண்ணி
ஆகுமே காரெள்ளுத் தயிலந் தன்னில் ஆனைக் கல் சட்டியிலே மை யெரித்து வாங்கி
காருமே குறைபடாப் புனுக் கஸ்தூரி கையிலிடப் பாதாள முருகியோடே.

367\. ஓடுமே தாசி முதல் கன்னி வரையப்பா உத்தமனே புதையலெல்லாம் வெளியாய்த் தோற்றும்
ஓடுமே அஞ்சனங்கள் பார்க்கும் போது அணுகாமல் பூத வேதாள மோட
யேட நீ யிருமலமும் பண்ணி விட்டை யிடை பாகம் ரெண்டு மொன்று தயிலம் வாங்
ஒடே நீ சிவந்த கருச் சீலையிலே ஊட்டி உலத்தியே திரியாக்கித் திரித்துக் கொள்ளே

368. திரித்துமே தேசியுட கொளுப்பு வாங்கித் திரமாக நெய்யுருக்கித் தீப
மேத்த
மரித்துமே அம்மனுடன் பிடாரி சுற்கை மகாபூதம் வேதாளம் மருண்டே
யோடும்
பிரித்துமே பிரம ராஊச்சதை பூதபில்லி பிசாசு தொட்டு மானிடர கொட்டி
கொண்டால்
நெரித்துமே தீபமுகம் பார்க்கச் சொல்லு நெத்தி தனில் சிந்தென்ற அஉங்ச்
சரத்தை ஓட்டே.

369. ஓட்டவே பூதப் பிரேத வேதாளம் ஓடுமே நவக் கிரக தோஉஷ மெல்லாம்
மாட்டில்லா நோயோடு பேய் பிசாசு மாரனுமே செய்ய வென்றுலக் தகட்
டில்
தேட்டியே தேசியுட ரெத்தம் வாங்கி திரண்டிருக்கும் பிறங்காலில் சடையுங்
கட்டி
ஆட்டியே அயங் காயர் தன்னைத் தொட்டு அரைத்துமே பூச உச்சாடனமு மாமே.

370. ஆமென்ற அயங் காயக் குருவைக் கேளு அடியார்கள் கடை தனிலே அயங்காய
மென்பார்
தாமென்ற அயங்காயப் பேரு கேளு தலைப் பிள்ளை நஞ்சோடு சமூலம் வாங்கி
ஆமென்ற வசம்புள்ளி சடுக்காயு அரைத்து மேல்ப் பூசி நீ அறையக் கேளு
போமென்ற மேல்ப் பூசி உலரச் செய்து பொடியாக்கிப் பேய்ச் சுரையின்
குடுக்கையிலே யடையோ.

371. அடைத்திட்ட தில்லாட்டால் தயிலம் வாங்கு அசுக்கிர தான் நேத்தி மெத்த
அப்பா கேளு
அடைத்திட்ட முந் கருவும் பிந் கருவும் பாரு ஆகாச வெளிக்குள்ளே அமைத்த
தப்பா
கடைத் திட்ட ரெண்டு மொன்றாய் ரேசித்தே தான் கருவாகி உருவாகிக் கடுங் கு
ருலாச்சு
பிறந்திட்ட பிண்டமப்பா அயங்காயந்தான் பேசாதே வெளி திறந்த சொல்லார்
சித்தர்
நடைத் திட்ட உருவாலே வாதமாச்சு நவகோடி சித்த மதிலாட்டலாச்சே.

372. ஆமென்ற வாய்ப் பேச்சு சொன்னதிலென்ன ஆராய்ந்து ஒவ்வொன்று யறிய
வேணும்
நீச்சென்ற நீச்சறிந்து நிலைக்க வேணும் நிலையாட்டால் வெறும் பேச்சு
நிசமாகாது
தாச்சென்ற சரக்கு பினமறிய வேணும் சத்துருவ மித்துருவ மறிய வேணும்
கூச்சென்ற வாதத்தில் கோசு பீசம் குறிப்பறியா மட்டைகள் தான் குருடரப்பா
கூச்சென்ற குரு முறையும் செந்தூரத்தினமும் குப்பி முறையுடத் திட்டம்
யெரிப்புத் திட்டம்
காச்சென்ற குகைத் திட்டம் ஊத்து முறை வரிசை கை முறையாய் அஞ்சு நீர்க்
கருவைக் கொள்ளே.

373. கருவென்ன கட்டு மித்திரம் உருக்கினத்துக் கெல்லாம் கருதியே பழச் சாறு
முலைப்பால் வானீர்
குருவான கன்னமொடு நீர்த்தினக்கக் காதி கொடுஞ் சுக்கு வெள் கருவும் சுண்ணும்பு
நீரும்
திருவென்ன விட்டரைக்கச் செயமா மெத்த செந்தூரத்தினங் கேளு சூதங்
கெந்தி
அருவென்ன மால் தேவி அப்பிரகந்துத்தம் அழகான சீலையோடு வெடியுப்பேது
அருவென்ன யிலை யேயும் செந்தூரத்தாதி அல்லாட்டால் செந்தூர மாகா
தென்னே.

374. ஆகவே செந்தூர வைப்புக் கெல்லாம் அப்பனே குப்பியுட முறையைக் கேளு
போகவே பூனீரு குப்பி வாங்கிப் புகழாகக் கழுத்து வரை சீலை செய்து
யேகவே குப்பியுட கழுத்து மேல்க் கழுத்தில்லிரு விரற் கடை யளவு செய்து
நேகவே சீலை செய்த மட்டும் போக நீண்டிருக்கும் குப்பி வாயுடைக்கக் கேளு.
தோகையே தீ நாலி கத்தி காட்டி சுண்டிடவே கத்தரிப்பாய்த் துண்டித்துப்
போமே.

375. போமென்ற குப்பிக்கு அரை வாசி மருந்து போட்டு நீ புதைச் சட்டி தன்னில்
கேளு
தாமென்ற மணல் நெம்பி அடி நடுவிலுந் தள்ளி சட்டியில் நால் விரற் கடை
தான் மணலையிட்டு
ஆமென்ற குப்பியதின் மேலே வைத்து அதின் மேலே மணல் கொட்டிய முத்தி
நன்றாய்
யேமென்ற குப்பியுட கழுத்து மேலே யிரு விரற் கடை தெரிய விட்டு மூடி
கோமென்ற தளசெந்தூர மாகுல் குப்பி வாய் முடாதே சிலாகை யிட்டுப்
பாரு
வாமென்ற சிறு செந்தூரமாகுல் வளம்பக் கல் கொண்டு குப்பி வாயை மூடே.

376. மூடியே வாலுகையின் மேலே யேத்தி முசியாதே ஒரு விறகு தீபம் மாகும்
நாடியே யிரு விறகு சுமலமாகும் நால் விறகு காடாக்கினியே யாகும் பாரு
சாடியே விறகிட திட்டங் கேளு சானளம் ரெண்டு விரல் கனத்தியாகும்
காடியே புடத் திட்ட மென்ன கேளு காட்டெருவாம் புட மொன்று காடை
யாகும்

காடியே * புடத்திட்ட * செ

~~விருக்குமே விருப்பனைப் போல் பக்கித் தொக்கு நீள வெரை வெல்லாம் வெல்வேரே குளிச~~

~~நூக்குமே செய்ய நீ~~

பாடியே மூன்றெழுத்தான் கவுதாரிப் புடமாம் பத்தெடுத்தான் குக்குடமாம் பிரிந்து கேளு
நாடியே அன்பதெரு ஏனமாம் நலமான ஈரெழுத்தான் கெசபுடமு மாமே.

377. புடமான குகை திட்டம் சொல்லக் கேளு புகழான கழுதை லத்தி யிருப்புக் கூட்டம்
வடமான உமிக் கருகல் சுட்ட சாம்பல் வகைக்கிரெண்டு பலமெட்டு களி மண்ணிரெட்டு
குடமான கடுக்காயுங் கசாயமிட்டு குளிரவே யாட்டி மை போல் குகை தான் பண்ணு
படவான மேல் சில்லு மதிலே பண்ணு மற்ற குகை உருக்கினத்தில் பிஞ்சு போமே.

378. பலமாகும் சுன்ன மென்ற நுறைகட்கெல்லாம் பேசுறேன் வத்து சுள்ளி குகையைக் கேளு
அலமான நண்டு நத்தை சங்கு சிப்பி அண்டோடு யிவை வுயிர்நுங் கல்வத்திட்டு
யிலமான வரகம் பால் தன்னாலாட்டி பில்லை தட்டிக் காய வைத்துப் புடத்தைப் போடு
நலமான சுக்கும்பாரம் கல்வத்திட்டு நாட்டி யரை வெள் கருவும் வரகம் பாலும்
நலமான அக்கம்பு நீருமிட்டு நலக் கரைத்துக் குகையின் மேல் சில்லுஞ் செய்து
பலமானத்தில் வைத்துப் புடத்தைப் போடு பலத்தமனேசக் சுன்னமாகும் பாரே.

379. பாருமே யுத்த முறை சொல்லக் கேளு பாங்கான சரக்கு வகைக்கோர் கருத்தி
ஊருமே உருக்கினந்தான் கருத்தி ரெண்டு உத்தமனே சத்து வகை நுருகதிலு
சாரு நீ வர்ப் பசியுங் கார்த்திகையு மார்களி தையோடு உருக்கினத்தில் சத்திறங்கு காலம்
பாரு நீ மாசியொடு பங்குனி சித்திரையும் பாங்கான வைய்யாசி ஒரு முடிக்குங் காலம்
சேரு நீ ஆனியொடு ஆடி ஆவணியும் சிறப்பான புரட்டாசி செந்தூரமாமே.

380. மாமென்ற மார்களி தையோடு மாசி மாசற்ற செய்நீராம் மகிழ்ந்து கேளு
போமென்ற உருக்கினத்தில் குடோரி கேளு பூவோடு மால் தேவி சவுக்காரங் குக்கில்
வேமென்ற அண்டோடு வெங்காரங் கட்டி வெடியுப்பு செய் நீராலாட்டி வில்லுகாமென்ற புடம் எடுத்துக்
கல்வத்திட்டுப் பின் பின் வரகம் பாலும்
ஆமென்ற எலி ஆலம் பாலுங் கூட்டி அரைத்து முன் போல் புடம் போட்டு எடுத்துக் கொண்டு
வேமென்ற யேரண்டெண்ணை வாத் தவளை நெய்யும் விட்டரைத்துக் கெடியாய் வைத்துக் கொள்ளே.

381. வைத்துமே சத்து வகை கறடு தட்டில் மைந்தனே குடோரியிட்டு எருமைக் கொம்பால்
உய்த்துமே கிண்டு நீ கறமசங் கனத்து உருகியே வெள்ளி போல் கல் விட்டால்
கய்த்துமே கருவெல்லாம் வெள்ளியாச் சொன்னேன் கருவாளி யாகுக் கால் கண்டு பாரு
செய்த்துமே சித்தருட பாடலெல்லாம் திரட்டியே ஆயிரத்தில் தெளிவாய்ச் சொன்னேன்
பய்த்துமே ஆயிரத்தைக் குறித்து நன்குயப் பாடினேன் முன்னூறு சில வர்னமப்பா
உய்த்துமே கருவெல்லாம் வெட்ட வெளியாக ஒளியாமல் சத்தியமாய்ச் சொல்லிப் போட்டேன்
கய்த்துமே சிறு பிள்ளை முதலா யுள்ளி கருவறியா மூடர்களும் காணுவாரே.

382. வாறுன கருவெல்லாம் வெளியாய்ச் சொன்னேன் வாதமொடு வயித்தியமும் வகையாய்ச் சொன்னேன்
கூறுன செந்தூரங் களங்கஞ் செய்நீர் ஒரு முடிக்கும் வகையெல்லாம் குறியாய்ச் சொன்னேன்
வாறுன அஞ்சனமுந் திலதஞ் சொன்னேன் வசியமொடு அளப்பு விதமுத மாரணமுஞ் சொன்னேன்
ஆறுன ஞானமொடு வாசியோகம் அடங்கி நின்ற கருக்கிடை கூத்திரந்தான் முற்றே.

நூல் முற்றும்.

**

<u>மூல வாய்வுக்கு மகா ஏலாதி சூரணம்</u>:-

ஏலம், சன்ன லவங்கப் பட்டை, அதிமதுரம், சிறுநாகப்பூ, திப்பிலி, வெட்டி வேர், விலாமிச்ச வேர், கொத்தமல்லி, பருத்திக் கொட்டைப் பருப்பு, கோரைக் கிழங்கு, சந்தனச் சிராய், தாமரை வளையம், நெல்ப் பொரி, கிரந்தித் தகரம், கைகநீர் முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், சாதிக்காய், சாதிபத்திரி, சடாமாஞ்சி, நிலப்பனைக் கிழங்கு மாதளையோடு வில்வ ஓடு விளா ஓடு, நன்னாரி வேர், மலைதாங்கி வேர், மஞ்சள் இவையெல்லாம் வகைக்கு விராகனிடை.க, இடித்துச் சூரணம் பண்ணிச் சரி யாகச் சீனி சர்க்கரை கலந்து கொள்ளவும். அநுபானம் பசுவின் நெய்யில் மூவிரல் கொண்டு சாப்பிடவும்.

****

முற்றும்

****

சு.ச: 9.1.64.

Verification Completed
[signature]
2/4/64